உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுபர் 31 | கதிர் 278 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 14, செவ்வாய்க்கிழமை 30.08.2016

காணாமற்போனோரின் உறவினர்கள் இன்று முல்லையில் பேரணி

முல்லைத்தீவு, ஓக. 30

பன்னாட்டு காணாமற் போனோர் தினமான இன்று காணாமற்போனவர்களை மீட்டுத் தருமாறு கோரி முல்லைத்தீவில் பேரணி ஒன்று இடம்பெற உள்ளதாக மாவட்டத்தைச் சேர்ந்த

>> 23ஆம் பக்கம்

மருத்துவரின் உயிரை பறித்தது தனியார் பஸ்

கோப்பாய் சந்தியில் நேற்று மாலை துயரம்

யாழ்ப்பாணம், ஓக. 30

மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் மருத்துவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் சந்தியில் நேற்று மாலை விபத்து இடம்பெற்றது. கரவெட்டியைச் சேர்ந்த சென்பரன் (வயது - 37) என்ற மருத்துவரே உயிரிழந்தார். விபத்தில் படுகாயமடைந்த மருத்துவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும், அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

மருத்துவர் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் பணிக்காகச் சென்றுகொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் பஸ் வடமராட்சி நோக்கிச் சென்றது. இதன்போதே விபத்து இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தனியார் பஸ் முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோதே, விபத்து இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணையைக்

>> 23ஆம் பக்கம்

கடற்படையின் பஸ் மோதி முதியவர் பரிதாபச் சாவு

காங்கேசன்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

கடற்படைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் படுகாயமடைந்த வயோதிபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கே.கே.எஸ். வீதி - வீமன்காமம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் விபத்து இடம்பெற்றது. தெல்லிப்பழை தபால் நிலைய வீதியைச் சேர்ந்த வி.சற்குணராசா (வயது - 60) என்பவரே உயிரிழந்தார். படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கடற்படை பஸ்ஸின் சாரதியைக் கைதுசெய்ததாகத் தெரிவித்தனர். சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,26,ரி)

நீதிவேண்டும்

காணாமற்போனோர் தினத்தில் உறவுகள் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 30

போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் குடும்பத்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே எங்களது முக்கிய நோக்கம். எனவே இலங்கை அரசு ஏற்படுத்தவுள்ள காணாமற்போனோர் அலுவலகத்தில் பன்னாட்டுப் பிரதிநிதிகளை உள்ளடக்குவது அவசியம்.

இவ்வாறு வலியுறுத்துகின்றனர் காணாமற்போனவர்களின் உறவுகள்.

அதிகளவானோர் காணாமல் ஆக்கப்பட்ட பகுதிகளிலேயே காணாமற்போனோர் அலுவலகம் அமைய வேண்டும் என மீண்டும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்பட்டவர்களுக்கான பன்னாட்டு தினம் இன்றாகும்.

இதுதொடர்பில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்த் தாயக உறவுகளுக்கான அமைப்பின் தலைவி என்.ஆசா தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாளாந்தம் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கின்றனர். கணவன் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் பெண்கள் வாழ்க்கையில் பெரும் துயரங்களை அனுபவிக்கின்றனர். வாழ்வாதாரத்துக்காக அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். பற்பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஆணைக்குழுக்களும், செயலமர்வுகளும் அவர்களின் காயங்களை மீண்டும் கிளறிவிடுகின்றன.

கடந்த காலங்களில் காணாமற்போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு முயற்சிகள் இடம்பெற்றன. இதனை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம்.

>> 06ஆம் பக்கம்

11 கிராமங்களை இராணுவம் விடாது

விவரம் தெரிவித்து 171 குடும்பங்களுக்கு இழப்பீடு தருவதாகக் கடிதம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 30

வலி. வடக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள 11 கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

தேசிய பாதுகாப்புக் காரணமாக அந்தக் காணிகள் விடுவிக்கப்படமாட்டாது என்றும், அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு பொருத்தமான இழப்பீடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான கடிதம், யாழ். மாவட்டச் செயலகத்தினால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 171 குடும்பங்களுக்கு நேற்றைய தினம் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. கடிதங்களைக் கொண்டு சென்ற கிராம சேவையாளர்களுக்கு நலன்புரி நிலைய மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு கடிதத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டோம் என்று காட்டமாகத் தெரிவித்தனர்.

ஐ.நா. பொதுச் செயலர் இலங்கைக்கு நாளை வருகை தரவுள்ளார். இந்த நிலையில் நலன்புரி நிலையங்களை முழுமையாக மூடுவதற்கு கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதற்கு அமைவாக முதல் கட்டமாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணியில்லாத குடும்பங்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்படும் என்று கடிதம் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, விரைவில் விடுவிக்கப்படவுள்ள 460 ஏக்கர் காணியினுள்ளும் உள்ளடங்கும், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணி உரிமையாளர்களுக்கு உங்கள் காணிகள் விடுவிக்கப்படும் என்ற கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் எஞ்சியுள்ள மக்களுக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தங்களுடைய காணி தேசிய பாதுகாப்புக் காரணமாக தற்போது மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட முடியாது. காணிக்குரிய பெறுமதி இழப்பீடாக வழங்கப்படும் என்ற கடிதம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. நலன்புரி நிலையங்

>> 04ஆம் பக்கம்

முச்சந்தி முரளி

இவையெல்லாம் தாம் ஆட்சிக்கு வந்தால் காணிகளைத் தாறண்டவையள்...

சந்திப்பது பற்றி சிந்திப்போம்

விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

ஐ.நா. பொதுச் செயலாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் விரும்பினால் இணைந்து கொள்ளுமாறு கட்சியின் தலைவர் அழைப்பு விடுத்தார். அதில் கலந்து கொள்வதா என்பது பற்றி முடிவு எடுக்கவில்லை. சந்திப்பது பற்றி சிந்திப்போம்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஐ. நா. பொதுச் செயலாளர் பான்கீ

>> 23ஆம் பக்கம்

பொலிஸ் காவலிலிருந்த சந்தேகநபர்கள் இருவர் தப்பி ஓட்டம்

கொள்ளையடித்த நகைகள் தொடர்பான விசாரணையின் போது யாழ். நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

கொள்ளையடித்த குற்றச்சாட்டில் நகைகளுடன் கைதுசெய்யப்பட்டவர்களில் 2 பேர் கைவிலங்குடன் பொலிஸாரிடமிருந்து தப்பித் தலைமறைவாகிவிட்டனர். ஒரு தொகுதி நகைகள் யாழ்ப்பாணத்தில் உள்ளதாகவும், அதனைக் காட்டுவதாகவும் கூறி யாழ்.நகருக்கு வந்தபோதே இருவரும் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ். நகரில் பரபரப்பை ஏற்படுத்தியது.

வரணிப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை வீடு புகுந்த கொள்ளையர் அங்கிருந்த வயோதிபர்களிடம் கதைகேட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு யாராவது உள்ளனரா என்று முதலில் விசாரித்து அந்த இடத்தில் நடமாடியுள்ளனர். வீட்டிலுள்ளவர்கள் எதிர்பாராத நேரம் அவர்களது வீட்டுக்குள் நுழைந்து தனித்திருந்த இரு முதியவர்களையும் கட்டிவைத்து கொள்ளையிட்டனர். நகைகள் பணம் என்பன அவ்வாறு கொள்ளையிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காரில் சென்றிருந்த 4 பேர் கொண்ட கொள்ளையர் குழுவே அவ்வாறு கொள்ளையிட்டது.

அவர்களே சந்தேகத்தில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர். அவர்கள் 4 பேரிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதன்போது நகைகள் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. ஒரு தொகுதி நகைகளை யாழ்.நகர நகைக்கடை ஒன்றில் விற்றுள்ளதாகவும், அதன் பெயர் தெரியாது என்றும் கூறியுள்ளனர். அதனால் 4 பேரையும் கைவிலங்கிட்டு வாகனத்தில் ஏற்றி யாழ்.நகருக்குக் கொண்டு சென்றுள்ளனர் பொலிஸார். நகரில் கடையைக் காட்டுவதாகக் கூறிய போதே அவர்களில் 2 பேர் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பியோடியவர்கள் தேடப்படுகின்றனர். மற்றைய 2 பேரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் சென்று கொள்ளையிட்ட சம்பவங்கள் சில மாதங்களுக்கு முன்னரும், சில வாரங்களுக்கு முன்னரும்

>> 04ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிறுத்துங்கள் ஆலயக் காணியில் விகாரை அமைவதை

வடக்கு மாகாண சபை தீர்மானம் ஜனாதிபதிக்கு

யாழ்ப்பாணம், ஓக. 30

கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் ஆலயக் காணியில் நிறுவப்படும் விகாரையின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கு மாகாண சபையின் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 58 ஆவது அமர்வில், ஆளும் கட்சி உறுப்பினரால் கொண்டு வரப்பட்ட மேற்படி விடயம் தொடர்பான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதில், கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் கோயிலுக்கு உரித்தான வளாகத்தில் புத்த கோவில் நிர்மாணிக்கப்படுவது தொடர்பாக ஆழ்ந்த கவலை வெளியிடுகின்றோம். கோயிலுக்குச் சொந்தமான 4.4 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து விகாரை நிர்மாணிக்கப்படுகின்றது. இது வெளிப்படையான நில ஆக்கிரமிப்பு. அத்துடன் மத நல்லிணக்கம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கு முற்றிலும் எதிரானது. இதில் தலையிட்டு நிர்மாண வேலைகளை நிறுத்தி ஆலய நிர்வாக சபையிடம் நிலத்தை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தினால், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

வலி.வடக்கு பிரதேச செயலரை இடமாற்றம் செய்யக்கோரி மனு

யாழ். மாவட்டச் செயலரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம் ஓக. 30

வலிகாமம் வடக்கு பிரதேச செயலரை இடமாற்றம் செய்யக்கோரி குறித்த பிரதேச செயலர் பிரிவு மக்களின் கையொப்பங்கள் அடங்கிய மனு ஒன்று யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் நேற்று முற்பகல் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவில், தற்போது கடமையில் உள்ள பிரதேச செயலர் பக்கச்சார்பாகச் செயற்படுவதுடன் ஊழல் மோசடியிலும் ஈடுபடுவதால் உடனடியாக அவரை இடமாற்றம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

ஒருவர் தனிப்பட்ட ரீதியில் என்னிடம் வந்து உதவிகள் செய்து தருமாறு கோரியிருந்தார். எதனையும் சட்டத்துக்கு முரணாகச் செய்யமுடியாது. இந்த நிலையில் என் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது என்று குறித்த பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மனுக் கொடுத்தவர்களிடம், அதற்கான ஆதாரங்களைத் தாருங்கள் என்று மாவட்டச் செயலர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-ரி1-ரி7)

மாணவர்களைத் தாக்கிய குற்றத்தில் அதிபர், மாணவர்களுக்குத் தண்டம்

பாடசாலை அதிபருடைய அலை பேசியைக் காணவில்லை என்று தெரிவித்து கீழ் வகுப்பு மாணவர்களை தாக்கிய மேல் வகுப்பு மாணவர்கள் மற்றும் பாடசாலை அதிபருக்குத்தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிவான் மன்று தீர்ப்பு வழங்கியது.

ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கடந்த வருடம் நடைபெற்ற சம்பவத்தை அடுத்தே நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தனது அலைபேசி தொலைந்துள்ளதாகத் தெரிவித்த அதிபர், அதனைத் தேடித்தருமாறு கூறி, விசாரணைகளை மேற்கொள்வதற்காக தரம் 9இல் கல்வி கற்கும் 5 மாணவர்களிடம் கேட்டார். அந்த மாணவர்கள் ஐவரும் தரம் 6இல் கல்வி கற்கும் மாணவர்களை அறை ஒன்றினுள் அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் போது, மேல் வகுப்பு மாணவர்கள் கீழ் வகுப்பு மாணவர்களை கடுமையாகத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தாக்குதலுக்கு இலக்கான மாணவர்கள் காது பகுதியால் நீர் வடிந்த நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அத்தோடு கிளிநொச்சிப் பொலிஸாரிடமும் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மற்றும் கல்வி அதிகாரிகள். குறித்த பாடசாலையினுடைய அதிபருக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்குத் விசாரணைகளின் பின்னர் நேற்று தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது மாணவர்களை தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்ட மேல் வகுப்பு மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு செலுத்துமாறும், சம்பவத்துக்கு காரணமான பாடசாலை அதிபரை ரூபா 10 ஆயிரம் தண்டப்பணமாக செலுத்துமாறும் கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா உத்தரவிட்டார். (வ-21)

மயிலிட்டி மீள்குடியேற்றம் வியாழனன்று ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 30

மயிலிட்டி மீள்குடியேற்றம் சம்பந்தமாக நாளைமறுதினம் வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மயிலிட்டிமீள்குடியேற்றக் குழுத்தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் வியாபாரிமூலையில் அமைந்துள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பி.ப 3 மணிக்கு நடைபெறும்.

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தமது மீள்குடியேற்றம் குறித்து அவசரமான முடிவுகள் எடுக்க வேண்டி உள்ளன. இந்தக் கலந்துரையாடலில்இடம்பெயாந்த மக்களை கலந்து கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (த-ரி)

கூட்டுறவுப் பணியாளருக்கு விசேட விடுமுறை

யாழ்ப்பாணம், ஓக. 30

நல்லூர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நல்லூர், நீர்வேலி, யாழ்ப்பாணம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகச் சங்க நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

வழமையாகவே தேர்த் திருவிழாவன்று சங்கப் பணியாளர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டு வருகின்றது. இம்முறையும் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதற்காகச் சங்கங்கள் மேலதிகமாக வேறு நாளில் திறக்கப்படமாட்டாதெனவும் கூறப்பட்டுள்ளது. (த-17)

சாரணர் நூற்றாண்டை முன்னிட்டு முத்திரை வெளியிடும் நிகழ்வு

யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் நூற்றாண்டை முன்னிட்டு முத்திரை வெளியீட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பாடசாலை அதிபர்கள், சாரணர்கள், பொறுப்பாசிரியர்கள், சாரணர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.சாரணர்சங்க ஆணையாளர் செ.தேவரஞ்சன் கேட்டுள்ளார். (ற-4)

பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் சிக்கல்; தவறான முடிவுக்குச் சென்ற மாணவன்

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சியில் வசிக்கும் மாணவன் ஒருவன் தவறான முடிவுக்கு முயற்சித்து உறவினர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்திய நலன்புரி முகாமில் பிறந்து தாயகம் திரும்பிய நிலையில், பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு சட்டச் சிக்கல் என கூறியதனாலேயே மாணவன் தவறான முடிவுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, விசுவமடுவைச் சேர்ந்த செந்தமிழ்செல்வன் அன்புச்செல்வன் (வயது-16) என்ற மாணவனே இவ்வாறு நஞ்சருந்திய நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

போர் காரணமாக மாணவனின் பெற்றோர் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்று அகதி முகாமில் வாழ்ந்தனர். 2000ஆம் ஆண்டில் பிறந்த குறித்த மாணவன் சகிதம் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான காலத்தில் நாடு திரும்பி விசுவமடுவில் வசித்தனர். மாணவன் இன்றுவரை பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் சட்டச் சிக்கலை எதிர்கொண்டான்.

இந்தியநலன்புரிமுகாமில்பிறந்து தாயகம் திரும்பிய நிலையில் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான சட்டச் சிக்கல் எனக் கூறியதனால், மாணவன் கல்வி கற்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கும், தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கும் மாணவனிடம் பிறப்புச் சான்றிதழ் கோரப்பட்டது.

இதன்போது குறித்த சான்றிதழ் இல்லையென மாணவன் கூறியதனால், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதில்உள்ள இடையூறுகளை கூறி பரீட்சையில் தோற்ற முடியாத சூழலே ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

இதனால் அந்த மாணவன் நேற்றைய தினம் வீட்டினில் இருந்த தந்தையார் தோட்டத்திற்குப் பயன்படுத்தும் கிருமி நாசினியை அருந்தி தவறான முடிவுக்குச் சென்றார். எனினும் உடனடியாக வீட்டாரினால் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து நாடுதிரும்பியவர்களின் பிள்ளைகளுக்கான பிறப்புப் பதிவு தொடர்பில் வடக்கு மாகாணப் பதிவாளர் நாயகம் பிரபாகரன் தெரிவித்தாவது:

வெளிநாடுகளில் பிறக்கும் பிள்ளைகளுக்கான பிறப்பை அயலுறவு அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ள முடியும். ஆனால் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து நாடு திரும்புகின்றவர்களுக்கான பிறப்புப் பதிவு மட்டும் பிறப்பு பதிய வேண்டியவர் இந்தியாவில் பிறக்கும்போது வழங்கிய ஆவணம் மற்றும் அகதியாக நாடு திரும்பிய பதிவு என்பவற்றுடன், தாய், தந்தை ஆகியோரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் என்பனவற்றை பிரதேச செயலகத்தில் முன்வைப்பதன் மூலம் பிறப்பைப் பதிவு செய்துகொள்ள முடியும் - என்றார்.

(வ -10)

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு ஒதுக்கிய நிதி கிடைப்பதில் சிக்கல்

ஆயிரம் மில்லியன் ரூபாவில் இந்த ஆண்டு 50 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்படுமாம்

யாழ்ப்பாணம், ஓக. 30

தெல்லிப்பழை வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவின் சீரமைப்புக்கென நடப்பாண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கிய ஆயிரம் மில்லியன் ரூபாவில், 50 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கும் சாத்தியமுள்ளதாக திறைசேரியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவின் சீரமைப்புக்கென 1500 மில்லியன் ரூபா செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான வேண்டுகையும் சுகாதார அமைச்சிடம் முன்வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் நடப்பாண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் தெல்லிப்பழை வைத்தியசாலையின் பணியை மேற்கொள்ளுவடிக்கை எடுத்தபோதிலும், கடந்த ஜூலை மாதம் வரையில் எந்த வித நிதியும் திறைசேரியில் இருந்து வடக்கு மாகாண திறைசேரிக்கு விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பில் உரியவர்கள் தொடர்பு கொண்டதையடுத்து, தற்போது இந்த ஆண்டில் 50 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்படும் என திறைசேரி உறுதியாகத் தெரிவித்தமையினால், வைத்தியசாலையில் எதிர்பார்த்த எந்தவொரு அபிவிருத்தியையும் அடைய முடியாதசூழலேகாணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (வ -10)

தந்தை கொடுத்த அறையினால் கிழிந்தது மகளின் செவிப்பறை

தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

பெற்றோரின் சண்டையை நிறுத்த முயன்றபோது தந்தை அறைந்ததில் மகளின் செவிப்பறை கிழிந்து இரத்தம் வழிந்தது.

இந்தச் சம்பவம் தென்மராட்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தந்தை வேறொரு திருமணம் செய்து பிரிந்து நீண்ட காலமாக வேறு இடத்தில் வசித்து வந்துள்ளார். நேற்றுமுன்தினம் தந்தை வீட்டுக்கு வந்ததாகவும், அவரை தாயார் ஏசியதாகவும், இதனால் கைகலப்பு இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது.

இந்தக் கைகலப்பைத் தடுக்கச் சென்றவேளையிலேயே மகளின் காதில் தந்தை அறைந்ததாகவும், இதனால் செவிப்பறை கிழிந்தது எனவும் மருத்துவப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில் காவடிகள் எடுப்போர் பின்பற்ற வேண்டிய நடைமுறை

நல்லூர் ஆலயத்தின் தேர், தீர்த்தத் திரு விழாக்களில் காவடிகள் யாவும் ஆலயத் தின் பின் வீதியான வடக்கு வீதியூடாக குபே ரன் கோபுர வாசல் வரைக்கும் அனுமதிக் கப்படும். இந்தக் காவடிகள் பின்னர் குபே ரன் கோபுரப் பக்கமாக கோயிலின் தெற்கு வீதியூடாக கைலாச பிள்ளையார் கோயிலை அண்டிய பகுதிக் குச் செல்ல அனுமதிக்கப் படும். இவ்வாறு மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

நாளை புதன்கிழமை நல்லூர் தேர்த் திரு விழாவும் நாளை மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். இந்த நாள்களில் பெருமளவு பக்தர் கள் ஆலயத்தில் கூடுவதால் காவடி களை ஆலய வளா கத்துக்குள் உட் செல்லுவிடுவது நெரி சலை ஏற்படுத்தும். காவடிகள் எடுப் போர் மேற்கண்ட நடைமுறையைப் பயன்படுத்தி ஒத் துழைப்புத்தர வேண் டும் என்று ஆணை யாளர் கேட்டுள் ளார்.

தேர், தீர்த்தத் திரு விழாக்களில் குடா நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் நூற்றுக் கும் மேற்பட்ட பக்தர் கள் துலா மற்றும் பறவைக் காவடிகள், செடில் காவடிகள் எடுத்து நேர்த்தி யைப் பூர்த்தி செய் வது வழக்கம்.

(ற-17)

கண்ணீர் அஞ்சலி

இராசையா சிவபாலசிங்கம்



நேற்று (29.08.2016) திங் கட்கிழமை சிவபதமடைந்த அன் னாரின் பிரிவால் துயருற்றி ருக்கும் அவரதுகுடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்,
பலாலி வீதி,
திருநெல்வேலிசந்தி.

ஸ்ரீ பேப்பர் மார்ட்,
338, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நீ என்னால் மறக்கப்படுவதில்லை
எசாயா 44:21

திருமண அழைப்பு

தேவனுடைய திருபையினாலே எதிர்வரும் 31 ஆம் திகதி ஆவணி மாதம் 2016 ஆம் ஆண்டு (31.08.2016) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கல்வாரி பூரண சுவிசேச தேவாலயம் 89, பிறவுண் றோட், கொக்குவில்

எமது புதல்வன்
வணக்கத்திற்குரிய
வீரகத்தி கனராஜா
நிறைவேற்று போதகர் வேதாகம ஆசிரியர்
கல்வாரி பூரண சுவிசேச தேவாலயம்
கொக்குவில்

எமது புதல்வி
சதாசிவம்
ஸ்டெலா ஞானலோஜினி
உபஅதிபர்
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை
மானிப்பாய்

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து தேவ சமூகத்தில் நடைபெறும் திருமண ஆராதனையில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிப்பதோடு அதனைத் தொடர்ந்து இராஜஸ்வரி மண்டபம் கோண்டாவிலில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி வீரகத்தி ஆசை
(சுசிலா குடும்பம் - சிங்கப்பூர் குடும்பம்)
திரு P. ராஜி குடும்பம் (டென்மார்க்)

திரு.திருமதி சதாசிவம் குடும்பம்

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இருவீட்டார் அழைப்பு

AFTER A/L.....

VACANCY இலங்கையில் முன்னணி வகிக்கின்ற NO.01 நிறுவனமான G.M. International (pvt) ltd

இற்கு துடிப்பும், கடினமாக உழைக்க கூடிய ஆண், பெண் இருபாலாருக்கும் குறுகிய காலத்தில் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நினைப்பவர்களுக்கும் மேலதிக கல்வியை தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு.

வயதெல்லை 18 - 30
தகைமை - O/L, A/L
அனுபவம் அவசியமற்றது.

பயிற்சியின் போது 18,000/= - 25000/=
பயிற்சியின் பின் 40,000/ இற்கு மேல்

தொடர்பு - 077 2217308 / 077 9994807

*Administration
*Customer Service
*SuperVisor
*Marketing Trainee
*Management Trainee

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு CEYLON ART CREATION
K.T பிரசாத் பெருமையுடன் வழங்கும் தென் இந்திய விஜய்
தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி

இன்று மாலை 7.00 மணிக்கும்
நாளை மாலை 3.00 மணிக்கும்

இடம்: நல்லூர் முருகன் கோவில் பின் வீதியும் சங்கிலியன் வீதியும் இணையும் சந்தியில் அமைந்திருக்கும் திறந்த வெளியரங்கில்

நன்கொடை நுழைவுச்சீட்டுக்கள்
300/= / 500/= / VIP
அரங்க நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

ஏற்பாடு:
Ceylon Art Creation
077 550 4910
077 480 3020

Sponsored by ANDRA PRINTERS
The Leading Printers in JAFFNA
021 221 7279 / 077 6622981

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers... Transforming Lives...

CERTIFIED QUALITY ISO 9001 MANAGEMENT SYSTEM
18 YEARS



5 Days
100 % Free workshop
Certificate in
Career Development
@ BCAS Jaffna Campus
05 - 09 September 2016
9.00 AM - 04.00 PM

முற்றிலும் இலவசம்

05 நாள்
தொழில்வாண்மை விருத்திச்
செயலமர்வு — 2016

2016 ம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதியவரா?
ஆம் எனில் நீங்களும் இதற்கு தவறாமல் விண்ணப்பிக்கலாம்.

FREE !!!
Participation certificate,
food & refreshment
will be served.

For Registrations

CALL/SMS	077 710 2131 / 077 960 3753
VISIT	#.16 POINTPETRO ROAD, JAFFNA

Hurry !!! Hurry !!! Only Limited Seats Available !!!
Start where you are and move towards who you want to be !

Ranked as No.1 Higher Education Provider (Private) - Survey by LMD

HOTLINE: 021 221 9910
www.bcas.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேலைவாய்ப்பு

2000/= , 3000/= கொடுத்து ஏஜன்சிகளிடம் ஏமாற வேண்டாம். நம்பிக்கையுடன் வாருங்கள். இதோ உண்மையான சம்பளம். ஹெல்பீம் - 25,000/=, டொபி, சொக்லட் 28,000/=, சொசேஜஸ் - 33,000/=, மெட்றஸ் - 35,000/=, ஈஸம் பிஸ்கட் 40,000/=. நாள், கிழமை, மாதச் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். உணவு, தங்குமிடம் இலவசம்.

077 456 9222

வேலையாள்கள் தேவை

01. மேசன் (ரூ. 1300 - ரூ. 1500)
02. வெல்டர் (ரூ. 1200 - ரூ. 1500)
03. தச்சுவேலை (ரூ. 1200 - ரூ. 1500)
04. பெயின்ரர் (ரூ. 1200)
05. உதவியாளர்கள் (ரூ. 1000 - ரூ. 1200)

தொடர்பு: 077 724 5399

வேலையாள்கள் தேவை

எமது ஸ்ரூடியோவுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தமது சுயவிவரக்கோவையுடன் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

பேபி போட்டோ
இல.243, பலாலிறோட், கந்தர்மடம்.

வேலைவாய்ப்புக்கள்

இம்முறை A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

- Accountant (Trainee)
- Graphic Designers
- Recepionist
- Nurse
- Supervisors (Trainee)
- IT Excecutive
- Sales Rep
- Part time jobs

நீங்கள் விரும்பும் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுங்கள்.

WINSTAR JOB BANK
#106,தபாற் பெட்டிச்சந்தி,
திருநெல்வேலி. 021 320 2789

படகு ஓட்டிகள் இருவர் கைது

சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்புக் கவசம் வழங்காது படகில் ஏற்றி ஆழ் கடலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த படகைத் தடுத்துள்ளதோடு, அதன் ஓட்டிகள் 2 பேரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொண்டமனாறு அக்கரை சுற்றுலாக் கடற்கரையில் இருந்து குறித்த படகில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி அவர்கள் ஆழ் கடலுக்குச் சென்று வந்துள்ளனர். அதற்காக ஒரு பயணியிடமிருந்து 100 ரூபா அறவிடப்பட்டுள்ளது. அவ்வாறு சுமார் 50 பயணிகளை பாதுகாப்பு அங்கி வழங்காமலேயே ஆள் கடலுக்குக் கூட்டிச் சென்று திரும்பியுள்ளனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

அந்தக் குற்றச்சாட்டில் அக்கரையைச் சேர்ந்த 2 பேர்கைதுசெய்யப்பட்டனர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,10)

11 கிராமங்களை....

களிலுள்ள சுமார் 171 குடும்பங்களுக்கு இந்தக்கடிதம்விநியோகிக்கமுடிவுசெய்யப்பட்டது. மாவட்டச் செயலகத்தினால் இதற்குரிய கடிதம் தயாரிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள பிரதேச செயலர் கள் ஊடாக, கிராம சேவையாளர்களிடம் கையளிக்கப்பட்டது. கிராம சேவையாளர் கள் இதனை மக்களிடம் கொண்டு சென்ற போது, மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தையிட்டி வடக்கு, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டித்துறை, பலாலி மேற்கு, தென்மயிலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாகவும், பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, பலாலி தெற்கு, வயாவிளான் மேற்கு, குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதியாகவும், பாதுகாப்பு அமைச்சின் மேற்படி அறிவுறுத்தலுக்கு அமைய விடுவிக்கப்பட முடியாத இடங்களாக அறிவிக்கப்பட்டன.

கடிதம் வாங்க வேண்டாம்
பிரதமருடன் இன்று பேச்சு

காணிகள் விடுவிக்கப்படாது இழப்பீடு வழங்கப்படும் என்ற கடிதத்தை பொதுமக்கள் எவரையும் வாங்க வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடிதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டாம். அத்துடன் இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவித்து கையெழுத்து வாங்கும் எந்தப் படிவத்திலும் கையெழுத்திட வேண்டாம். வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் நீதிமன்றத்தில் எம்மால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் மேற்படி நடவடிக்கை முன்னெடுப்பது முற்றிலும் தவறானது.

மக்கள் பிரதிநிதிகளான எம்முடன் இது தொடர்பில் பேசவில்லை. அரச அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்பட முனையக் கூடாது. காணிகள் விடுவிக்கப்படாமாட்டாது என்று எப்படி முடிவு எடுப்பீர்கள். இதனை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பில் இன்று பேச்சு நடத்துவேன் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

(வ-5)

பொலிஸ்....

இடம்பெற்றன. அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த நிலையிலேயே நேற்றுப் பிடிபட்ட 4 பேரில் 2 பேர் தப்பிச் சென்றுள்ளனர்.

(வ-4,10)

இளைய சக்தியின்
ஆணிவேர் அறிவியல் சஞ்சிகை
வெளியீட்டகம் வழங்கும் மரபுரிமைப்
பாதுகாப்பும் கலாசார போட்டிகளும்

காலம்:- இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை
நேரம்:- காலை 6.00 தொடக்கம் இரவு 9 மணிவரை.
இடம் :- சக்தி கலாசார மேம்பாட்டு மன்றம் (சார்மீகன் இல்லம்)

தலைமை
திரு.இ.மதிகரன்
(நிர்வாக இயக்குநர் சக்தி கலாசார மேம்பாட்டு மன்றம்)

பிரதம விருந்தினர்
திரு.அ.கிருபாகரன் (ஏகஜனின் தோழன்)
உரிமையாளர் கிருபா கேணர்ஸ்)

சிறப்பு விருந்தினர்
திரு.சரவணபவ ஆனந்தம் - திருச்செந்தூரன்
ஊடகவியலாளர் - (மானவன் - யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்
திருமதி ராகவன் சாந்தி (குடும்பநல உதவியாளர்)
திரு.த.தனதீசன் (கேற்பார்வையாளர் -அபான்ஸ் - A.B.S)
செல்வி குமாரகுலசிங்கம் தர்சிகா
(இணைப்பாளர் - தர்சன்தோப்பு கல்வி வளர்ச்சிக்கழகம்)
திருமதி சஜீவன் சாளினி (கோப்பாய் சாமுவேல் கல்வி வளர்ச்சிக்கழகம்)

நிகழ்ச்சி நிரல்
மரபுரிமைப் பாதுகாப்பும் கலாசாரப் போட்டிகளும் கண்காட்சி ஆரம்பித்து வைத்தல்

கலாசார போட்டிகள்
கிடுகு பின்னல் மாலை கட்டுதல் தோரணம் பின்னுதல் முட்டி உடைத்தல்
பேச்சுப் போட்டி கட்டுரைப்போட்டி பொதுஅறிவுப் போட்டி பிரசங்கப் போட்டி
ஓவியம் வரைதல் களி மண் உருவாக்கம்.

வயதெல்லை
1-3 / 4-7 / 8-10 / 11- 13 / 14 - 17 / 17இக்கு மேல்

நடுவர்கள்
திரு.ப.ஜங்கரன் (நன்னடத்தை அதிகாரி தீவகம்), திருமதி ஆ.கௌசல்யா (முன்பள்ளி ஆசிரியர்),திரு.சி.கருணாகரன் (ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
செல்வி இ.சனுஜா (தலைவர்), செல்வன் ம.சஞ்சயன் (செயலாளர்), செல்வி கீ.சாயிதா (பொருளாளர்)

(C/25095) (11,17,18)

2016 இல் யாழ்.விருது பெறும்
உயர்திரு. திருநாவுக்கரசு
இராசநாயகம்

பூநகரி, மட்டுவில் நாடு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவின் ஏகமனதான தீர்மானத்திற்கமைவாக 2016ஆம் ஆண்டுக்கான யாழ்.விருதினைப் பெற்று கௌரவிக்கப்பட்டமையைப் பூநகரி வாழ் மக்களும் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை, நெறியாளர் சபை உறுப்பினர்களுடன் பணியாளர்களும் சேர்ந்து மனதார வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்.

(C/25096) (11,17,18)

P.P.T Express இன் மற்றும் ஒரு விரிவாக்க சேவை

☑ பகல் இரவு சேவையாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது
☑ காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு காலை 7.30 மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை செல்லும்.
☑ காங்கேசன்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ வழமைபோன்று இரவு சேவைகளும் நடைபெறுகின்றன.
மேலும் இலங்கையின் முதற்தர தனித வெளிநாட்டு பொதிகள் சேவைகளுடாக உங்கள் உறவுகளின் இல்லங்களுக்கு பொதிகள் தரிதமாக கையளிக்கப்படும்.
☑ யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகள் சேவை நடைபெறுகின்றன.

இலங்கையில் சுற்றுலா பயணத்துக்கு உரிய பஸ்சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

email : info@ppttravel.com web : www.ppttravel.com

Colombo - 06
#296 A1, Galle Road, Wellawatte,
Colombo - 06.
076 6036204 / 011 2364999. Fax: 011 2361144

Colombo-12
#182, Central Road,
Colombo-12,
077 5755175 / 011 4375790

Jaffna
#193, K.K.S. Road,
Jaffna.
077 5731318 / 0214923240

Point Pedro
Arasadi Lane, Point Pedro.
021 4923724
077 573 6003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Invest in Your Future @ ICBT Jaffna Campus

Apply now for September Intake 2016

Entry Criteria

- G.C.E. A/L or Equivalent Qualification
- Certificate in related field

QUALITY ASSURED AND MODERATED BY
CARDIFF METROPOLITAN UNIVERSITY - UK

HND CIVIL ENGINEERING

HND QUANTITY SURVEYING

Duration 02 Years

» Career Path
MSc
BSc
HND
A/L's

DEGREE COMPLETION IN SRI LANKA

For registrations or more informations

Thiru - 076 928 9810
thiru@icbtcampus.edu.lk

Roy - 077 074 6553
merojan@icbtcampus.edu.lk

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது அதனை சற்றுமாற்றிகாணாமற்போனோருக்கான சான்றிதழை வழங்க முயற்சிக்கின்றனர். குறிப்பிட்ட சான்றிதழைப் பயன்படுத்தி அரச உதவிகளைப் பெறமுடியும் என பாதிக்கப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்த முனைகின்றனர். இது நீதிக்கான எங்கள் அவாவை மழுங்கடிக்கும் செயல்.

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளே எங்களுக்கு தேவை. காணாமற்போனவர்களின் அலுவலகம் என்ற பெயர்கூட எங்களுக்கு சாதகமாகக் காணப்படவில்லை, பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் குறித்த அலுவலகம் என்றே பெயர் அமைந்திருக்க வேண்டும்.

இது எங்கள் மன உளைச்சலையும், வேதனையையும் மேலும் அதிகரிக்கின்றன. கடந்த 30 வருட கால உள்நாட்டுப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர். இவர்கள் தொடர்பில் இலங்கையின் சட்டமோ அல்லது முன்னைய ஆட்சியாளர்கள் அமைத்த ஆணைக்குழுக்களோ எந்தவித நீதியையும் வழங்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதி நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவிக்கின்றார். தற்போது காணப்படும் நல்லிணக்க செயலமர்வுகளும், சிவில் சமூகங்களும் எங்கள் மக்களின் வேதனையுடன் விளையாடுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எவர் கூப்பிட்டாலும் செல்வதற்குத் தயாராகவுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் குடும்பத்தவர்களின் உயிர்கள் மிகவும் பெறுமதியானவை என்பதால், அவற்றைக் காப்பாற்ற அவர்கள் எங்கு வேண்டுமென்றாலும் செல்வதற்குத் தயாராகவுள்ளனர்.

பாதிக்கப்பட்ட எமது மக்களைப் பொறுத்தவரை பன்னாட்டு விசாரணைகளிலேயே அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். கடந்த காலங்களில் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதை நாங்கள் பார்த்துள்ளோம். ஆனால், அவற்றினால் முடிவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எங்கள் பிள்ளைகள் கடத்தப்பட்டு தடுத்துவைக்கப் பட்டிருந்த திருகோணமலை இரகசிய முகாம்கள் குறித்து நாங்கள் பன்னாட்டு சமூகத்துக்கு தகவல்களை வழங்கினோம். பன்னாட்டு சமூகமும் அவற்றை ஆராய்ந்து விட்டு, இலங்கை அரசை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டது. இன்றுவரை அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அப்பாவிகளான எங்கள் பிள்ளைகளை காணாமற்போகச்செய்தவர்கள் இன்றும் எங்கள் மத்தியில் சுதந்திரமாக நடமாடிய வண்ண முள்ளனர். எங்கள் பிள்ளைகளைக் கடத்திய கருணா அம்மானுக்கு உயர்பதவிகள் வழங்கப்பட்டன. அவர் சுதந்திரமாக நடமாடுகின்றார். ஆனால் எங்கள் பிள்ளைகள் எங்கே? குமாரபுரம் படுகொலையை எடுத்துப்பாருங்கள். அவ்வாறான படுகொலையொன்று இடம்பெற்றதற்கான சாட்சியங்கள் இருந்தும் எம்மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இவ்வாறான் அனுபவம் காரணமாகவே காணாமற்போனோர் அலுவலகம் குறித்து எங்களுக்கு நம்பிக்கையில்லை. குறிப்பிட்ட அலுவலகத்தில் பன்னாட்டு பிரதிநிதித்துவம் அவசியம் எனக் கோரினோம். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை – என்றார். (வ-21)

ஈரவிழிகளுடன் 4ஆம் ஆண்டில்



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

(சாத்திரியார்)

வையத்துள் 12.07.1943 — தெய்வத்துள் 13.09.2012

தீதி: ஆவணி திரயோதசி தேய்பிறை

நீ நந்த செல்வங்கள் எத்திக்கும் உண்டு.
நீங்காத உன் நினைவுகள் எம் நெஞ்சத்தில் உண்டு
தேங்காத உதிர்கின்ற கண்ணீர்த்துளி கொண்டு
அஞ்சலிக்கின்றோம் உன் ஆத்மசாந்திக்காய் இன்று.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாசமுடன்

குடும்பத்தினர்.

இல.45/2, விசுவமடு,
சாத்திரியார் கோட்டம்.

(சி 25066)(11.18.)

நெஞ்சகலா இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
03 . 12 . 1939

உதிர்வு
22 . 08 . 2014

அமரர்

செல்லையா மகேஸ்வரன்

(ஸ்தாபகர் - யாழ் மின்னகம்,
மகேஸ் அன் சன்ஸ், மகாநதி ரெக்ஸ்)

திதி : அபரபட்ச திரயோதசி (30.08.2016)

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் அல்ல,
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாதையா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

127/6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மகன்கள், மகள்மார்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(c 26054) (13.18)

நன்றி நவிலலும்
31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
30 . 06 . 2004

உதிர்வு
31 . 07 . 2016

31.07.2016 அன்று சிவபதமடைந்த

எமது அன்புக் குழந்தை

அமரர் சுதாகரன் நிதிஷன்

எமது அன்புக் குழந்தை மீளாத்துயில் கொண்டு சிவபதமடைந்தவேளை வைத்திய உதவிகள் புரிந்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் குழந்தைகளுக்கான இருதய நிபுணர், அச்சுவேலி வைத்திய சாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி, ஏனைய வைத்திய நண்பர்கள், ஏனைய உதவிகள் புரிந்த கௌரவ விவசாய அமைச்சர், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதிபதி, திடீர் மரண விசாரணை அதிகாரி, அச்சுவேலி பொலிஸ் அதிகாரி, பொறியியலாளர்கள், நீர்ப்பாசனத்திணைக்கள உத்தியோகத்தர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் அன்புச் செல்வனின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறி எம்மை ஆற்றுப்படுத்திய மதகுருமார்கள், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதிபதி, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபையின் கௌரவ அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள், பிரதம செயலாளர், செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், உள்ளூர் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மற்றும் படையதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், , யாழ். பரியோவான் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், சமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், இரணைமடுத்திட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், பிரசுரித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோர்க்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, எவருக்காவது நன்றி கூறத் தவறியிருப்பின் அவர்களுக்கும் எமது சிரம்தாழ்த்திய நன்றி யறிதல்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எந்திரி.என்.சுதாகரன் –
தந்தை
குடும்பத்தினர்.

இல : 539/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

077 723 5566

(J 4101) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசேரி ஊரெல்லை வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ். மாவட்ட செயலாளருக்கு அந்தப் பகுதி மக்கள் மனு

தென்மராட்சி, ஓக.30

1996ஆம் ஆண்டு அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மக்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்ட வரணி, இடைக்குறிச்சி மாசேரி ஊரெல்லை வீதியைச் சீரமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் யாழ்.மாவட்ட செயலரிடம் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக மனுவை அவர்கள் மாவட்ட செயலரிடம் கையளித்தனர்.

வரணி வடக்கு, வாழைத் தோட்டச் சந்தியில் இராணுவம் சோதனைச் சாவடி அமைத்திருந்தது. அந்தப் பகுதியில் ஆட்லறி ஏவுகணைத் தளமும் அமைக்கப்பட்டது. அந்தப் பகுதியில் பெரும் மண் அணைகள் அமைக்கப்பட்டன. வரணி மாசேரி, இடைக்குறிச்சி, வரணி வடக்கு தம்பான் பழுதனை வாழைத்தோட்டம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள்

> 2014ஆம் ஆண்டு யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையிலான அதிகாரிகள் குறித்த இடத்தைப் பார்வையிட்டு குறித்த வீதி சீரமைத்துத் தரப்படும் என்று தெரிவித்தனர். எனினும் வீதி சீரமைக்கப்படவில்லை.

பயன்படுத்தும் வீதியை உபயோகிக்கத்தடை விதிக்கப்பட்டது. அந்தப் பகுதி மக்கள் மாற்று வீதியைப் பயன்படுத்தியே போக்குவரத்தை மேற்கொண்டனர். கடந்த 20 ஆண்டுகளாக மக்கள் பயன்படுத்தாததால் வீதியில் வடலிகளும், மரங்களும் வளர்ந்துள்ளன.

பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வீதியை சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

2014ஆம் ஆண்டு யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையிலான அதிகாரிகள் குறித்த இடத்தைப் பார்வையிட்டு இந்த வீதி சீரமைத்துத்தரப்படும் என்று தெரிவித்தனர். எனினும் வீதி சீரமைக்கப்படவில்லை.

இதுகுறித்து மாவட்ட செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தமது மனுவில் தெரிவித்தனர்.

இந்த வீதி சபை எல்லைப் பரப்புக்குள் உள்ளது. சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியை சுபநிதி மூலம் சீரமைக்க முடியாது. அரச நிதியை ஒதுக்கித் தருமாறு யாழ். மாவட்ட செயலருக்கு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. - என்று சாவகச்சேரி பிரதேச சபையினர் தெரிவித்தனர். (ற-9)

குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் மீட்பில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்கவின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் காங்கேசன்துறையில் நடைபெற்றது. (ற-ரி)

நீர்த்தேக்கத்துடனான கிராமம் வடக்கில் 3 கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 30

நீர்த்தேக்கத்துடனான கிராமம் திட்டத்தில் தேசிய ரீதியில் 13 மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றில் வடக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களில் 3 கிராமங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. அவை 2 வருடங்களில் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய மீன்பிடி அமைச்சின் கீழ் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது. யாழ்.மாவட்டத்தில் நயினாதீவு, கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு, மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளத்தை அண்டிய குருவில் என்பனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதம் கொழும்பில் மத்திய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களுக்கான அடிப்படை கட்டுமான வசதிகள், மக்களின் வாழ்வாதாரம், வீட்டுத்திட்டங்கள் போன்ற அபிவிருத்திப் பணிகள் இரண்டு வருடங்களுக்குள் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் அக்கிராமம் மட்டுமல்லாது அயல்கிராமங்களும் நன்மை பெறமுடியும் என்று மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இத்திட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த வாரம் மத்திய மீன்பிடி அமைச்சர் மன்னாருக்கு பயணம் மேற்கொண்ட போது மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டுக்கரைக் குளத்தை அண்டிய குருவில் கிராமத்தில் நடைபெற்றது. (ற-4)

நாவாந்துறையில் நூல் நிலையம்

நாவாந்துறையில் நூல் நிலையக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு மாநகராட்சி மன்றம் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

நாவாந்துறை சனசமூக நிலையத்துக்கு அருகில் ஏற்கனவே அமைக்கத் திட்டமிடப்பட்ட கட்டடம் ஒன்று நூல் நிலைய கட்டடமாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம் அமைக்கும் பணிகள் இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் வசதி கருதி இந்த நூலகம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)

நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

ஊர்காவற்றுறை பிரதேச சபையில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கான நோமுகப் பரீட்சை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று பிரதேச சபைச் செயலாளார் தெரிவித்தார்.

நூலகப் பரிசாரகர், காரியாலய காரிய சகாயர், காவலாளி, சுகாதாரத் தொழிலாளி ஆகிய வெற்றிடங்களை நிரப்புவதற் காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 01, 02 ஆம் திகதிகளில் நேர் முகப்பரீட்சைநடைபெறஇருந்தது நேர்முகப்பரீட்சை, வடக்கு மாகாணஉள்ளூராட்சிஆணையாளரின் அறிவுறுத்தலுக் கமைய காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-ரி)

சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஓக. 30

உதயனின் மாதாந்த வெளியீடுகளான ஞானக்கதிர், ஒளி அரசி சஞ்சிகைகளின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நல்லூர்த் தேர்த் திருவிழாவான நாளை புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவானவர்கள் நாளை பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு க.கவாஸ்கர், (கோணாவளை வைரவர் கோயிலடி கொக்குவில் கிழக்கு, கொக்குவில்) இரண்டாம் பரிசு செல்வி கீர்த்திசிங்கன் பானுகா (ஆவரங்கால் நடராஜா ம.வி புத்தூர்), மூன்றாம் பரிசு சிவரூபி பத்மநாதன், (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. சுழிபுரம்) மேலும் ஆறுதல் பரிசுகள் கி.சஞ்சீவன் (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), செல்வி ம.மிதுர்சிகா, (ஆவரங்கால் நடராஜா ம.வி. புத்தூர்) லோ. சங்கீதன் (ஆவரங்கால் நடராஜா ம.வித். புத்தூர்), திருமதி இந்திராணி பொன்னுத்துரை (42 3/3, உருத்திரா மாவத்தை, கொழும்பு 6) தனுவந்தி கஜேந்திரன், (ஆவரங்கால் நடராஜா ம.வி.புத்தூர்), திருமதி நிஷானி தர்முதாஸ் (விபுலானந்தா வீதி வாழைச்சேனை), ரோசானி சிங்கராசா (242.தேக்கவத்தை வவுனியா) யசிந்தா அரிகரன் (யாழ்.வேம்படி உயர் தரப் பாடசாலை) ஸ்ரீஸ்கந்தராசா சரத்திலக்சனா, (தும்பளை சிவப் பிரகாச ம.வி.பருத்தித் துறை), வ.கிருசாலினி, (42, 1ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை) செல்வி பாலேந்திரம் ஜனனி (ஆவரங்கால் நடராஜா ம.வி. புத்தூர்). (ற-4)

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பணியாளர் நலனோம்புக் கூட்டுறச் சங்கம் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கூட்டுறவுப் பணியாளர்களின் பிள்ளைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தியது. சித்தியடைந்த 44 பிள்ளைகள் அதில் கௌரவிக்கப்பட்டனர். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் பரிசில்களை வழங்கினார். (ற-17)

இறம்பைக்குளத்தில் நேற்றும் 11 துப்பாக்கிகள் கண்டுபிடிப்பு

வவுனியா, ஓக. 30

வவுனியா ஓமந்தை, இறம்பைக்குளத்தில் தனியார் காணியில் இருந்து நேற்றும் 11 துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. கடந்த வியாழக்கிழமையும் 30 துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

காணி உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்யும்போது மண்ணில் புதையுண்ட நிலையில் துப்பாக்கிகளைக் கண்டார். அது தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பொலிஸார் அங்கு சோதனை நடத்தியபோது 30 துப்பாக்கிகளை மீட்டனர்.

அவை விடுதலைப் புலிகள் பயன்படுத்தியவை என்று தெரிவிக்கப்பட்டது. அந்த இடத்தில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நீதிவானின் அனுமதி பெற்று நேற்றுக் காலை அந்த இடத்தில் தேடுதல் நடத்தப்பட்டது. அதில் 11 துப்பாக்கிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்டவை எல்.எம்.ஜி. ரகத்தைச் சேர்ந்தவை என்றும் தெரிவிக்கப்பட்டது. நேற்றுடன் தேடும் பணிகள் முடிவுறுத்தப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசி எறியும் கழிவுப் பொருள்களை விலைப் பொருள்களாக மாற்றும் பயிற்சிச் செயற்றிட்டத்தின் கீழ் தீவக பிரதேச செயலகத்தால் சிரட்டைகளில் அலங்காரிப்புப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி வகுப்புகள் அனலைதீவு பொது மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டன. (ற-9)

நாட்டைப் பிளவுபடுத்துவதை கூட்டமைப்பு விரும்பவில்லை

அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

நாட்டைப் பிளவுபடுத்துவதையோ, இன்னொரு போரையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற பின்னர் தென்பகுதிக்கான பயணத்தை மேற்கொண்ட இரா.சம்பந்தன் மாத்தறையில் இடம் பெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றார்.

அங்கு செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

அதிகாரங்கள் பகிரப்பட்ட – பிளவுபடாத ஒரே நாட்டுக்குள் ஒற்றுமையாக வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். ஒரு நாட்டுக்கு முப்படைகளும் அவசியமானவை. நிதி, அயலுறவுத்துறை, குடிவரவு, குடியகல்வு ஆகிய அதிகாரங்கள் கொழும்பு அரசிடமே இருக்க வேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கோ, இன்னொரு போரையோ எமது கட்சி விரும்பவில்லை. நாம் போரின் விளைவுகளை அனுபவித்தவர்கள். எதிர் காலத்தில் இன்னொரு போருக்கு வழிவகுக்கும் காரணிகளை இல்லாமல் செய்ய வேண்டும் – என்றார். (ற-5)

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை ஆரம்பம்

நீண்ட கால இடைவெளியின் பின்னர் நேற்று

ஆனையிறவு உப்பளத்தில் நேற்று நீண்டகால இடைவெளியின் பின்னர் உப்பு அறுவடை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சத்தியசீலன், கண்டாவளைப் பிரசே செயலர் முகுந்தன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உப்பு அறுவடை செய்ததுடன், அடிக்கல் நட்டனர்.

ஆனையிறவு உப்பளம் 1937ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு போரால் உப்பளம் சேதமடைந்தது. 2004ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப் பட்டன. 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட போரால் அது முற்றாகச் செயலிழந்தது.

உப்பளத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் 100 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக் கப்பட்டன. 25 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள், களஞ்சியம் என்பன சீரமைக்கப்பட்டன.

கடந்த காலங்களில் 50 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு அறுவடை செய்யப்பட்டது. தற்போது முதற்கட்டமாக 8 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பே அறுவடை செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் ஆனையிறவு உப்பளத்தில் 650 பணியாளர்கள் பணியாற்றினர். தற்போது 31பணியாளர்களே பணியாற்றுகின்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டது. (ற-4)

இடம்பெயர்ந்தோரைப் பதிவு செய்யும் பணியகம் ஒன்றையும் நிறுவுங்கள்

மக்கள் கருத்தறியும் செயலணியின் சம்மாந்துறை அமர்வில் சுட்டிக்காட்டு

அம்பாறை, ஓக. 30

காணாமற் போனோர் பணியகத்தை நிறுவுவதற்கு எடுத்த நடவடிக்கை போன்று, இடம் பெயர்ந்த மக்களைப் பதிவு செய்வதற்கான பணியகம் ஒன்றையும் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமே காணிகளை இழந்த மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும்.

இவ்வாறு சம்மாந்துறையில் நடைபெற்ற நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் வலயமட்ட அமர்வில் சமாதானக் கற்கைகளுக்கான நிலையப் பணிப்பாளரும், தேசிய ஜனநாயக மக்கள் கூட்டமைப் பின் தலைவருமான கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தெரிவித் தார்.

சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு தமது குறித்த இரு அமைப்புக்கள் சார்பிலும் பரிந்துரைகளை அவர் முன் வைத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக காணாமற் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு மேற் கொண்ட அர்ப்பணிப்பை நாம் பாராட்டுகின்றோம்.

இழப்பீடு மற்றும் நட்டஈடு செலுத்துவதற்கான அலுவலகம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றையும் ஏற்படுத்துவதற்காக அரசு முனைப்புடன் செயற்படுவ தானது பாராட்டத்தக்கதும் பாதிக்கப்பட்ட மற்றும் காணாமற் போனோரின் உறவுகளுக்கும் நம்பிக்கையூட்டும் செயற் பாடாகும்.

இடம் பெயர்ந்தோர்

போரின் மிகக் கடுமையான ஓர் அம்சமாக காணாமற் போதல் மற்றும் காணிகளை இழத்தல் என்பன காணப்படுகின்றன. நிலைமாற்றுக்கால நீதியின் நடைமுறைப் பொறிமுறையில் அரசு நேர்மையுடன் செயற்படுகின்றது.

அதே நேரம் போரால் இடம் பெயர்ந்த மக்களைப் பதிவு செய்வதற்கான ஒரு சிறப்பு அலுவலகத்தை நிறுவுவதன் ஊடாக மட்டுமே இடம் பெயர்வால் காணிகளை இழந்த மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும் – என்றார். (ற-5-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயிற்சிப்பட்டறை

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவன அனுசரணையுடன் வடமாகாண பிரதம செயலாளர் பணிமனையும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களமும் இணைந்து 'நல்லாட்சி தொடர்பான அரசின் செயற்பாடுகள்' எனும் பயிற்சிப் பட்டறையை காலை 8.00 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளன.

கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வாளர் நாயகம் எச்.எம்.காமினி விஜேசிங்க, முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சி.மாயாதுன்ன ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், கணக்காளர்கள் ஆகியோர் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள வேண்டும் என்று மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் அறிவித்தார். (ற-9)

தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள்என்பனநடைபெறுகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள 23 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் 'பேசா அநுபூதி' எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசிதரனின்தெய்வீகச்சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30மணிவரை நடைபெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் மொறீஷ்சுவேதேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும்.

செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் மாலை 6 மணிக்கு யாழ் கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் 'கலியுகத்தில் கந்தன்' என்னும் தலைப்பில் ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தனின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறும். (ற-ரி)

கண்காட்சி

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்துக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில், சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் 'ஒளிப்படங்களின் குரல்' என்னும் கண்காட்சி நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கண்காட்சி இன்றுடன் நிறைவடையவுள்ளது. இளைஞர்களால் சமூகத்தின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவை ஒளிப்படங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இளைஞர்கள் எங்கள் கிராமம் எங்கள் சமூகம் என்ற தொனிப்பொருளில் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர். நாட்டின் பல பாகங்களிலும் உள்ள கிராமங்களின் கதை களும் பன்முகத்தன்மையும் இந்தக் கண்காட்சி வழியாக ஒரே இடத்தில் காட்சிப்படுத்தப்படுவதுடன் நிலவும் பிரச்சினைகள் அவற்றின் உள்ளரங்கங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. (ற-5)

மூன்று முறிப்பு சந்தியில் இருந்து பாலைபாணி வீதி வரை

வகைதொகையின்றி தேக்குகள் சீருடையினரால் அழிகின்றன

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.30

மூன்று முறிப்புச் சந்தியில் இருந்து பாலைபாணி வீதி வரை உள்ள தேக்கு மரங்கள் வகை தொகை இன்றிச் சீருடையினர் வெட்டிச் செல்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஒரு மரம் வெட்டுவதாக இருந்தாலும், அனுமதி எடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆயிரக்கணக்கான மரங்கள் அழிக்கப்படும்போது அதனைக் கண்டு கொள்ளாது இருக்கின்றனர் – என்று மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மரம் அறுப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்று முல்லைத்தீவு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மூன்று முறிப்புச் சந்தியில் இருந்து பாலைபாணி வீதியில் செல்லும் வழியில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தேக்கங் காடுகளில் உள்ள தேக்கு மரங்கள் சீரூடையினரால் அறுக்கப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

சூழல் மாசடைவதில் காடழிப்பு மிக முக்கிய பங்கு வகித்து வருகின்றது. அதில் இருந்து நாட்டையும் மக்களையும் காக்கும் பொருட்டு கடந்த காலங்களில் நடுகை செய்யப்பட்ட மரங்களே இவ்வாறு குறுகிய நோக்கத்துக்காக அழிக்கப்படுகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது.

வடக்கின் காடழிப்பு மற்றும் மணல் அகழ்வு உள்ளிட்ட அனைத்து வகையிலான சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும். இத்தகைய சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தொடர்பில் எந்தவிதமான தயவு தாட்சண்யமுமின்றிச் சட்டம் நடைமுறைப்படுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த காலத்தில் தெரிவித்தார். இது சீருடையினருக்குப் பொருத்தம் அற்றது என்பதை அவர் குறிப்பிடவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடப்பட்ட தேக்கு மரங்களும் அழிக்கப்படுகின்றன. அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டம் எல்லோருக்கும் சமமானதே. இதில் சீருடையினர் விதிவிலக்கு அல்ல – என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மரங்களை அறுப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அவ்வாறு சட்டவிரோதமாக காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் எவராக இருந்தாலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்று முல்லைத்தீவு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-5-21-ரி7)

காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டுக் கண்டனப் பேரணி

முல்லைத்தீவு, ஓக. 30

சர்வதேச காணாமற் போனோர் தினத்தை முன்னிட்டு, இன்று முற் பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட சிவில் சமூக அமைப்பும், பாதிக்கப்பட்ட மக்களும் இணைந்து அமைதியான முறையில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மகாவித்தியாலயச் சந்தியில் இருந்து ஆரம்பமாகவுள்ள இந்த அமைதிப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை செல்லவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மனு ஒன்றையும் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(த-ரி7)

2 ஆண்டுகளின் பின்னர் கூடியது பொது நூலக ஆலோசனைக் குழு

யாழ்.பொது நூலகத்தின் ஆலோசனைக் குழு கடந்த இரண்டு ஆண்டுகளின் பின்னர் கூட்டப்பட்டது.

2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின் னர் கூட்டம் எதுவும் நடத்தப்படாமல் ஆலோ சனைக்குழு செயற்பாடு இன்றி இருந்தது.

யாழ்.மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் இந்த ஆலோசனைக் குழுவைக் கடந்த வாரம் மீண்டும் கூட்டி, அதன் செயற் பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

பத்துப் பேர் கொண்ட இந்த ஆலோசனைக் குழு நூலகத்தின் செயற்பாடுகள், தேவைகள் குறித்து ஆராய்ந்து மாநகராட்சி மன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த ஆலோசனைக் குழுவில் யாழ். நகர முன்னணிப் பாடசாலையின் அதிபர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-17)

கட்டடத் தினைக்களத்துக்கு மேலும் 6 பொறியியலாளர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 30

வடக்கு மாகாண கட்டடத் தினைக்களத்துக்கு மேலும் ஆறு பொறியியலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில்புதிய கட்டடப் பணிகள் உள்ளிட்ட பணிகள் தற்போதுவடக்குமாகாணகட்டத்தினைக்களம் ஊடாகவேமேற்கொள்ளப்பட்டுவருகின்றன. குறித்த பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில் கட்டடத் தினைக்களத்தில் நிலவி வந்த பொறியியலாளர் வெற்றிடம் நிரப்பும் பணி கடந்த வாரம் இடம்பெற்றது.

குறித்த வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் தற்போது 6 பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொறியியலாளர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதால் குறித்த தினைக்களம் ஊடாக இடம்பெறும் திட்டங்கள் அனைத்தும் தடையின்றிக் கொண்டு செல்லப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

கடந்தஆண்டுமுதல்கல்வித்தினைக்களத்தின் புதிய கட்ட அமைப்புக்கள் அனைத்தும் கட்டடத் தினைக்களத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. (த-10)

அரசியல் கைதி தப்பியதால் பணியிழந்தார் சிறைக் காவலர்

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அரசியல் கைதி தப்பியோடியதை அடுத்து, கடமையிலிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

அவர் இன்னும்கைதுசெய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதியான இராசையா ஆனந்தராஜா (வயது – 37) என்பவர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்து, கடந்த 14ஆம் திகதி யாழ்.போதனர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

கடந்த புதன்கிழமை மலம் கழிக்கச் செல்வதாகக் கூறி மலசல கூடம் சென்ற கைதி அதன்ஜன்னல்வழியாகத்தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதி தப்பி ஓடியபோது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைக்காவலர் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்ட கைதியான இராசையா ஆனந்தராஜா 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

மீண்டும் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் குறித்த நபர் தனது விடுதலையை வலியுறுத்திக் கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இதன்போது உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதன் காரணமாக குறித்த நபரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்குமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் தப்பியோடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-21)

ஓரியன்ட் நிலையான வைப்புகளுக்கு
சூப்பர் வட்டி

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
கீதிகா - 0777 363 926 / சஞ்சீவ - 0777 712 696

காலம்	நியம வட்டி வீதம்				மூத்த பிரஜைகளுக்கான வட்டி விகிதம்			
	மாதாந்தம்	வ.வ.வீ	முதிர்வில்	வ.வ.வீ	மாதாந்தம்	வ.வ.வீ	முதிர்வில்	வ.வ.வீ
3 மாதங்கள்	-	-	11.00	11.46	-	-	12.00	12.55
6 மாதங்கள்	10.00	10.47	11.50	11.83	11.00	11.57	12.50	12.89
1 வருடம்	11.50	12.13	12.00	12.00	12.50	13.24	13.00	13.00
2 வருடங்கள்	12.00	12.68	13.00	12.25	13.00	13.80	14.00	13.14
3 வருடங்கள்	12.50	13.24	13.50	12.00	13.50	14.37	14.50	12.79
4 வருடங்கள்	12.50	13.24	14.50	12.12	13.50	14.37	15.50	12.82
5 வருடங்கள்	12.50	13.24	15.00	11.84	13.50	14.37	16.00	12.47

பிராந்திய முகாமையாளர்கள்
மேல், மத்திய மாகாணங்கள் - தஹமி 0772 093 993
தென் மாகாணம் - டெரன்ஸ் 0772 178 979
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் - பிரவீன் 0768 330 255
சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகணங்கள் - ஏரந்த 0772 612 113

35 Years

ஓரியண்ட் பினான்ஸ் பிஎல்சி
(ஓரியண்ட் பினான்ஸ் பிரதான காரியாலயம்)
இல. 18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே: 117 577 685 பெக்ஸ்: 0117 577 678
Orient Finance

இலங்கையின் மத்திய வங்கியின் நாணயச்சபையினால் 2011ன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்பட்டது. இணைக்கப்பட்ட திகதி: 1981 மூலை 24 ஆம் திகதி தகுதிவாய்ந்த வைப்பீட்டாளர்களின் பொறுப்புக்கள் மீட்டீடற்கான நாணயச்சபையின் இலங்கை வைப்பீட்டாளர் காப்புறுதி திட்டத்துடன் வைப்பீட்டாளர் ஒருவருக்கு அதிக கூடுதலாக ரூ.300,000 என்ற தடப்படையில் காப்புறுதி செய்யப்படும்.
பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள்: கலாநிதி டீ.ஜெயராஜ், பீ.சீ தனலாபி, திரு. பீ.ஏ.ஹஸ்டர், திரு. ஆர்.ஹஸ்டர், திரு. ஏ.டபிள்யூ.அத்துகோரள, திரு. துஷார ஜயசுந்தர பெரேரா, திரு. கே.எம்.ஏ.பீ. நித்தவெல பீ.சீ, திருமதி. எல்.கே.குணதிலக, செல்வி. பினேட்டா டீ.ஏ.பெரேரா, என்.டீ.குணசேகர
31.03.2016 இல் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை : பங்குதாரர்களின் நிதி ரூ. 2,242,981,000/-, வைப்பு மீதான பொறுப்புக்கள் ரூ. 9,249,312,000/-, கடன்கள் ரூ. 4,873,024,000/-, வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 606,873,000/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவர் மாணிக்கக் கல் அகழத் தடை

கொழும்பு, ஓக. 30
ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய வெளிநாட்டவர்கள் நாட்டில் மாணிக்கக்கல் அகழ்வதற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையின் தலைவர் அசங்க வெலகெதர குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
சில வெளிநாட்டு நிறுவனங்கள் தற்போது சட்டத்துக்குப் புறம்பான வகையில் தங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. அவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் கண்டறிவதற்கான சுற்றி வளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார். (ற-5)

தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணய மேன்முறையீட்டு விசாரணை பூர்த்தி

விசாரணைக் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30
தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய மேன்முறையீட்டு விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.
இவ்வாறு விசாரணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஒக்ரோபர் மாதமளவில் மீளாய்வு செய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் பற்றிய விவரங்களை வர்த்தமானியில் அறிவிக்க முடியும்.
மீள் நிர்ணயம் செய்யப்பட்ட தொகுதிகளின் வரைபடங்களை உருவாக்குதல் மற்றும் எல்லைகளை நிர்ணயித்தல் போன்றவற்றுக்காக அளவையாளர் திணைக்களத்தின் உதவி பெறப்படும்.
மீள் நிர்ணயம் குறித்த அறிக்கை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எதிர்வரும் நாள்களில் ஒப்படைக்கப்பட உள்ளது என்றார். (ற-5)

> மீள் நிர்ணயம் குறித்த அறிக்கை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எதிர்வரும் நாள்களில் ஒப்படைக்கப்பட உள்ளது என்றார்.

புறாத்தீவில் சட்டவிரோத மீன்பிடி 7 மீனவர் கைது

கொழும்பு, ஓக. 30
திருகோணமலை புறாத்தீவு வடக்குக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 7 மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.
கிழக்குக் கடற்படைக்கு உட்பட்ட, குச்சவெளியிலுள்ள இலங்கைக் கடற்படையின் வலகம்பா கடற்படைப் பிரிவால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்பட்ட டிங்கி படகு மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள், கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குச்சவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் குறிப்பிட்டனர். (ற-5)

மத்திய வங்கி ஆளுநரை விசாரிக்கவுள்ளது கோப்

பிணை முறி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில்

கொழும்பு, ஓக. 30
மத்திய வங்கி ஆளுநரைத் தனியாக அழைத்து கோப் குழு விசாரணை நடத்த உள்ளது.
இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றது என்று கூறப்படும் பிணை முறிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலேயே விசாரணை நடத்தப்படவுள்ளது.
இந்த வாரத்தில் மத்திய வங்கி ஆளுநர் கோப் குழு எனப்படும் பொது முயற்சியாண்மை குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளார்.
மத்திய வங்கியின் ஆளுநர் தனியாக கோப் குழுவின் முன்னிலையில் பிரசன்னமாகுமாறு அழைக்கப்படும் முதற்சந்தர்ப்பம் இதுவாகும்.
கோப் குழு அண்மையில் கூடிய போது மத்திய வங்கி ஆளுநரை அழைத்து விசாரணை நடத்துவது என்று தீர்மானித்திருந்தது. (ற-5)

சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய சிறுவர் கைது

கொழும்பு, ஓக. 30
சிறுமி ஒருவரைத் துர்நடத்தைக்கு உட்படுத்தி அதை கமராவில் பதிவு செய்து வைத்திருந்த 5 சிறுவர்களை ஹற்றன் பொலிஸார் கைது செய்தனர்.
பதின்மூன்று வயதுடைய பாடசாலை செல்லும் சிறுமியை 13 மற்றும் 14 வயதுடைய சிறுவர்கள் துர்நடத்தைக்கு உட்படுத்தி அதை கமராவில் பதிவு செய்துள்ளனர்.
சிறுமியின் பெற்றோரால் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து கமரா கைப்பற்றப்பட்டது.
சிறுமி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சந்தேக நபர்கள் ஹற்றன் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

மாடியில் இருந்து தவறி வீழ்ந்து இலங்கை அகதி சாவு

கொழும்பு, ஓக. 30
தமிழ்நாட்டின் புதுவை மாவட்டத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட இலங்கை அகதி மாடிப் படியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தார்.
கீழ்புத்துப்பட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த சங்கர் (வயது-51) என்ற கட்டடத் தொழிலாளியே உயிரிழந்தார்.
சம்பவத்தில் படுகாயமடைந்த சங்கரை மீட்டுச் சிகிச்சைக்காக புதுச்சேரி அரச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்த போதும் சிகிச்சை பயனின்றி சங்கர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

அரசியல் முதிர்ச்சி இல்லாதவர் ஜோன் அமரதுங்க

சாடுகின்றார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு, ஓக. 30
அமைச்சர் ஜோன் அமரதுங்க அரசியல் முதிர்ச்சியற்றவராக செயற்படுகின்றார்.
இவ்வாறு சக அமைச்சரான மனோ கணேசன் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.
கம்பஹா மாவட்டத்தின் வத்தளை ஒளியமுல்லை பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலை அமைப்பது தொடர்பிலான விவகாரத்தில் அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.
இது தொடர்பில் மனோ கணேசனால் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
வத்தளை ஒளியமுல்லை பிரதேசக்காணியில் தமிழ்ப்பாடசாலை அமைக்க நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது. இதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அடிக்கல் நடும் நிகழ்வை குழப்ப முனைந்த இனவாதிகளையிட்டுக் கவலையும் அடைகிறேன். இந்த விடயம் இழுபறிபட்டுள்ளமைக்கு முழுப்பொறுப்பையும் அமைச்சர் ஜோன் அமரதுங்க ஏற்றுக்கொள்ள வேண்டும். 1977 ஆம் ஆண்டு முதல் கடந்த 40 வருடங்களாக அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றார். ஒவ்வொரு தேர்தலிலும் வத்தளை தமிழ் மக்கள் இவருக்கு வாக்களித்தனர். தமிழ் வாக்குகள் கிடைத்திராவிட்டால் இவர் ஒருபோதும் வெற்றி பெறவே முடியாது. 25 ஆண்டுகளுக்கு முன்னரே ஏழைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கான தனித்தமிழ் பாடசாலையை வத்தளையில் நிர்மாணித்து புண்ணியத்தை இவர் தேடி இருக்க வேண்டும். அதை அவர் செய்யவும் இல்லை. செய்ய முனைந்த எங்களை செய்ய விடவும் இல்லை.

எதிர்வரும் ஜனவரியில் தமிழ் பிள்ளைகள் முதலாம் வகுப்புக்கு அனுமதி பெறக்கூடியதாகப் புதிய தனித்தமிழ் பாடசாலை தயாராக வேண்டும். அடிக்கல்லைக் கண்டு அகமகிழ்ந்து அமைதியடைந்து மீண்டும் ஏமாற தமிழ் மக்கள் தயாராக இல்லை. நானும், அமரதுங்கவும் ஒரே அரசில் அமைச்சர்களாக இருக்கின்றோம் என்பதற்காக நான் அமைதியாக இருக்கமாட்டேன். என்னைப்பற்றி ஜோன் அமரதுங்கவுக்கு மிக நன்றாகத் தெரியும். அன்று இவர்கள் திட்டமிட்டு, தமிழ்ப் பாடசாலைத் திட்டத்துக்கு எதிராகச் சிங்கள கத்தோலிக்க இனவாதத்தைக் கிளப்பினார்கள். இன்று சிங்கள பௌத்த இனவாதம் இவர்கள் மீது பாய்கிறது. இதுதான் உண்மை. இது இவர்கள் விதைத்த வினை.
நானும் அரசியல் நோக்கில் ஒளியமுல்லைக்கு வந்து, குழியைத் தோண்டி, அடிக்கல்லை நட்டு இருக்கலாம். நானும் முதிர்ச்சியற்ற சிறு குழந்தையைப்போல் நடந்து கொள்ள விரும்பவில்லை. ஜோன் அமரதுங்கவைவிட எனக்கு அரசியல் முதிர்ச்சி உள்ளது. தமிழ் பாடசாலை வத்தளையில் வேண்டும் என்பதே நோக்கம்.
இந்த வருடம் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி அடிக்கல்லை நட்டு வத்தளை தமிழ்ப் பாடசாலை கட்டுமானத்தை எமது நல்லாட்சியில் ஆரம்பிக்க நாம் முடிவு செய்து இருந்தோம். இது மாகாண சபைப் பாடசாலை என்ற காரணத்தால் மேல் மாகாணசபை முதலமைச்சர் தலைமையில், எனது அழைப்பின் பேரில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் ஜோன் அமரதுங்க, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரை அழைத்து அடிக்கல் நிகழ்வை விமர்சையாக நடத்த இருந்தோம்.
அந்த நிகழ்வை அமைச்சர் அமரதுங்க அரசியல் நோக்கில் தடுத்து நிறுத்தினார். நாட்டின் மிகப்பெரும் தலைவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வாக இருந்தால் இனவாதிகள் ஓடி ஒழிவார்கள் என எனக்குத் தெரியும். அது ஜோன் அமரதுங்கவுக்குத் தெரியவில்லையா அல்லது தமிழ்ப் பாடசாலை கட்டுவதில் அவருக்கு உண்மையிலேயே அக்கறை இல்லையா என எனக்கு விளங்க வில்லை. நானும் அரசியல் நோக்கில் சண்டையிட்டு இருக்கலாம்.
பெப்ரவரி மாதம் அடிக்கல் நடுவதற்கு முயன்றா எனது முயற்சியின் காரணமாகப் பெரும் அரசியல் அழுத்தம் ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் 40 வருடமாகத் தூக்கத்தில் இருந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க விழித்து எழுந்து இன்று தமிழ் பாடசாலைக்கு அடிக்கல் நட்டார். இந்த உண்மை வத்தளையில் வாழும் சிறு குழந்தைக்கும் தெரியும். இதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன். பாடசாலையை எவர் கட்டினாலும், ஏழைத் தமிழ் மக்கள் என்னை வாழ்த்துவார்கள் என்பது எனக்குத் தெரியும். பாடசாலை கட்டி முடிக்கப்படும் வரை, நான் இவர்களைச் சும்மா இருக்கவிடமாட்டேன் என வத்தளை வாழ் தமிழ் மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.
வத்தளையில் தமிழ்ப் பாடசாலை அமைக்கக் கடும் முயற்சி எடுக்கும் எனக்கு அழைப்பு விடுக்காமல் இந்த விழாவை ஜோன் அமரதுங்க நடத்தியுள்ளார். அதையிட்டு நான் கவலைப்படவில்லை. தன்னை அண்டி இருக்கும் ஒருசில அரசியல் சிறுவர்களையும், எங்கள் கட்சியில் இருந்து விரட்டப்பட்ட கையாலாகாத ஒரு சிலரையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, இந்த அடிக்கல் நாட்டு விழாவை நடத்த ஜோன் அமரதுங்க முயன்றுள்ளார்.
அதனாலேயே இனவாதிகள் தமிழ்ப் பாடசாலைத் திட்டத்தை தடுக்க முயல்கிறார்கள். உண்மையில் இந்தக் காரியத்தை நாம் அனைவரும் சேர்ந்து அரசியல் பலத்துடன் செய்ய வேண்டும். இனவாதிகளிடம் நாம் சரணடைய முடியாது. இது பற்றிப் பிரதமரிடம் நான் உடனடியாக முறையிட்டுள்ளேன். பிரதமர் ஜோன் அமரதுங்கவிடம் விசாரித்துள்ளார். இனிமேல் இந்த இனவாதிகளைச் சமாளித்து பாடசாலையை கட்டித் தருவது ஜோன் அமரதுங்கவின் கடமை என்றுள்ளது. (ற-5)

தேரரின் மருத்துவ செலவை ஏற்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 30
சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வரும் பௌத்த பிக்கு ஒருவரின் மருத்துவச் செலவுகளை ஏற்க அரசு தீர்மானித்தது.
ராமன்ய நிக்காயவின் அனுநாயக்க தேரரான கிரிம்பே ஆனந்த தேரரின் மருத்துவ செலவுகளுக்காகவே அரசு மருத்துவக் கட்டணங்களை செலுத்த உள்ளது.
சிங்கப்பூர் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வரும் பௌத்த தேரருக்காக அரசு 2 லட்சத்து 50 ஆயிரம் டொலர்களை மருத்துவக் கட்டணமாகச் செலுத்த உள்ளது.
சிங்கப்பூரின் மவுன்ட் எலிசபத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தேரரின் மருத்துவக் கட்டணமும், பயணக் கட்டணமும் உள்ளடங்கியுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சால் இந்தக் கொடுப்பனவுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ற-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பான் கீ-மூனின் வருகை அரசுக்குச் சாதகமானது

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 30

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் இலங்கைப் பயணம் அரசுக்குச் சாதகமானது. ஜெனிவா நெருக்கடிகளில் இருந்து நாம் முழுமையாக விடுபட அவரது பயணம் உதவும்.

இவ்வாறு அமைச்சரும் அமைச் சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை மீதான பன்னாட்டு அழுத்தங்களை முழுமையாக குறைக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கின்றது. பன்னாட்டு அழுத்தங்களைப் பலப்படுத்தி நாட்டில் தொடர்ந்தும் குழப்பகரச் சூழல் ஏற்படுத்தவும் ஒரு சாரார் முயற்சித்து வருகின்றனர். தற்போது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் இலங்கைக்கான வருகையும்கூட தமது பக்கம் சார்பாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றனர். இவர்களது முயற்சிகள் அரசை அழுத்தத்துக்கு உள்ளாக்காது. தற்போது அவர் மீண்டும் இலங்கைக்கு வருகின்றமை இலங்கைக்குச் சாதகமாக அமையும்.

கடந்த காலங்களில் இருந்த நிலைமைகளைவிடவும், இப்போது நாட்டில் ஜனநாயகம் பலமாக அமைந்துள்ளது. வடக்கு மக்களின் நிலைமைகள் மாற்றம் கண்டுள்ளன. அண்மையில் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வடக்குக்குப் பயணம் மேற்கொண்டு, தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்தியுள்ளது. வடக்கில் மக்களுக்கான ஜனநாயக நகர்வுகளைக் கையாள்வது தொடர்பில் அரசு வாக்குறுதி வழங்கியுள்ளது. அவ்வாறான நிலையில் தற்போது அவரது பயணம் பன்னாட்டு அழுத்தங்களில் இருந்து முழுமையாக நாம் விடுபட வாய்ப்பாக அமையும்.

அவரது பயணத்தின்போது வடக்குக்கும் செல்லவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவுள்ளார். இந்த நகர்வுகள் வரவேற்கத்தக்கதாகும். அன்று இருந்ததை விடவும் தமிழ் மக்களும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இன்று இருக்கும் நிலைப்பாடு மாறுபட்ட ஒன்றாகும். அவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள பன்னாட்டுச் சமூகத்தினருக்கு நல்லதொரு வாய்ப்பை நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அவரது பயணத்தை நாம் வரவேற்கின்றோம். கடந்த ஜெனிவா தொடரின்போது இலங்கை அரசு செய்யவேண்டிய சில நகர்வுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக காணாமற் போனோர் தொடர்பில் ஆராயவும் நிரந்தர நல்லிணக்கம் ஒன்றை உருவாக்கவும் பலமாக வலியுறுத்தப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது. புதிய அரசமைப்பு மூலமாக நாம் மேற்கொண்டு வரும் நல்லிணக்கநகர்வுகள் மற்றும் பன்னாட்டு சமூகத்துடன் நாம் முன்னெடுத்து வரும் நகர்வுகள் என்பன எமக்குச் சாதகமாக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இவரது வருகை நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையில் அமையும் எனவும் அவர் பன்னாட்டு விசாரணைகள் மற்றும் இராணுவ நீதிமன்றம் போன்ற வற்றை அமைக்க வலியுறுத்த வருகின்றார் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான எந்தவொரு நகர்வுகளும் நடைபெறப்போவதில்லை. இலங்கையின் இறைமை பாதிக்கப்பட போவதுமில்லை. அடுத்த ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்க முன்னர், இலங்கை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களைப் பலப்படுத்தி கடந்த கால அழுத்தங்களில் இருந்து விடுபட இந்தப் பயணம் சாதகமாக அமையும் – என்றார்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் நாளை புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார். அவரது இலங்கைக்கான பயணம், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே என்று மகிந்த ஆதரவு தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். (ற-5)

கொலையுண்ட வர்த்தகருடன் ஒருவருக்கு நெருங்கிய தொடர்பு

கொழும்பு, ஓக. 30

பம்பலப்பிட்டி வர்த்தகர் சுலைமான் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இரு வியாபாரிகளில் ஒருவர், கொலை செய்யப்பட்ட வர்த்தகருடன் வர்த்தகக் கணக்கு வழக்குகளை நெருக்கமாகப் பேணிவந்துள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த இரண்டு வியாபாரிகளிடமும் இரகசியப் பொலிஸார் ஆறரை மணி நேர விசாரணையை மேற்கொண்டு வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் ஒரு கோடி ரூபாவை வர்த்தகருக்குக் கொடுக்கவேண்டியுள்ளமையும் தெரியவந்துள்ளது. அது தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரும், பம்பலப்பிட்டி பொலிஸாரும் வெவ்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று கொழும்பு நகரில் பதிவாகிய சி.சி.ரி.வி காணொலிகளையும் பொலிஸார் சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதேவேளை- இந்தக் கொலையுடன் தொடர்புபட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இரவு கோடீஸ்வரர் வர்த்தகரான மொஹமட் சகீப் சுலைமான் பம்பலப்பிட்டி கொத்தலாவலை வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு முன்பிருந்து கடத்திச் செல்லப்பட்டார்.

கடந்த 24ஆம் திகதி அவரது உருக்குலைந்த சடலம் மீட்கப்பட்டது.

நிதிமோசடி தொடர்பில் மேலும் சில வர்த்தகர்களுக்கு எதிராக மொஹமட் சகீப் சுலைமான் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு ஆகியவற்றில் முறைப்பாடு செய்திருந்தாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

மகிந்தவின் பின்னே செல்வதால் பலன் ஏதும் கிட்டப்போவதில்லை

அமைச்சர் நிமல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 30

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் ஜனாதிபதிமைத்திரிபாலவிடம் காணப்படும்போது, மகிந்தவின் பின்னால் செல்வதில் பலன் இல்லை.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கட்சியின் கொள்கைக்கு அமைய, மகிந்த கட்சியின் தலைமைத்துவத்தை மைத்திரியிடம் ஒப்படைத்துள்ளார். நாம் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்தது. மைத்திரிபாலவுக்குக் கட்சியின் தலைமைத்துவம் வழங்கப்பட்ட பின்னரும், அவருக்கு எதிராக சூழ்ச்சிகளைச் செய்வது, அவரது கால்களைப் பற்றி இழுப்பது என்பவற்றைச் செய்யக் கூடாது. சிலர் இரண்டு மனநிலைகளில் உள்ளனர். அங்கு செல்வதா? இங்கு செல்வதா? அவ்வாறு முடியாது.

நாம் ஒன்றைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கை சின்னத்துடன் எவர் இருக்கிறார்களோ அவர்கள் பக்கம் நிற்பதே சிறந்தது. அதை விடுத்து கட்சியின் தலைவரை விமர்சித்து எவராலும் முன்னோக்கிச் செல்லமுடியாது. நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதகு தனி நபர்களுக்காகப் பாடுபடவில்லை– என்றார். (ற-5)

இருபத்திரண்டாம் நாள் வீதியுலா

இருபத்திமூன்றாம் திருவிழா (சப்பறம்)

அரவணைத்துத் தேற்றிடையா!

நற்றமிழ்க் கடவுளாய்
நல்லையிலே கோயில் கொண்டு
நாற்றிசையும் புகழ் கமழ
நல்லாட்சி புரிபவனே
அற்புதங்கள் பலசெய்யும்
அம்மை அப்பன் திருமகனே
வற்றாத அருள் சுரக்கும்
வண்ண மயில் வாகனனே
உற்றவுன் அடியவரை
ஊறின்றிக் காப்பவனே
தேற்றுவார் எவருமின்றி
அரற்றுகிறோம் பிதற்றுகிறோம்
சற்குருவாய் நீயும்
சப்பைரதம் மீதமர்ந்து
சற்றெம்மை நோக்கிடையா
அரவணைத்துத் தேற்றிடையா!

– க.பாலசுப்பிரமணியம் வட்டுக்கோட்டை

சப்பரம் ஒரு மந்திரம்

முப்புரம் எரித்த முக்கண்ணன் மகிழ்ந்த
செப்புதிரு மூலரின் மந்திரம் இப்புவியில்
கல்லாதவரும் இருகரங்கூப்பும் நல்லூரிலே
எல்லோருக்கும் அதிசயமாம் சப்பரம்

சப்பை ரதம் பார்த்தால் சஞ்சலம் தீருமே
அப்பன் அம்மை அருள் கிடைக்கும் இப்பிறவி
தப்பேதும் இல்லாமல் எப்போதும் திகழ்ந்திட
செப்புவாய் சப்பர மந்திரம்

– கே.எஸ்.சிவஞானராஜா

உன்னருள் வேண்டுமையா என்றும்

அனலில் உதித்த நல்குமரா
புனலில் தவழ்ந்த திருமுருகா
நல்ல உணர்வில் பதிந்தகுருவே
வல்லவரங்கள் அருளும் திருவே
அருளில் பெருகும் அட்சயதேவே
இருளில் இருக்கும் எம்மைப்பாராய்?
எட்டவில்லை எமக்கு உன்னருள் கந்தா
கிட்டவே வந்து கிருபை செய் குகனே
கூப்பிய கைகளினுள் உன் குட்டிப்பாதங்கள்
வேண்டியதில்லாவிடினும் வேண்டுவது நீயே

– நாரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

உண்மைகளைக் கண்டறிவதற்கு பக்கச் சார்பின்மை அவசியம்

● இலங்கையின் கடந்த காலத்தைய மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத்தன்மை மிக்க, பக்கச் சார்பு எதுவும் அற்ற விசார ணைகளை முன்னெடுப்பதன் மூலமே குற்றவாளி களைப் பொறுப்பாளிகள் ஆக்க முடியும்.

● இலங்கை மக்களுக்கும் அந்த நாட்டின் எதிர்காலத்துக்கும் அது முக்கியமானது.

● பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப் பட்ட சமூகங்களும் தமக்கு நீதியைப் பெற்றுத்தரவல்ல, நம்பகத்தன்மை மிக்கதான, பன்னாட்டுப் பங்களிப்புடனேயே அது சாத்தியமாகும் என்று நம்புகின்றனர்.

● பொறுப்புக் கூறுவதற்கான செயற்பாடு களில் காணப்படும் தாமதங்களை அப்புறப் படுத்துவது அத்தியாவசியம்.

● அதனை நாடியே ஐ.நா.மனித உரிமை கள் ஆணையாளரின் அறிக்கையும் இலங்கை குறித்த தீர்மானமும்-- அனைத்துலகின் பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தின.

மேற்போந்த கருத்துக்களை வெளியிட்டி ருப்பவர் வேறு எவரும் அல்லர். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் அவர்களே.

● கடந்த காலத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்து நம்ப கத்தன்மை மிக்கதும், பக்கச்சார்பு அற்றதுமான விசாரணைகள் மூலம் உண்மைகளைக் கண்ட றிந்து கொள்வதும் அத்தியாவசியம் நிறைந் ததாகும்.

● மேலும் ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் பரந்துபட்ட தன்மையை கருத்தில் கொள்வது மிகவும் அவசியம்.

● அத்தோடு அனைத்துலகின் பங்களிப்புக் குறித்த விவாதம் எந்த வகையிலும் முக்கியமான விடயங்களை திசை திருப்பாது அமைய வேண் டும் -- என்றும் பான் கீ - மூன் வலியுறுத்திக் கூறி உள்ளார்.

இந்தப் பின்னணியில், அவர் தமது இலங்கை மற்றும் யாழ்ப்பாணத்துக்கான விசேட பயணத்தின்போது, இலங்கை குறித்து தமது மனதில் உள்ளவற்றை வெளிப் படுத்து வார் என்று எதிர்பார்க்கலாம்.

மறுவளமாகக் கூறின்--

அவரது இலங்கைக்கான பயணம் குறித்து பல்வகையான எதிர்பார்ப்புக்கள், பாதிப்புற்ற தமிழ் மக்கள் மனங்களில் உள்ளன என்பதை அவர் மனதில் கொண்டிருப்பார் என்று கருத லாம், நம்பலாம்.

மேலும்--

பாதிப்புற்ற தமிழர்கள் தமக்கான நீதி, நம் பகத்தன்மை மிகுந்த பன்னாட்டுப் பங்களிப் பின் ஊடாகவே, சாத்தியம் என்று கருதுவது நெளிவு, சுழிவு நோக்கற்றது.

எதற்கும்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தமிழ் மக் கள் மீதான வஞ்சகம் நிறைந்த தெல் லோட் டங்களின் விளைவுகள், இப் போதைய நல் லாட்சி அரசுக்கும் தொற்றிவிடாதிருக்க வேண்டும்.

தீதும் நன்றும் பிறர்தர வருவதில்லை. ஆட்சி அதிகாரம் தம் கையில் இருந்தால், தாம் விரும்பியதை எல்லாம் செய்து முடிக்கலாம் என்ற கொழும்பு அரசுகளின் கொட்டத்தை அடக்குவதற்கு ஐ.நா.சபை செயற்பட வேண்டிய வேளை இது.

பாதிப்புற்ற தமிழ் மக்கள் வேண்டுவது அதனையே.

குசல் பெரேரா

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி வியாழன் நாடாளுமன்றத்தில் காணாமற் போனோருக்கான அலுவலகம் சட்டவரைவு நிறைவேறியது. மிகவும் முக்கியம் வாய்ந்த இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டபோது நாடாளுமன்றத்தில் சிலர் அநாகரிகமான அருவருக்கத்தக்க நடத்தையை வெளிப்படுத்தினர். காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்வதற்காக நிறுவப்படவுள்ள இந்த அலுவலகம் ஒரு நிரந்தரமான பொறி முறையாக அமையவுள்ளது. "காணாமற் போனோர்" என்பதன் வரைவிலக்கணத்தில் வலிந்து காணாமற்போகச் செய்யப்பட்டவர்களையும் உள்ளடக்குவதாக உண்மையைக் கண்டறிதல், நல்லிணக்கம் என்ற விடயங்களில் முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கை காணாமற்போனோர் அலுவலகச் சட்டவரைவை நிறைவேற்றிய தன் மூலம் முக்கியமான நகரவை மேற்கொண்டுள்ளது. என்று ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் குறிப்பிட்டார். இச் சட்ட வரைவு நிறைவேறிய சில மணி நேரத்துக்குள் நிஷா பிஸ்வால், அரசைப் பாராட்டி செய்தி வெளியிட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசப் இவ்விதமே தமது ருவிற்றர் செய்தி மூலம் உடனடியாகவே பாராட்டை வெளியிட்டார். ஆயினும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகமோ அல்லது புது டில்லியின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சோ பாராட்டுரை எதனையும் கூற முன்வரவில்லை. இவை ஒரு புறம் இருக்க, காணாமற் போனோர் அலுவலகச் சட்ட வரைவை இலங்கையின் கள நிலைமையில் நல்லிணக்கம் தொடர்பாக முன்னேற்றம் காண்பதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துமா? என்பதே முக்கியமான விடயம். ஐ.நாவின் 30 ஆவது கூட்டத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டவற்றை இங்கு நினைவில் கொள்ளுதல் பொருத்தமானது.

2009 மே மாதம் முதல் போருக்குப் பிந்திய சமாதான நல்லிணக்க முயற்சிகளில் எமக்கு வெற்றி கிட்டவில்லை. போர் முடிவுற்றதும் நாம் வெற்றி வாதத்தையும் குறுகிய கொள்கைகளையும் கடைப்பிடித்தோம். எமது தேசிய ஐக்கிய அரசு நல்லிணக்கத்தைப் புதிய நோக்கில் பார்க்கிறது. அதனை அவசரமான முதன்மையான பிரச்சினையாகவும் நோக்குகிறது." இவ்வாறு கூறிய சமரவீர, இந்தக் காரணத்தால் இன்றைய அரசு நல்லிணக்கத்துடன் தொடர்புடைய பொது விடயங்களான உண்மையைக் கண்டறிதல் நிதி இழப்புக்களுக்கு நிவாரணம் வழங்கல், மீண்டும் அநீதியான செயற்பாடுகள் நிகழாதிருத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது என்று கூறினார்.

> "உண்மையைக் கண்டறிதல், நல்லிணக்கம் என்ற விடயங்களில் முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கை காணாமற்போனோர் அலுவலகச் சட்டவரைவை நிறைவேற்றியதன் மூலம் முக்கியமான நகரவை மேற்கொண்டுள்ளது. என்று ஐக்கிய அமொக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் குறிப்பிட்டார்."

அரச தலைவர்கள் இந்த விடயத்தை மூடிய கதவுகளுக்குள் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட செயல்முறையாகவே நடத்தினார்கள்.

நல்லிணக்கம் என்பதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். நல்லிணக்கம் ஏற்படுவதற்கு மேற்குறிப்பிட்ட நான்கு பொறிமுறைகளில் முதன்மையானதாக அமைவது காணாமற்போனோர் அலுவலகத்தை அமைத்தல் எனலாம். வேறுபட்ட நம்பிக்கைகள், கருத்துக்கள், முரண்பாடான நிலைகள் கொண்டவர்களாய் பிரிந்து நிற்கும் இருவேறு பிரிவினர் தமது வேறுபாடுகளை மறந்து எதிர்காலத்தில் ஒற்றுமை, சமாதானம், உறுதிநிலை என்பன ஏற்படவேண்டும் என்பதற்காக ஒன்றுபடுதலே நல்லிணக்கம் ஆகும். எமது இன்றையச் சமூகம் போன்ற முரண்பாடுகள் நிறைந்த பிளவுபட்ட சமூகத்தில் போருக்குப் பிந்திய சூழலில், நல்லிணக்கம் என்பது நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதேயாகும். அதற்காக சமூகப் பண்பாட்டு சுதந்திரமும் அரசியல் அதிகாரத்தில் உண்மையான பங்கேற்பும் அவசியமானதாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இடம்பெற்ற பொது விவாதத்தின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா. மனித உரிமைகள் தீர்மானம் 30:1 தொடர்பாக இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதி பற்றியே குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டோரும், சிவில் சமூகத்தினரும் ஒன்றிணைந்து தேசிய மட்டத்திலான ஆலோசனைச் செயல் முறையை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றும், அது மிக அவசியமான முன் தேவை என்றும் அவர் அங்கு கூறினார்.

2016 ஜனவரி மாதம், மூன்று மாத இடைவெளியின் பின்னர், தேசியமட்டத்தில் நிலைமாற்ற கால நீதி, நல்லிணக்கம் என்பன வற்றுக்காக 11உறுப்பினர்களைக் கொண்ட நல்லிணக்கப் பொறி முறைக்கான ஆலோசனைச் செயலணி அரசால் அமைக்கப் பட்டது. இதனை நம்பத் தகுந்த செயலணி என்று கூற முடியாதிருந்ததோடு ஜனவரி மாதம் முதல் என்ன நடைபெற்றது என்பது பொதுமக்களுக்குத் தொரியாமல் இருந்தது. வெளிவிவகார அமைச்சர் சமரவீர சிவில் சமூகத் தலைவர்கள் சிலர் மத்தியில் ஒரு வரைவை மே மாதத்தின் முற்பகுதியில் சமர்ப்பித்தார். இவ்வரைவையே வர்த்தமானியில் காணாமற்போனோர் அலுவலகம் சட்டவரைவை என்ற பெயருடன் பிரசுரமானது.

அரசு மேற்குறித்த விதமாக நடந்துகொண்டமை, பொதுமக்களுக்குக் காணாமற்போனோர் அலுவலகம் பற்றி அறிவூட்டுவதில் அது அக்கறை கொள்ளவில்லை என்பதை எடுத்துக் காட்டியது. வெவ்வேறு இனக் குழுமங்கள், சமயப் பிரிவினர், தொழிற் சங்கங்கள், தொழில் வாண்மைக் குழுக்கள், கலைஞர்கள், மாகாண சபைகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து முழுச் சமூகத்துக்கும் அறிவூட்டல் மூலம் நம்பிக்கையை வளர்த்திருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை. இதனால் சிங்களவர், தமிழர் என்ற இருபக்கத்திலும் இனவாத தீவிரவாத விளக்கங்கள் பரப்பப்படுவதற்கான வெளி உருவாக்கப்பட்டது. அத்தோடு தேவையற்ற பயம், சந்தேகம், என்பவை வலுப்பெறவும் இடமளிக்கப்பட்டது. காணாமற்போனோர் அலுவலகச் சட்டவரைவு உட்பட 04 பொறி முறைகளை ஏற்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டோரும் சிவில் சமூகத்தினரும் பரந்த அளவில் தேசிய மட்ட ஆலோசனையில் ஈடுபடும் செயல்முறையைத் தொடக்கி வைப்பதற்கும் இந்த அரசு வாக்குறுதி அளித்தது. அவ்வாக்குறுதி நடைமுறையில் பொய்யாகிவிட்டது. ஓகஸ்ட் 11ஆம் திகதி அவசரப்படுத்தி நிறைவேற்றியதை விடுத்து இச்சட்ட வரைவை இருவாரம் கழித்து ஓகஸ்ட் பிற்பகுதியில் ஏன் நிறைவேற்றியிருக்கக் கூடாது? அதனால் அரசு இழந்திருக்கப்போவது என்ன? அரசு தேவையற்ற, காரணமற்ற அவசரத்தைக் காட்டியது. 2 மணித்தியால கால அவகாசத்தில் கூச்சல், குழப்பம் மத்தியில் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் பகிரங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்போனோர் அலுவலகத்தின் தாபிதம்

–நல்லிணக்கம், நிலைமாற்றுகால நீதி பற்றிய அரசியல் –

விவாதம் நடைபெறுவதற்கு அரசு இடம் கொடுக்க வில்லை. நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தால் எழுப்பப்பட்டிருக்கக் கூடிய கேள்விகளுக்கு அரச தலைவர்கள் தகுந்த விளக்கத்தையும் பதிலையும் கொடுத்திருக்கலாம். பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தியிருக்கலாம். ஊடகங் களிலும் சமூகமட்டத்திலும் தீவிரவாதிகள் பரப்பிய தவறான விளக்கங்களுக்கு உரிய பதில் கொடுத்தி ருக்கலாம். காணாமற்போனோர் அலுவலகம் நிரந்தர மாக அமைக்கப்பட வேண்டியதன் தேவையைப் பொது மக்களுக்கு உணர்த்தியிருக்கலாம். காணாமற்போதல் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டியிருப்பதைத்தெளிவுபடுத்தியிருக்கலாம். அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விவாதம் தேவை யில்லை என்று கருதியிருக்கலாம். ஆனால் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் தேவை பொது மக்களுக்கு அவசியமானது.

காணாமற்போனோர் அலுவலகம் சட்டத்தில் கூறப் பட்டிருக்கும் முறையில் அல்லாது சிங்கள தீவிரவாதி களின் கருத்தியலுக்கு ஏற்ற முறையில் இந்த அலுவல கத்தின் செயற்பாடுகள் அமையக்கூடிய அபாயம் இப் போது எழுந்துள்ளது. காணாமற்போனோர் அலுவல கத்துக்கு எதிரான பரப்புரைகள் ஆயுதப்படையினர் தேசியபாதுகாப்பு என்ற வாதத்தை முன்னெடுப்பதற்கும் சிங்கள இனவாத தீவிரவாதிகள் போர் வெற்றி வீரர் களுக்கு குற்ற விலக்களிப்பு வழங்குவதை அறிவிப் பதற்கும், ஜனாதிபதி சிறிசேனவை இதற்கு இணங்க வைப்பதற்கும் வழியேற்படுத்திக் கொடுக்கும். போர் வெற்றிவீரர் விடயத்தில் ராஜபக்ச அரசுக்கும் இந்த அரசுக்கும் ஒரு போதும் வேறுபாடுகள் இருந்ததில்லை. சிங்கள சமூகத்தின் நியாயமற்ற வேண்டுதல்களை ஏற் றுத் திருப்திப்படுத்துவதில் சிறிசேனவுடன் ரணில் விக் கிரமசிங்க எப்போதும் இணங்கிப் போகின்றவராக இருக் கின்றார்.

வாக்குறுதிகள், வாய்ச்சொற்கள், எழுத்தில் வரையப்படாத விட்டுக்கொடுப்புகள் சிறிசேன – விக்கிரமசிங்க தலை மைத்துவத்தால் வழங்கப்பட்டிருந்தாலும், சிங்கள தேசியவாத அழுத்தத்துக்குக் காணாமற்போனோர் அலு வலகம் தாக்குப்பிடிக்குமா என்பது சந்தேகமே.

முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் நிலை தான் வழமைப்படி இதற்கும் ஏற்படும் என்றே கூறலாம். மக் கள் விடுதலை முன் னணி போர்க்குற்ற வி சா ர ணை யி ல் இ ரு ந் து போர் வெற்றி வீரர்களுக்கு விலக்கு அளிப்பதை ஒருபோதும் எதிர்க்கப் போவதில்லை என் பது திண்ணம்.

வடக்கு – கிழக்கு மாகா ணத்தவர்கள் இச்சட் டம் வழங்கும் வாய்ப் பைத் தவறவிடுதல் இயலாது. பயனுறுதி வாய்ந்த விசாரணைகளை நடத்தும்படி அவர்கள் கோரிக்கை விடுப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும். இச் சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் சிலவற்றை நீக்கவும், இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தவும் அவர்கள் விரும்பலாம்.

தகவல் அறியும் உரிமையை சட்டம் விலக்களித்திருப்பது தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதற்கான கார ணம் யாது என்பதை அறிவதற்கான தகவல் அறியும் உரிமை இருப்பதை அவர்கள் விரும்புவர். தெற்கில் உள்ளவர்களும் இச்சட்டத்தைப் பயன்படுத்துதல் தொடர் பாக ஒரு முன் உதாரணத்தை உருவாக்கலாம். அதன் மூலம் எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் சட்டங்களில் உரிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் தகவல் அறி யும் சட்டத்தை அர்த்தம் உடையதாக்கலாம்.

வடக்கிலும் – கிழக்கிலும் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங் கள் பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாத்தல் தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்குவர். இதற் கான பாதுகாப்பு முறைமை எந்தளவுக்கு செயற்றிறன் உடையதாக இருக்கும் என்ற கேள்வி உள்ளது. இதற் காக அதிகாரசபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சபையில் நம்பிக்கை வைக்க முடியாதுள் ளது. மேலும் தேசிய அதிகார சபையை வெளி மாகாணங் களில் உள்ளவர்கள் இலகுவில் அணுக முடியாதுள்ளது.

வடக்கிலும் – கிழக்கிலும் சாட்சிகள், இராணுவப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் உள்ளனர். கடந்த காலத்தில் இச்சாட்சிகள் ஆணைக்குழு விசார ணைகளில் பங்குபற்றியபோது அச்சுறுத்தலுக்கும் இம் சைகளுக்கும் ஆளாயினர். பயங்கரவாதத் தடைச்சட் டத்தை நீக்குவோம் என்ற வாக்குறுதி நிறைவேற்றப் படாததால் வடக்கு – கிழக்கு மக்கள் எதிர்மறை விளைவு களை எதிர்நோக்கியபடி உள்ளனர். இக் கொடுமையான சட்டம் சாட்சிகளை அச்சுறுத்தி மௌனமாக்க உதவுகிறது. இச்சட்டத்தின் துணையுடன் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கான சட்டம் வழங் கக் கூடிய பாதுகாப்புக்களை தடுக்கமுடியும். ஆகவே காணா மற்போனோர் அலுவலகத்தைத் தாபிக்க முன்னர் பயங் கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கியிருத்தல் வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பியிருந்தால் நாடாளு மன்றத்திலாவது ஒரு விவாதத்தை நன்முறையில் நடத்து வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரச தலைவர்கள் போன்றே சட்டவரைவை நிறைவேற்றப்படவேண்டும் என்பதி லேயே கவனம் செலுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தம்மைத் தெரிவுசெய்த தமிழ் மக்களின் பக்கத் தில் நிற்கவேண்டியது முதன்மையான பொறுப்பாகக் கொள்ள வேண்டும். இதனை விடுத்து அரசைப் பாது காப்பதை அது முதன்மைப் பொறுப்பாகக் கொள்கிறது.

தாம் மக்களின் சேவகர்கள் என இவர்கள் உணர்வது எப்போது?

நேற்று ஒரு பதிவுக்காக அரச அலுவலகம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் சட்டத்தில் கூறப்படாதவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்திக் கொண்டி ருக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அங்கிருந்த அலுவலர்கள் சொன்ன ஒரு விடயம் எனக்கு அதிக வியப்பாக இருந்தது.

உங்கள் ஒருவருடன் மட்டும் நாங்கள் பேசிக்கொண்டிருந்தால், எங்கள் வேலை களைக் கவனிக்க முடியாது என்றார் ஒரு பெண் அலுவலர். பொது மக் களுக் குத் திருப்திகரமாகச் சேவையாற்றுவதற்குத்தானே அரச அலுவலர்கள் நியமிக் கப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருக்க என் ஒருவருடன் மட்டும் அதிக நேரத்தைச் செலவிட முடியாது என்று அவர் சொன்னதன் பொருள் என்ன? இத்தனைக்கும் நான் கேட்ட கேள்விக்கு அவர்களிடம் சட்டரீதியிலான பதில் இருக்கவில்லை. கடைசியில் அவர்கள் தங்கள் நிபந்தனையைத் தளர்த்தி, என் கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருந்தார் கள். அப்படியிருக்கும்போது, என்னைப் போன்று எதிர்க் கேள்வி எழுப்புபவர்களுடன் அதிக நேரத்தைச் செலவிட முடியாது என்று எப்படி அந்த அலுவலரால் கூறமுடிகிறது. பொதுமக்களாகிய நாங்கள் சேவையைப் பெறுவதற்காகத்தான் அரச அலுவலகங்களை நாடுகின்றோம். எங்களைக் கண்ணியத்துடன் நடத்தி, தேவையான, முழுமையான விளக்கங்க ளையும் பதில் களையும் தரவேண்டியது அலுவலர் களினதும் அவர்களின் உயர் அதிகாரிகளி னதும் கடமைதானே? அதை ஏன் இவர்கள் புரிந்துகொள்கிறார்கள் இல்லை?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, அதிகமான அரச அலு வலகங்களில் அதிகமான அலுவலர்கள் இப்படியான போக்கில்தான் நடந்து கொள்கிறார்கள் என்பதால், எந்த அலுவலகத்தில் இது நடந்தது என்பதைக் குறிப் பிடாமலே விடுகின்றேன். அரசியல் தலைவர்களும் நிர்வாக உயர் அதிகாரிகளும் இது விடயத்தில் கவனம் எடுத்து, முதலில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த ஆவன செய்யவேண்டும். அரச அலுவலர்களுக்கு எதிரான என் முன்னைய கடிதங் களை இருட்டடிப்புச் செய்தது போன்று இதனையும் குப்பையில் தூக்கிப் போட்டு விடாமல் உதயன் வெளியிடவேண்டும்.

ஆசிரியர் குறிப்பு: எந்தக் கடிதமும் இருட்டடிப்புச் செய்யப்படுவதில்லை. முழுமை யான தரவுகளைக் கொண்டுள்ள, உங்களைப்பற்றிய முழுமை யான விவரங்களை உள்ளடக் கிய, இந்த முறை கிடைத்தது போன்றகடிதங்கள் முன்னரும் கிடைத்திருந்தால் கண்டிப்பாக வெளியிட்டிருப்போம். கடிதங்களை எழுதும்போது, சரியான தபால் முகவரி மற்றும் தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்களை கட்டாயமாகக் குறிப்பிடமறவாதீர்கள்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது (திரிபுபட்ட பழமொழி)

கடந்த 25 ஓகஸ்ட் 2016 வியாழக்கிழமை மதிப்பிற்குரிய உதயன் பத்திரிகையின் 12 ஆம் பக்கத்தில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் அனைத்துலக நியம ங்களை மேலெழுப்புமா? என்ற கேள்வி அடையாளத்துடன் பிரசுரமான செய்தி யில் மேற்குறிப்பிட்ட சோழியன் குடுமி சும்மா ஆடாது என்ற பழமொழிக்கு ஏற்ப அவசர அவசரமாகத் தாம் நினைத்த காரியத்தை செய்து முடித்துவிடும் போக்கு சம்பந்தமான கருத்துக்கு உவமானமாக கூறப்பட்டுள்ளது. இதில் சோழியன் குடுமி என்பது பழைய காலத்தில் சில ஆண்கள் தலையில் உள்ள மயிரை கூடுதலாக வெட்டி,பிடரியில் பின்பக்கமாக கொஞ்ச மயிரை மாத்திரம் வெட்டாமல் அதை வாரிச்சுருட்டி சிறியதாக கட்டுவது தான் சோழியன் குடுமி.

மேலும், போக்குவரத்துச் சாதனங்கள் குறைந்திருந்த அக்காலப் பகுதியில் மக்கள் தமது நடைப் பயணத்தின் போது,தாம் எடுத்துச் செல்ல வேண்டிய ஓரளவு பாரமான பொருள்களை தலையில் சுமந்து செல்வது வழக்கம் .பாரத்துடன் நடந்து செல் லும் போது களைப்பு ஏற்பட்டால் தலையில் உள்ள சுமையை இறக்கி வைப்பதற்கு வீதி ஓரங்களில் சுவர் மாதிரி கட்டி இருந்தது தான் சுமை தாங்கி. அது ஒரு புறம் இருக்க, அந்த சுமையை சுமந்து செல்லும் போது குறிப்பிட்ட சுமையின் பாரத்தி னால் தலையில் வேதனை ஏற்படாமல் தலையை பாதுகாக்க தலைக்கும் தலையில் இருக்கும் பாரமான சுமைக்கும் இடையில் பாதுகாப்புக்கு வைக்கப்படும் மிருதுவான பொருள் தான் சும்மாடு(சிம்மாடு) எனப்படும்.

ஆனால், சோழியன் தலையில் இருக்கும் கொட்டைப் பாக்கு அளவான குடுமி அந்த பாரத்தை தாங்கி தலைக்கு ஆறுதல் கொடுக்காது. ஆதலால் அந்தக்குடுமி சும்மாடு ஆக மாட்டாது என்பது சோழியன் குடுமி சும்மா ஆடாது என திரிபுபட்டு பழமொழியின் கருத்து மாறிவிட்டது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆகவே இது பற்றிய தங்கள் கருத்தை பெருமைக்குரிய வாசகப் பெருமக்கள் அறியத் தரவும்

செ.சிவகுரு J.P
மதியாமடு, புளியங்குளம்

தாங்கள் தீர்மானிக்கும் எதுவும் வாசகர் தரப்பு பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால், எவை எவை வெளியிடப்படும், குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UT
Twitter : UTHA

லொஸ் ஏஞ்சலிஸ் வானூர்தி நிலையத்தில் துப்பாக்கிச் சூடு?

வொஷிங்டன், ஓக.30

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்குள் புகுந்த மர்ம நபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற வானூர்தி நிலையத்துக்குள் இருந்து விமான நிலைய ஊழியர்களும், பயணிகளும் பதற்றத்துடன் வெளியேற்றப்பட்டனர்.

லொஸ் ஏஞ்சலிஸ் பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றி வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில், லொஸ் ஏஞ்சலிஸ் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற்று வருவதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கிடைக்கப்பெற்றன. இது குறித்து விசாரித்து வருகிறோம். பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன-என்றனர்.

வானூர்தி நிலையத்தின் ஒரு பகுதி மூடப்பட்டு, பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். ஆனால், சம் பவம் குறித்து இதுவரை எந்த தடயமும் கிடைக்கப்பெறவில்லை என ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (த-ரி4)

பன்னாட்டு இராணுவ இசை நிகழ்ச்சி ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கடந்த வாரம் இடம்பெற்றது. ரெ
தமது இசைத் திறமையை வெளிப்படுத்தினர். கண்கவர் உடைகளுடன், தமது நாடுகளைப் பிரதிபலிக்கும் எ

சிங்கப்பூரில் சீகா வைரஸ்

41 பேர் வரை பாதிப்பு

சிக்கப்பூர் சிற்றி, ஓக.30

சிங்கப்பூரிலிலும் சீகா வைரஸ் இனங் காணப்பட்டுள்ளது என அந்நாட்டுச் சுகாதார அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர். இதுவரை 41 பேர் சீகா வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிங்கப்பூரின் தென் கிழக்கு நகரான அல்ஜூனைட் பகுதியில் கட்டட வேலையில் ஈடுபட்டுள்ள வெளி நாட்டவர்களால் குறித்த தொற்று பரவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டமாக 124 கட்டடத் தெழிலாளர்களிடையே சோதனை நடத்தப்பட்டது. அவர்களில் இந்த 41 பேரும் இனங் காணப்பட்டுள்ளனர். இதனை அடுத்து இனங் காணப்பட்ட பகுதிகளில் நுளம்பு பரவுவதற்கான வாய்ப்புள்ள இடங்களில் மருந்து விசிறப்பட்டுள்ளது.

தாய்லாந்து, வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் 2013 ஆம் ஆண்டில் இருந்து சீகா வைரஸ் இனம் காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிக்கையை ஆதாரம்காட்டி சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது.

சீகா வைரஸ் சிசுக்களின் மூளை வளர்ச்சியைப் பாதிப்பதால் கருவுறும் பெண்களுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

முன்னதாக, பிரேஸிலில் ஆயிரத்து 600 குழந்தைகள் சிறு மூளைக் குறைபாட்டுடன் பிறந்துள்ளனர். இந்த நெருக்கடியைத் தவிர்க்க உலக சுகாதார நிறுவனம் சீகா வைரஸ் தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான சுற்றலாப் பயணிகள் ஆசியாவுக்கு வருகை தருகின்றனர். இதனால் சீகா வைரஸ் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் இந்த நோய் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என நிபுணர்கள் தெரிவித்தனர். (த-ரி4)

இஸ்லாமிய விருந்தினருக்கு தடை விதித்துள்ளது சீன அரசு

பீஜிங், ஓக.30

இஸ்லாமிய நாடு களில் இருந்து வரும் விருந்தனர்களை வரவேற்க வேண்டாம் எனச் சீனாவின் குவாங்சோ மாகாண விடுதிகளுக்குப் பொலிஸார் உத்தரவிட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது.

பாகிஸ்தான், ஈராக், துருக்கி, ஆப்கானிஸ் தான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் இருந்து இணையம் மூலம் பதிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம்எனப் பொலிஸார் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். அத்துடன் எதிர் வரும் செப்ரம்பர் 10 ஆம் திகதி வரை விடுதியில் அவர்களைத் தங்கவைக்க வேண்டாம் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நடவடிக்கைக்கான காரணத்தைப் பொலிஸார் தெரிவிக்க வில்லை.

இந்த நடவடிக்கை குறித்து சீன அயலுறவுத்துறை, இவ்வாறான அறிவிப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. ஏனைய நாடுகளுடன் நட்புறவாகச் செயற்படுவதே எமது கொள்கை எனத் தெரிவித்தது.

எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம், 5 ஆம் திகதிகளில் ஜி-20 மாநாடு குவாங்சோ மாகாணத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் கலந்து கொள்ளவுள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு, குறித்த மாகாணத்தில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக இதன்போது தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதைச் சீன உளவுத் துறையினர் உறுதி செய்து கொண்டதை அடுத்து, இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது. (த-ரி4)

சிரியாவுக்

நுழைந்த

35 பொதுமக்கள் உயிரிழப்ப

டமஸ்கஸ், ஓக.30

துருக்கிப் படையினர் அத்துமீறி சிரியாவுக்குள் நுழைந்து குர்திஷ் போராளிகளைத் தாக்கியதில் 35 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என மனித உரிமை அவதானிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

துருக்கிப் படைகள் சிரிய எல்லையில் அத்துமீறி நுழைந்து 5 நாள்கள் கடந்துள்ள நிலையில், இரு கிராமங்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுவருவதாக அவதானிப்புக் குழுவினர் மேலும் கூறியுள்ளனர்.

இந்த நி
பேரைக்
வில்லை
வெளியி
ஆனால்
அமைப்
துருக்கி
எனும் சி
படைகள்
சிரிய எ
வதைத்

கார்னிவேலில் பெரும் கலவரம்

லண்டனில் 411 பேர் காயம்

லண்டன், ஓக.30

லண்டனில் கார்னிவேலில் இடம்பெற்ற கலவரத்தின்போது 105 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐரோப்பாவில் இடம்பெறும் பிரமாண்டமான இந்தக் கார்னிவேலில் 4 கத்திக் குத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவத்தில் கிட்டத்தட்ட 411 பேர் காயமடைந்தனர் எனவும், அவர்களில் 77 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட 105 பேரும் திருட்டு, தூண்டுதல், கத்திக்குத்து, போதைப் பொருள் விற்பனை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் கோலாகலமாகத் தொடங்கிய விழாவில் இந்தச் சம்பவம் அரங்கேறியுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் பதின்ம வயதைச் சேர்ந்தவர்கள் என்றும், தாக்குதலுக்கு இலக் கான சிறுவன் ஒருவன் கவலைக்கிட மான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் குறித்த கார்னி வேலில் இடம்பெற்ற கலவரத்தில் 407 பேர் கைது செய்யப்பட்டனர். எனவே அவற்றைக் கருத்தில் கொண்டு இந்தமுறை 7ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ook : UTHAYAN.PRINT
er : UTHAYANPRINT

து. ரெட் சதுக்கத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், உலக நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினர்
க்கும் வாத்தியங்கள், ஆடைகளுடன் இராணுவத்தினர் கலந்து கொண்டனர். (தரி4)

க்குள் அத்துமீறி த துருக்கிப் படை

ப்பு என்று மனித உரிமைக் குழு குற்றச்சாட்டு

இந்த நிலையில், தாம் குர்திஷ் போராளிகள் 25 பேரைக் கொன்றதாகவும், பொதுமக்களைத் தாக்க வில்லை எனவும் துருக்கி இராணுவம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனால், இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து, குர்திஷ் அமைப்பு எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

துருக்கி எல்லையில் அமைந்துள்ள ஜெராப்லஸ் னும் சிரியாவின் கிராமத்தினூடாகவே துருக்கிப் டைகள் நுழைந்துள்ளன.

சிரிய எல்லைகளில் குர்திஷ் படைகள் ஊடுருவு தைத் தவிர்க்க இவ்வாறு அதிரடியாக நுழைந்த தாகத் துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால், குர்திஷ் படைகளுக்குத் துணைபுரியும் படையினரையும் குறிவைத்துத் துருக்கி களமிறங்கி யுள்ளது.

அத்துடன் துருக்கிப் படைகள் ஜப் அல் போசா மற் றும் அல் அம்ரா ஆகிய சிரிய கிராமங்களைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதாகவும் மனித உரிமை அவதானிகள் குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் துருக்கி இராணு வச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் துருக்கி இராணுவம் தெரிவித்தது. (தரி4)

1,100 ஆபிரிக்க அகதிகள் இத்தாலிக்குள் நுழைவு

சிசிலி கடற்கரையில் தரையிறக்கம்

ரோம், ஓக.30

இத்தாலியில் நேற்றுமுன்தினம் ஆயிரத்து 100 அகதிகள் தரை யிறக்கப்பட்டுள்ளனர்.

சிசிலி என்ற கடலோரப் பகுதியை அகதிகள் வந்தடைந்ததாக இத்தாலிக் கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

11 படகுகளில் பயணித்த இவர்கள், எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற தகவலைப் பாதுகாப்புப் படையினர் வெளியிடவில்லை.

இந்த நிலையில், சர்வதேச அகதிகள் அமைப்பு தெரிவிக்கையில், இந்த வருடம் மாத்திரம், ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 342 பேர் இத்தாலியைச் சென்றடைந்துள்ளனர். இத்தாலிக்கான பயணத்தின்போது மத்திய தரைக் கடலில் 2 ஆயிரத்து 726 பேர் உயிரிழந்துள்ளனர்-என்று கூறியுள்ளது.

அகதிகளை ஆதரிக்கும் நாடுகளில் இத்தாலி முன்னிலையில் செயற்பட்டு வருகின்றது. கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்து ஆபிரிக்க அகதிகள் 4 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு இத்தாலி வதிவிடம் வழங்கியமை குறிப்பிடத் தக்கதாகும். (தரி4)

சிறைக் காவலரை தாக்கி ஐ.எஸ். தீவிரவாதிகளை மீட்டுள்ளது ஆயுதக் குழு

பிலிப்பைன்ஸில் சம்பவம்



மனிலா, ஓக.30

பிலிப்பைன்ஸ் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஐ.எஸ். போராளி கள், ஏனைய 15 கைதிகள் ஆகியோரை வெளியே கொண்டு வருவதற்காக சிறைச்சாலைக்குள் புகுந்த ஆயுததாரி கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தென் பிலிப்பைன்ஸில் அமைந்துள்ள லெனோ டென்சார் மாகாண சிறைச் சாலையில் சம்பவம் இடம்பெற்றுள் ளது. இந்த முயற்சியின்போது கைதி கள் தப்பியதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆயுதங்களுடன் நுழைந்த 20 பேர் காவலரைத் தாக்கி, அவர்களின் துப் பாக்கிகளை வசப்படுத்திக் கைதிகளை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆயுததாரிகளால் மீட்கப்பட்ட 8 பேரும் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் சோத னைச் சாவடியில் குண்டு வைக்க முயற் சித்த குற்றத்துக்காகக் கைது செய்யப் பட்டவர்கள் எனக் கூறப்பட்டது. இவர் களுடன் ஏனைய குற்றச் சம்பவங் களுடன் தொடர்புடையவர்களும் தப்பியுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் ஐ.எஸ். அமைப்பை வளர்ப்பதற்கான சட்டவிரோத முயற் சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு உள்ளூர் போராளிக் குழுவினர் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். இதனால் தெற்கு பிலிப் பைன்ஸில் பல்வேறு சட்டவிரோதச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார், ஆயுதக் குழுக்களுடன் பேச்சு நடத்த முயன்றனர். ஆனாலும் அந்த முயற்சி கள் தோல்வியில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (தரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு விளாழி மாற்றம் எப்படி?

கும்பம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை-தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு கூப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள் வரை

அயன சயன ஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மனஅழுத்தம் மாறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். திடீர் பயணங்கள் லாபம் தரும்.

குருபகவான், சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். வரவு வந்தவுடன் செலவாகலாம்.

அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. இடமாற்றங்கள் வரப்போவது போல் தோன்றி கைநழுவிச் செல்லலாம்.

குருபகவான், சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும்.

திடீர் உத்தியோக வாய்ப்புக்கள் கிடைக்கும். மன அமைதிக்காக குடும்பத்துடன் கோயில் வழிபாட்டை மேற் கொள்வீர்கள். உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.7.2017 முதல் 1.9.2017 வரை): பொருளாதார வசதி பெருகும். புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். சுபகாரிய தடை அகலும். ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். உற்சாகத்தோடு செயற்படும் நேரம் இது. உடனுக்குடன் பல நல்ல முடிவுகளை எடுத்துக் காரியங்களை நடத்திக் காட்டுவீர்கள்.

மங்கையருக்கான மகத்தான பலன்கள்

கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தால் குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் வாங்கல்களில் பற்றாக்குறை அதிகரிக்கும். கணவன் -மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட்டாலும், மற்ற குடும்ப உறுப்பினர்களால் சச்சரவுகள் ஏற்பட்டு மன அமைதி குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

குறிப்பாக வக்ர குருவின் காலத்தில் பிள்ளைகளால் பெரும் விரயம் ஏற்படலாம். ராகுகேதுக்களை முறையாக வழிபட்டு சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது. பிரதோச வழிபாடு பெருமை சேர்க்கும்.

அக்கறை செலுத்த வேண்டிய வக்கிர காலம்

இந்த முறை குரு வக்ரம் பெறுவதோடு அதிசாரமாகவும் துலாம் ராசிக்குச் செல்கிறார். குரு அதிசாரத்தில் இருக்கும் பொழுது அற்புதமான பலன்கள் வந்து சேரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். முன்னேற்றம் வேகம் எடுக்கும். அதே நேரத்தில் குருவின் வக்ர காலத்தில் கூடுதல் விரயங்கள் ஏற்படலாம்.

கொடுக்கல் வாங்கல்களில் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு கவலையை உருவாக்கும் நேரம் இது. வருத்தமான சம்பவங்களும் நடக்கலாம். வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதமும் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் குரு வழிபாட்டை முழுமையாக மேற்கொள்வது நல்லது.

செல்வம் தரும் சிறப்பு வழிபாடு

ராசிநாதன் சனி என்பதால் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து வடக்கு நோக்கிய விநாயகரையும், வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரையும் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

மது மக்களுக்குப் பகை

எஸ்.கேதீஸ்வரா

சாராயக் கலாசாரத்தால் மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகமாறியுள்ளது. மது என்பது மக்களின் பகையாக மாறிக் குடும்பங்களைக் குலைத்து இன்று தமிழர்களின் வாழ்க்கையாக விதிவரைந்த பாதைபோல் மாறிவிட்டது. இதற்குக் காரணம் என்ன? சிந்திக்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து இங்கு வருபவர்களைக் காசுக் காகத்தான் வரவேற்கின்றார்கள் பெற்றோர்கள். சகோதரன் வீட்டிலிருந்து குடித்துக் கும்மாளம் அடிக்கும் போது தம்பியோ தங்கையோ தாய் தகப்பனோ அதைப் பற்றி ஒன்றும் பேசாமல் இருப்பதுதான் வேடிக்கை... ஏன்? வெளிநாட்டுக் காசு தம்மைவிட்டுப் போகக்கூடாது என்று அவர்கள் என்ன செய்தாலும் விட்டு விடுபவர்கள். சாராயக் கலாசாரம் தமிழர்களின் ஒவ்வொரு வீட்டிலும் வளர்வதற்கு நாமே காரணமாக வேண்டுமா? பெற்றோர்களே கொஞ்சம் சிந்தியுங்கள் உங்கள் பிள்ளைகளைத் தட்டிக் கேட்காமல் விட்டு விட்டதால் தான் இன்று சாராயக் கலாசாரத்தில் மூழ்கி விட்டார்கள். அன்று போர் எம்மைச் சீர்குலைத்தது. இன்று சாராய போதைவஸ்துக்கள் எம்மை வாட்டி வதைக்கின்றன. வெளிநாட்டுப் பணத்துக்காக உங்கள் பிள்ளைகள் என்ன செய்தாலும் பரவாயில்லை என்ற மனப்போக்கு இருந்தால் உங்கள் கண்ணை நீங்களே உங்கள் விரலால் குத்துவது போன்றது. கல்வி அறிவில் யாழ்ப்பாணம் முதலிடத்திலிருந்தது. இன்று நாமே அதை பாழ்படுத்தி விட்டோம். வெளிநாடு என்ற மோகத்தாலும் பணத்துக்காகவும் சாராயத் தமிழன் என்று மற்றவர்கள் கதைக்கும் அளவுக்கு மாறிவிட்டோம். கல்வி கனவுகளுடன் வாழ்ந்த தமிழன் இன்று வெளிநாட்டுக் கனவுகளுடன் வாழ்ந்து மற்ற இனத்தவர்கள் எமது தமிழர் இடங்களில் குடிபுகும் இடமாகமாற்றி விட்டனர். எமது தமிழ் அரசியல் வாதிகள் தமது இலாபத்துக்காகப் போராட்டம் செய்வதும் இன்று நடக்கும் நாடகங்கள். இதற்கெல்லாம் காரணமாக எமது கலாசாரத்தை வீணடிக்கும் நாமே காரணம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக நாம் வாழ்ந்து காட்டவேண்டும். மற்ற இனத்தவர்களைக் குற்றம் கூறி தமிழர்களுக்குத் தீங்கு செய்கிறார்கள் என்று எம்மவர் சாக்குப்போக்குச் சொல்லி என்ன பயன்? எம் இனத்தை நாமே படுகுழியில் தள்ளுவது ஏன்? தமிழனுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் நாம் தான் அதற்கு நல்லமுறையில் வாழ்ந்து காட்டவேண்டும். இன ஒற்றுமை, மத ஒற்றுமை என்றால் நாம் முதலில் போதையிலிருந்தும் வெளிநாட்டுக் கனவுகளிலிருந்தும் விடுபட்டு எமது தமிழர்களின் பிரதேசத்தை பலமும் சக்தியுடனும் நாமே உருவாக்கலாம். அரசியல்வாதிகள் எமது மக்களுக்கு நல்ல முறையில் பரப்புரைகளை மேற்கொண்டு எமது தமிழ் மக்களை நல்வழிப்படுத்தலாம்.

வெளிநாடு என்ற மோகத்தாலும் பணத்துக்காகவும் சாராயத் தமிழன் என்று மற்றவர்கள் கதைக்கும் அளவுக்கு மாறிவிட்டோம். கல்வி கனவுகளுடன் வாழ்ந்த தமிழன் இன்று வெளிநாட்டுக் கனவுகளுடன் வாழ்ந்து மற்ற இனத்தவர்கள் எமது இடங்களில் குடிபுகும் இடமாக மாற்றிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: சாரி

(மும்பையைச் சேர்ந்த கட்டுரையாளர், இந்தியாவில் முதியோர் இறப்பின் தரம் குறித்துப் புத்தகம் எழுதிக்கொண்டிருக்கிறார். இனி சிகிச்சையளிக்க முடியாது என்ற நிலையை எட்டிவிடுவோரைக் கடைசி நாள்களில் வலியில்லாமலும் நிம்மதியாகவும் குடும்பத்தாருடன் இருக்கவிடும் இயக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறார்.)

சாவில் நிம்மதியை அனுபவிக்கும் எமது அன்புக்குரிய முதியவர்கள்

ஓராண்டுக்கு முன்னால், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த என்னுடைய தந்தையைப் பார்த்தபோது, வலியாலும் வேதனையாலும் படுக்கையில் புலம்பிக்கொண்டும் புரண்டு கொண்டும் இருந்தார். அவருடைய அரற்றல் என் காதுக்கு எட்டாத தொலைவுக்கு ஓடிவிட வேண்டும் என்றே விரும்பினேன்.

84 வயதான அவர் எனக்கு உற்ற நண்பர். கையிலும் உடலின் வேறு பகுதியிலும் ஊசியாலும் ரப்பர் குழாய்களாலும் செருகப்பட்டு, தாள முடியாத வேதனையில் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அவரால் மருத்துவர்களையோ செவிலியர்களையோ எதிர்த்து எதுவும் பேச முடியவில்லை. ரப்பர் குழாய்களைப் பிய்த்துப் போடுகிறார் என்பதற்காக ஒரு கையைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டி வைத்திருந்தார்கள்.

மருத்துவமனை என்பது நோயாளிக்கு எந்தச் சுகமும் கண்ணியமும் கூடாது என்று நினைக்கிறதோ என்ற அளவுக்கு நடத்தப்பட்டார். அவருக்கு மாட்டியிருந்த மருத்துவமனைச் சீருடை அவிழ்ந்து, தோள் பகுதி முழுக்கத் தெரிந்தது. அவருடைய கழுத்துச் சதையில் கூர்மையான ஊசியை இறக்கியபோது கத்தவும் முடியாமல் தாங்கவும் முடியாமல் துடித்தார். மூடியிருந்த கண்களைத் தலையணை மேல் அழுத்தி வலியைக் குறைத்துக்கொள்ள முயற்சி செய்தார்.

திரவ ஆகாரம் செலுத்தப்படுவதற்காக மூக்கில் ஒரு குழாயும், சிறுநீரை வெளியேற்றுவதற்கு சிறுநீர்ப்பை அருகில் வேறொரு குழாயும், மூச்சுக்குழலில் சேரும் திரவத்தை வடித்தெடுக்க ஒரு உறிஞ்சு குழாயும் செருகப்பட்டிருந்தன. இவை போக நாடித்துடிப்பைக் கண்காணிக்க ஒன்று, இதயத் துடிப்பைத் தொடர்ந்து அறிய ஒன்று என்று வேறு சில கருவிகளும் பொருத்தப்பட்டிருந்தன. இதயத் துடிப்பு, நாடித்துடிப்பு, நுரையீரலில் சேரும் காற்றின் அளவு, உடலின் வெப்ப நிலை, ஒட்சிசன் அளவுபோன்றவைதொடர்ந்துகண்காணிக்கப்பட்டு பதிவிடப்பட்டன.

வேதனை புரியவில்லை

அவருடைய குருதி நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகித்தார்கள். அதற்கான ஆய்வுகளை நடத்தி முடிவுக்காகக் காத்திருந்தார்கள். இடையில் வெவ்வேறு அறிகுறிகளுக்காகச் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தார்கள். வலுவற்ற அவருடைய இதயத்தால் தாங்க முடியாது என்ற அச்சத்தில் வலி மறப்பு மருந்துகளோ, தூங்குவதற்கான மருந்துகளோ அவருக்குத் தரப்படவில்லை. அவருடைய கழுத்தில் செருகப்பட்ட ஊசி, கடுமையான வலியைத்தந்ததுடன், தலையை இடது புறமாகத் திருப்ப முடியாமல் தடுத்துக்கொண்டிருந்தது. சிறுநீரகங்கள் செயலிழந்துவிட்டதால், டயாலிசிஸ் எனப்படும் குருதி சுத்திகரிப்பையும் இவற்றோடு சேர்த்துக்கொண்டார்கள். தொடர்ந்து ஐந்து நாள்கள் இரவில் டயாலிசிஸ் நடந்தது. இதைத் தாங்க மறுக்கும் விதத்தில் இரண்டு முறை லேசான மாரடைப்பும் ஏற்பட்டது.

தாங்க முடியாத வலிகளை நமக்கு நெருக்கமானவர்கள் அனுபவிப்பதை நேரில் பார்ப்பதைப் போன்ற கொடுமை எதுவுமில்லை. நீங்கள் அளிப்பது கொடூரமான சிகிச்சை என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஒவ்வொருவரிடமும் கூறி என் வேதனையைப் புரியவைக்க முயன்றேன். வலியில்லாமலும் அமைதியாகவும் இறக்கவே அவர் விரும்பினார். நான் போவதற்குள் அவரை மருத்துவமனையில் சேர்த்த உறவினர்களும் மருத்துவர்களும் நான் சொல்வதைக் கேட்கத் தயாரில்லை.

அவர் உடல் நலம் தேறி, மருத்துவமனையை விட்டு நடந்து செல்வார் என்று நம்புகிறீர்களா? என்று பணியில் இருந்த மருத்துவரிடம், என் அம்மா இல்லாத சமயத்தில் கேட்டேன். அவருக்குப் பல உறுப்புகள் செயலிழந்துவிட்டன. அத்துடன் அவருக்கு குருதியிலும் சிறு நீரகத்திலும் நோய்த்தொற்று ஏற்பட்டிருக்கிறது. அவருடைய சிறுநீரகங்கள் செயலிழந்துவிட்டன. நிலைமை மோசம் என்று அவர் பதிலளித்தார்.

எவருடைய நன்மைக்காக?

நிலைமை அவ்வளவு மோசமாக இருந்தால் எதற்காக இந்த வயர்கள், ஊசிகள், டியூப்புகள்? எல்லாவற்றையும் அகற்றிவிட்டு வலியில்லாமல் இருக்க அவருக்கு மருந்து கொடுத்துத் தூங்கவைக்கக் கூடாதா? மிகவும் ஆபத்தானதும் வலியை அளிப்பதுமான டயாலிசிஸ் ஏன்? என்று ஆற்றாமையுடன் கேட்டேன்.

எங்களால் சிகிச்சையை நிறுத்த முடியாது. நோயாளியை உயிருடன் வைத்திருக்க எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்தாக வேண்டும் என்று அவர் பதிலளித்தார்.

இது எனக்குப் புரியவில்லை. கொடூரமான வலியைத்தந்தாலும் மேலும் சில நாள்களுக்கு நோயாளியை வாழவைக்க வேண்டும் என்று கடும் முயற்சிகளை மேற்கொள்வது எவருக்காக? மருத்துவப் பாடங்களைப் படிக்கும் மாணவர்கள் நோயையும் அதற்கு அளிக்கப்படும் சிகிச்சைகளையும் மருந்துகளையும் நேரில் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காகவா? இப்படிக் கேட்டு மருத்துவர்களை நான் கோபமடையவைக்க விரும்பவில்லை. அவர்களிடம் என் தந்தையை ஒப்படைத்துவிட்டோம். அவர்கள் அவருடைய உடலைப் பகுதி பகுதியாகப் பிரித்து வெவ்வேறு சிகிச்சைகளை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை முடிந்தால் - அவர்களால் தான் அவரை முழுமையானவராகத் திருப்பித்தர முடியும். மூன்று நாள்களுக்கு முன்னால்தான் அரை மயக்க நிலையில் இந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு லேசான நிவாரணம் தரக்கூடிய எதையாவது செய்துவிட வேண்டும் என்று துடித்தேன். வலியிலிருந்து விடுபட நிச்சயம், நீங்கள் மருந்து வைத்திருக்க வேண்டும். அதைக் கொஞ்சம் அவருக்குக் கொடுங்களேன் என்று மன்றாடினேன்.

அது ஆபத்தானது; நேற்றிரவு டயாலிசிஸின்போது அவருக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டது. குருதியில் ஏற்பட்டுள்ள நோய்த்தொற்றுக்காக இப்போதே அவருக்கு அதிக அளவில் மருந்துகளை உள் செலுத்தியிருக்கிறோம். வலி மறப்புக்கு மருந்து கொடுத்தால் சிக்கலாகிவிடலாம் என்று என்னை அனுதாபத்துடன் பார்த்துக்கொண்டே மருத்துவர் கூறினார்.

வலி மறப்பு மருந்து கொடுங்கள்

உடல் நிலை சிக்கலாகிவிட்டதா, அப்படியானால் அவர் இறந்துவிடுவாரா? என்று கேட்டேன். பதில் இல்லை, சும்மா என்னையே பார்த்துக்கொண்டிருந்தார் அவர். அந்த இடத்திலிருந்து சில அடிகளுக்கு அப்பால் வலி, வேதனை காரணமாக முனகிக்கொண்டும் ஈனஸ்வரத்தில் அரற்றிக்கொண்டும் இருந்தார் அப்பா. அவருடைய வேதனைக் குரல் தங்களுடைய காதுகளில் ஏறாததைப் போலவும், அவரைத் தாங்கள் பார்க்காததைப் போலவும் அவரைச் சுற்றிச் சுற்றி வந்து தங்களுடைய கடமைகளைச் செய்துகொண்டிருந்தனர் தாதியர்களும் மருத்துவர்களும்.

அவருக்கு வலி மறப்பு மருந்து கொடுங்கள் என்று மருத்துவரிடம் மீண்டும் கெஞ்சினேன். நாளை மூத்த மருத்துவரிடம் கேட்டு வருகிறேன் என்று அவர் பதில் அளித்தார். அன்று மாலை மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்குச் சென்றபோது அப்பா தூங்கிக்கொண்டிருந்தார்.

(தொடரும்)

உடல் நிலை சிக்கலாகிவிட்டதா? அப்படியானால் அவர் இறந்துவிடுவாரா? என்று கேட்டேன். பதில் இல்லை, சும்மா என்னையே பார்த்துக்கொண்டிருந்தார் அவர். அந்த இடத்திலிருந்து சில அடிகளுக்கு அப்பால் வலி, வேதனை காரணமாக முனகிக்கொண்டும் ஈனஸ்வரத்தில் அரற்றிக்கொண்டும் இருந்தார் அப்பா. அவருடைய வேதனைக் குரல் தங்களுடைய காதுகளில் ஏறாததைப் போலவும், அவரைத் தாங்கள் பார்க்காததைப் போலவும் அவரைச் சுற்றிச் சுற்றி வந்து தங்களுடைய கடமைகளைச் செய்துகொண்டிருந்தனர் தாதியர்களும் மருத்துவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் இன்றைய தினம்

1574 - குரு ராம் தாஸ் 4ஆவது சீக்கிய மதகுருவானார்.
1800 - றிச்மண்ட் வேர்ஜினியாவில் அடிமைப் புரட்சியை ஒத்தி வைக்கத் திட்டமிட்டிருந்த வேளையில், அதற்கு முன்னதாகவே, கபிரியல் புரொஸர் கைது செய்யப்பட்டார்.
1914 - டானன்பேர்க் போரில் ஜேர்மனியரால், ரஷ்யா தோற்கடிக் கப்பட்டது.
1918 - போல்ஸ்விக் தலைவர் விளாடிமிர் லெனின் பன்னி கப்லானால் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார்.
1945 - பிரித்தானிய ஆயுதப் படைகளால் ஜப்பானிடமிருந்து ஹொங்கொங் விடுவிக்கப்பட்டது.
1963 - மொஸ்கோ, வோஷிங்டன் தலைவர்களுக்கிடையேயான நேரடித் தொலைபேசி ஹொட்லைன் நடைமுறைக்கு வந்தது.
1967 - அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியாக முதல் ஆபிரிக்க அமெரிக்கரான துர்குட் மார்ஷாலின் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டது.
1974 - பெல்கிரேட்-டோட்மண்ட் ரயில் தடம்புரண்டு 153 பேர் உயிரிழந்தனர்.
1981 - ஈரான் ஜனாதிபதி மொஹமட் அலி ரஜாய் மற்றும் பிரதம மந்திரி மொஹமட் ஜவாட் பஹேநர் ஆகியோர் ஈரான் மொஹாஜிடினரால் குண்டு வைத்துக் கொல்லப்பட்டனர்.
1991 - சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதையடுத்து, அஸெர் பைஜான் சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரம் பெற்றது.
1992 - போர் நிறுத்தப்பட்டால் இரண்டு வருட காலத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தியென உறுதி கூறுகிறார் பிரேமா.
1995 - குடத்தனையில் சுப்பசொனிக் தாக்குதலில் மாணவி உடல் சிதறிச் சாவு. 11 பேர் காயம்; 5 வீடுகள் சேதம்.
1999 - மக்கள் கருத்துக் கணிப்பில் இந்தோனேசியாவிடமிருந்து சுதந்திரத்துக்கு ஆதரவாகக் கிழக்கு திமோர் வாக்களித் தது.
2005 - சுடர் ஒளி மீதான தாக்குதலுக்கு ஜே.வி.பியினரே பொறுப்பு எனத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே குரலில் நாடாளுமன்றில் கண்டனம்.
2005 - கத்தரினா சூறாவளி தாக்கி அமெரிக்காவில் 55 பேர் உயிரிழப்பு.
2006 - கடத்தப்பட்ட ஊடகவியலாளர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடுவிப்பு.
2014- இராணுவம் சதிப்புரட்சியில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட தையடுத்து, லெசதோ பிரதமர் டொம் தபனே தென் ஆபிரிக்காவுக்குத் தப்பியோடினார்.

தந்திரம் பலிக்காத வெளவால்

காட்டில் வாழும் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இடையே அங்குள்ள வசதிகளையும் வளங்களையும் பகிர்ந்து கொள்வதில், போட்டிகள் ஏற்பட்டு, காலப் போக்கில் அது சண்டையாக மாற்ற மடைந்தது.

பறவைகள் அனைத்தும் ஓர் அணியிலும் மிருகங்கள் அனைத்தும் ஓர் அணியிலு மாகக் கன்னை பிரிந்தன. சிங்கத்தின் தலைமையில் மிருகங்களும், கழுகின் தலைமை யில் பறவைகளும் அணி திரண்டன. வேகமாகத்தகவல் களைப் பரிமாறிக் கொண்டு பறவை களின் அணியில் புறாக் களும், மிருகங்களின் அணி யில் முயல்களும் தத்தமது அணிகளுக்குப் பலம் சேர்த்தன.

தகவல்களின் அடிப்படையில் குறித்த தினத்தன்று மிருகங்களும் பறவைகளும் பெரும் சமவெளி ஒன்றில் திரண்டன. இரு அணிகளும் தத்தமது பிரதிநிதிகள் மூலம் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டன. காட்டின் அமைதி மற்றும் நலன்களைப் பேணும் முயற்சியாக மேற்கொள்ளப் பட்ட இந்த முயற்சி தோல்வியில் முடிந் தது.

இரு அணிகளும் போர் புரிவதன் மூலமே முடிவு காண முற்பட்டன. எவ்வளவு திமிர் இந்தப் பறவைகளுக்கு. இவர்களை மேலெழ விடக்கூடாது. அடியோடு அழித்துவிட வேண்டும் எனக் குள்ள நரி விலங்குகளுக்குத் தூபமிட்டது. பறவை களை உண்ணும் நப்பாசையில் இதே யோசனையை வலுக்குறைந்த மிருகங் களும் ஆமோதித்தன.

பறவைகள் பக்கத்திலோ காகங்கள் அங்குமிங்கும் பறந்து பறந்து மிருகங் களை அழித்தே ஆக வேண்டும் என்று அவற்றைத் தூண்டி விட்டன. இறந்த விலங்குகளின் அழுகும் உடல்களைத் தின்னும் கெட்ட ஆசையில் பறவைகளும் சேர்ந்து ஆர்ப்பரித்தன.

இவற்றுக்கிடையில் வெளவால் மட்டும், தான் எந்த அணியில் சேர்வது என்று தெரி யாமல் திண்டாடிக் கொண்டிருந்தது. உண் மையைச் சொல்லப் போனால் நடித்துக் கொண்டிருந்தது. தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நப்பாசையில் அது இவ்வாறு நாடகமாடியது.

"நீ எங்களைப் போல் பறந்து திரிகிறாய். மரங்களின் உச்சியில் உள்ள பழங்களைப் பறந்தே பறித்துச் சாப்பிடுகிறாய். நீ எம் இனம்தான் இந்தப் பக்கம் வா" என்றன பறவைகள். "சீச்சீ நீ எங்கள் இனம்தான். ஏனெனில் நீ எங்களைப் போல் குட்டி ஈனுகிறாய். குட்டிகளுக்குப் பாலூட்டு கிறாய். எனவே, இந்தப் பக்கம் வா" என்றன மிருகங்கள்.

"எனக்குத் தெரியும் என்ன செய்வது என்று நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்றது வெளவால். போர் ஆரம்பமாகிவிட்டது. இரண்டு அணிகளும் பலமாக மோதிக் கொண்டன.

முதல்நாளில் போரில் மிருகங்கள் வெல் லுமாப்போல் இருந்தது. அந்த அணி யிடம் சென்ற வெளவால் "நான் மிருகம் தானே உங்களுடனே இருக்கிறேன்" என்றது. மிருகங்களும் அதனை ஆமோ தித்துத் தமது அணியில் இணைத்துக் கொண்டன. மறுநாள் நடந்த போரில் பறவைகள் வெற்றிபெறுவதுபோல் இருக்கவே மெதுவாகப் பறந்து சென்று "ஐயோ நான் நேற்றுத் தெரியாமல் அந்தப் பக்கம் போய் விட்டேன்." நான் பறவைதானே என்றது. பறவைகளும் போனால் போகிறது என்று இருந்து விட்டன.

இப்படியாகத் தினமும் கட்சிமாறிக் கொண்டிருந்த வெளவாலின் தந்திரம் இரு அணியினருக்கும் புரிந்து விடவே, அவை வெளவாலை அடித்தும் கொத்தியும் விரட்டின. இரண்டு அணி யினராலும் ஒதுக்கிவிடப்பட்டதனால்தான் வெளவால் குகைளிலும் மற்றும் இருளான பாழடைந்த இடங்களிலும் தலைகீழாகத் தொங்கியபடி இருந்து விட்டு இரவில் மட்டும் வெளிவரு கின்றதோ?

லோகானந்தன்.

யானை

தேர் ஒன்று மெல்ல அசைந்து
வருகுது நீயும் பாரம்மா
செவிகள் இரண்டும் அழகாய்
மேலே தெரியுது பாரம்மா
கருமேகத்தை நிறமாகக் கொண்டு
வருகுது பாரம்மா – அதன்
கழுத்தில் மணியொன்று கிலு கிலு
என்றது நீயும் கேளம்மா
நீண்ட தும்பிக்கையுடன்
பாரம் தூக்க
வருகுது பாரம்மா
நீரில் இறங்கி நீச்சலடிப்பதை
நீயும் பாரம்மா
உலக்கையைப் போன்று
உருண்டைக் கால்கள்
இருப்பதைப் பாரம்மா – அதன்
உதவியாலே எத்தனை வேலைகள்
செய்வதைப் பாரம்மா.



வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒதுக்கிவிடப்பட்ட கல்லே கட்டடத்தின் மூலைக்கல்

"ஒதுக்கிவிடப்பட்ட கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று" எனக் கத்தோலிக்கர்கள் தமது புனித நூலாகக் கருதும் வேதாகமத்தில் ஓர் வசனம் உள்ளது. எந்த விடயத்தில் யாருக்கு இது பொருந்துமோ இல்லையோ அண்மையில் முடிவடைந்த ரியோ ஒலிம்பிக் தொடரில் அமெரிக்காவுக்குச் சிறப்பாகப் பொருந்தும் வண்ணமாகவே அமைந்துள்ளது.

ரியோ ஒலிம்பிக் தொடரில் அமெரிக்காவுக்குப் பதக்கம் வென்றுகொடுத்த பல வீர, வீராங்கனைகளில் ஒருவர் தான் சீமோன் மனுவல். நீச்சல் போட்டியிலேயே இவர் தங்கப் பதக்கம் வென்றுகொடுத்தார். ஒலிம்பிக் வரலாற்றில் நீச்சல் போட்டியில் முதல் தங்கம் வென்ற கறுப்பினப் பெண் சீமோன் மனுவல்தான். தங்கம் வென்றதன் பின்னர் அவர் ஆரவாரம் செய்யவில்லை, ஆர்ப்பரிக்கவில்லை கத்திக்குளறி கூப்பாடு போடவில்லை. மாறாக, கண்களில் நீர் பெருக்கெடுக்க அழுதார். அது ஒரு சாதாரண அழுகையல்ல. ஏக்கத்தின் அழுகை. தவிப்பின் அழுகை. உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த அழுகை.

அமெரிக்கக் கறுப்பினம் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் அடிமைப்பட்டுக் கிடந்தது. அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஏகப்பட்ட நிபந்தனைகள், கட்டுப்பாடுகளில் ஒன்றுதான் பொது இடங்களில் குளிக்க இயலாது என்ற கட்டளை. 1953 ஆம் ஆண்டு லொஸ் வெகாஸில் உள்ள ஒரு விடுதியில் உள்ள நீச்சல் குளத்தில் கறுப்பினத்தவரும், திரைப்பட நடிகருமான டேன் ரிட்ஜின் பாதம் பட்டதற்காக, குளத்தில் இருந்த அவ்வளவு நீரையும் வெளியேற்றிச் சுத்தம் செய்தனர்.

1964 ஆம் ஆண்டில் புளோரிடாவில் உள்ள ஒரு கேளிக்கை விடுதியில் நீச்சல் குளத்தின் அருகே ஒரு பார்வையாளனாக நின்று கொண்டிருந்த கறுப்பின இளைஞன் ஒருவன் ஆர்வத்தில் குதித்துவிட்ட காரணத்தால், அவர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதோடு, அந்த விடுதியின் மேலாளர் அமிலத்தை நீரில் கலந்து வெறுப்பை வெளிப்படுத்தினார்.

1987 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பிரபல கலைஞராக இருந்த அல் கம்பனிஸ் என்பவர், கறுப்பினத்தவர்கள் இயல்பாகவே நீச்சல் தெரியாதவர்கள் என்றார். இவருடைய கருத்து அக்காலத்தில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பொதுவான கருத்தாகவும் வலுத்திருந்தது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாறான கருத்துக்கள் பொய்த்திருக்கின்றன. கறுப்பினத்தவர்களின் அடிப்படை உரிமைகள் ஒன்றில் கை வைத்து அந்த இனத்தை இழிவுபடுத்திய அமெரிக்கா, இன்று அதே இனத்தால் அதே விடயத்தில் தலைநிமிர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த பதக்கம் எனக்கானது அல்ல. அமெரிக்க மக்களுக்குச் சொந்தமானது. குறிப்பாக எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்திய எனது முன்னோர்களுக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறேன் எனத் தனக்கு முன்னைய தலைமுறைகள் பட்ட துன்பத்தை 206 நாடுகள் சந்தித்துக்கொண்ட ஒலிம்பிக் தொடரில் உரக்கக் கூறியிருக்கிறார் சீமோன் மனுவல். இவை எல்லாவற்றையும் தாண்டி அமெரிக்காவில் இன்றும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது கறுப்பினத்தவர்களுக்கு எதிரான ஆதிக்க வெறி. உலகின் வல்லரசாகத் தெரிவித்து, அடுத்தவர் கண்ணை வேவு பார்க்கும் அமெரிக்கா, தனது முதுகில் உள்ள கூளங்களைத் தட்டிக் கழிப்பது காலாகாலமாகவே இடம்பெற்று வருகின்றது.

இந்துக்களும் சூரிய வழிபாடும்

காரை எம்.பி.அருளானந்தன்

சூரியன் உலகத்தின் தந்தையாகக் கருதப்படுபவன். ஒளியில்லை என்றால் இந்த உலகில் பயிர் பச்சை தழைக்காது, உலகம் உய்யாது என்பது அறிவியல் பூர்வமான உண்மை. ஒளிக்கு மூல கர்த்தாவாக விளங்குபவன் சூரியன். படைப்பின் சூக்குமமாக விளங்கும் சூரியனை வழிபடுவது உலகின் பல நாடுகளிலும் உள்ள வழக்கமாகும்.

மழை பொழிவதற்கும் மனித இயக்கத்துக்கும் சகல உயிர்களை வாழ்விப்பதற்கும் ஆதார சுருதியாக விளங்கும் ஆதவனை அடிப்படையாகக் கொண்டே வாரத்தின் முதல் நாள் ஞாயிறு எனக் கொண்டாடப்படுகின்றது.

சூரியஅமைப்பு

புவியின் அளவை விட பதின்மூன்று இலட்சம் மடங்கு பெரியதாகவும் புவியிலிருந்து சுமார் பதின்மூன்று கோடி கிலோமீற்றர் தொலைவிலும் இருக்கிறது இந்தக் கிரகம். ஏனைய எட்டுக் கிரகங்களும் சூரியனை மையமாகக் கொண்டு சுழலுகின்றன என்கின்றது வான சாஸ்திரம். பூமி தன்னைத் தானே சுற்றி வருவதனால் இரவும் பகலும் உலகில் தோன்றுகின்றன.

தனிச்சிறப்பு வாய்ந்த சூரியனின் வழிபாடு மனித இனம் தோன்றிய நாள் முதல் இருந்து வந்திருக்க வேண்டும். அதன் சுவடுதான் இன்றும் இந்த வழிபாடு எமது வாழ்வுடன் இணைந்து நிற்கக் காரணமாக இருக்க வேண்டும். சூரியனை வழிபடும் முறைக்கு "சௌரம்" என்று பெயர். உழவர் திருநாளான பொங்கலன்று ஆதவனைப் பொங்கலிட்டு வணங்குவது இன்றும் எம்மிடையே நிலவி வருகின்றது. மகாபாரதத்தில் யுதிஷ்டர் சூரியனை வழிபட்டு அனைவருக்கும் அன்னம் அளிக்கக் கூடிய அட்சய பாத்திரத்தைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

வேதகாலத்தில் சூரியன்

சூரியனை ஏழு குதிரைகளைக் கொண்ட ரதம் மீது ஆரோகணிப்பவனவாக ரிக் வேதம் அறிமுகப்படுத்துகிறது. இந்த ரதத்தின் சக்கரங்களே காலச் சக்கரங்களாகவும் ஏழு குதிரைகளே வார நாள்களாகவும் கூறப்படுகிறது. கதிரவன் காலத்தின் கடவுளாக நிர்ணயிக்கப்பட்டதுடன் வேத கால மக்கள் ஒருவன் இறந்த பின் அவனுடைய ஆத்மா சூரிய வட்டத்தை அடைவதாகவும் நம்பினார்கள்.

இந்துக்களின் நம்பிக்கை

சூரிய நமஸ்காரம் இந்துக்களின் வாழ்வில் இன்றியமையாததொன்று. யோகாசனங்களில் மிகமுக்கியமான அம்சமாக திரிகால சந்தியா கருதப்படுகின்றது. (காலை மத்தியானம் அந்திசாயல்) சூரியனுக்கு வழிபாடு செய்வது இந்துக்களின் கடமையாகிறது.

சூரியன் கண்ணோடு தொடர்புடைய நோய்களை நீக்க வல்லதாக வேதங்கள் கூறுகின்றன. குறிப்பாக பார்வையற்றவர்களுக்கு சூரியன் பெரும் பயன் தருகின்றான். இதனால் தான் இந்துக்கள் அதிகாலையில் சூரியநமஸ்காரத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றனர். இதனால் நரம்பு மண்டலமும் சீரண உறுப்புக்களும் வலுப்பெறும். சுவாச உறுப்பும் பலமடையும்.

சூரியனின் பன்னிரண்டு நாமங்களையும் சொல்லி பன்னிரு நமஸ்காரங்களையும் செய்கின்ற சூரிய நமஸ்கார முறை என்பது பழம் பெரும் நூல்கள் கூறுவதாகும். சிவாலயங்களிலும் சிவவழிபாட்டிலும் முதன்மை பெறுவது சூரிய வழிபாடு.

"உலகம் உவப்ப வல நேர்பு
திரிதரு பலர் புகழ் ஞாயிறு"

இத்தகு பகலவனை தமிழர் பண்டு தொட்டு சூரியனை வணங்கி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுடோக்கு எண் விளையாட்டு

	1		9			3		
2		8		5	4	7		
3	5							
1				3	9		8	
	4		6	1				3
							3	6
		2	4	7		8		1
		4			6		7	

நேற்றைய சுடோக்கின் விடை

4	2	6	3	5	7	1	9	8
7	1	3	9	8	6	5	4	2
8	5	9	2	1	4	7	6	3
2	8	5	6	9	3	4	7	1
3	6	1	4	7	5	2	8	9
9	4	7	1	2	8	3	5	6
1	7	2	5	6	9	8	3	4
5	9	4	8	3	2	6	1	7
6	3	8	7	4	1	9	2	5

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல்வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தல-தளபதி என்று ரசிகர்களால் அன்போடு அழைக்கப்படும் அஜித், விஜய் இருவரும் தற்போதைய தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத நம்பிக்கை நட்சத்திரங்களாக உள்ளார்கள். இதனால், இவர்களது படங்களுக்கு அதிக வரவேற்பு உள்ளது.

இந்த நிலையில், வளர்ந்து வரும் முன்னணி நாயகனான சிவகார்த்திகேயனின் படத்திற்கும் நல்ல வரவேற்பு உயர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

விரைவில் வெளியாக உள்ள 'ரெமோ' படம் இதுவரை ரூ. 35 கோடி வரை விற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அஜித், விஜய் ஆகியவர்களின் படங்கள் இந்த வியாபாரத்தைத் தொட 40 படங்கள் வரை தேவைப்பட்டன. ஆனால், குறுகியகாலத்தில் சிவகார்த்திகேயன் இந்த வியாபாரத்தை எட்டியிருக்கிறார். 'ரெமோ' படம் சிவகார்த்திகேயனின் 10ஆவது படம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேடம்: நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல்நிலை திருப்தியளிக்கும்.

இடபம்: மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

மிதுனம்: அளவுடன் பேசுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் முதலீடு அதிகம் தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

கடகம்: மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். அரசியல்வாதிகளுக்கு, புதிய பதவிபெற வாய்ப்புண்டு.

சிங்கம்: அன்றாடப் பணியில் தாமதம் உண்டாகும். நல்லோரின் ஆலோசனை கைகொடுக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும்.

கன்னி: அவமதித்துப் பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

துலாம்: பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். நல்லவர்களின் உதவிகிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

விருச்சிகம்: முக்கியமான செயல் நிறைவேறத் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் தடைகளைச் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

தனுசு: எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். உறவினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை உண்டாகும்.

மகரம்: புதியவர்களின் நட்பால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

கும்பம்: மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். எதிர்மறையாக தெரிந்த செயலில் நன்மை உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். சுப விடயம் குறித்த பேச்சு நடந்தேறும்.

மீனம்: புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சேமிப்பு உயரும். சந்தோச நிகழ்வுகளை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது புதுசு

ஆண்களுக்கான டிசைனர் ரீசேட்டுகள் அறிமுகமாகியுள்ளன. வித்தியாசமான கழுத்து வடிவமைப்பில் இவை உருவாக்கப் பட்டுள்ளன. இவை, 700 ரூபாவில் இருந்து 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

உணவை ஆரோக்கியமாக எப்படி சமைப்பது?

- காய்கறிகளை மிகச்சிறிய துண்டுகளாக ஒரு போதும் நறுக் கக்கூடாது. சிறிதாக நறுக்கும் போது, அவைகளில் இருக்கும் சாறு வெளியேறி சத்துக்கள் குறையும்.
- சமையலுக்கு தரமான எண்ணையை பயன்படுத்த வேண்டும். பாத்திரத்தில் எண்ணையை ஊற்றி சூடாக்கு வதற்கு பதில், பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடாக்கி விட்டு, அதன் பின்பு எண்ணையை ஊற்றவேண்டும். எண்ணையை ஊற்றிய பின்பு அடுப்பில் எரியும் தீயின் அளவை குறைத்துவிடுங்கள். இவ்வாறு செய்தால், எண்ணையில் இருந்து வெளியேறும் இரசாயனத்தன்மையின் தாக்கமும் குறைவாகவே இருக்கும்.
- எலுமிச்சம் பழம், பால் போன்ற இரண்டையும் சேர்த்து ஒன்றாக எந்த உணவும் தயாரித்து சாப்பிடக்கூடாது. பாலும், எலுமிச்சையும் சேர்ந்தால் திரிந்து போகும். ஏத்தன் பழமும் பாலும் சேர்த்துச் சாப்பிட்டால், சளித்தொல்லை அதிகரிக்கும்.
- நெய் சேர்க்கும் உணவில் சிலர், தனிச்சுவை கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சிறிதளவு எண்ணெயும் சேர்ப்பார்கள். அப்படி சேர்ப்பது ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல.
- பாகற்காய், வெந்தயம் போன்றவை களில் இருக்கும் கசப்புத் தன்மையை போக்க எந்தப் பொருளையும் அதனு டன் சேர்க்காதீர்கள். ஏன் என்றால் அவை இரண்டின் மூலமும் உடலுக்கு தேவையானதே கசப்புத்தான். அந்த கசப்பை நீக்கிவிட்டு அவைகளை சாப்பிட்டு எந்த பலனும் இல்லை.

நாளை
ஆவணி-15
புதன்கிழமை -31.08.2016
திதி: சதுர்த்தசி பி.ப.02.57
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.11.28
ராகுகாலம்: 12.05-01.35 வரை
சுபநேரம்:04.35-06.05 வரை

முட்டைப் பணியாரம்

தேவையான பொருள்கள்
இட்லி மா – ஒரு கப்
முட்டை – 2
சின்ன வெங்காயம் – 25 கிராம்
பச்சை மிளகாய் – 2
கறிவேப்பிலை – 1 கெட்டு
கடுகு – 1/4 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு – 1/2 தேக் கரண்டி
உப்பு – தேவையான அளவு
எண்ணெய் – 2 தேக்கரண்டி

செய்முறை :
வெங்காயத்தை நீளவாக்கில் நறுக்கவும்.
பச்சைமிளகாய், கறிவேப்பிலையை பொடியாக நறுக்கி வைக்கவும்.
முட்டையை ஒரு பாத்திரத்தில் ஊற்றி நன்கு அடித்துக் கலக்கவும்.
அடித்த முட்டையை இட்லி மாவுடன் சேர்த்து நன்றாக கலக்கவும்.
பின்னர், அதனுடன் உப்புச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.
சட்டியில் 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு போட்டுத் தாளிக்கவும். அதனுடன் நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை போட்டு வதக்கி முட்டை ஊற்றி கலந்த இட்லிமாக் கலவையுடன் தாளித்த பொருள்களைச் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.
குழிப்பணியாரக்கல்லில் ஒவ்வொரு குழியிலும் சிறிது எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், ஒரு கரண்டியில் மாவை எடுத்து பணியாரக்கல்லில் முக்கால்பாகம் அளவிற்கு ஊற்றவும்.
பணியாரம் ஒருபக்கம் வெந்ததும் திருப்பிப் போட்டு நன்கு வேகவிட்டு எடுக்கவும்.
முட்டைப் பணியாரம் தயார்.

நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

முள்ளங்கி	40	60	60	80	40	30	30	20
கத்தரி	50	60	50	60	60	40	90	40
கரட்	100	120	160	120	100	120	110	100
மரவள்ளி	100	90	100	80	70–80	80	80	50
பயிற்றை	40	50	70	120	50	100	100	60
பாகல்	120	80	100	120	100	120	150	80
கருணைக்கிழங்கு	100	120	140	160	100	100	120	80
பெ.வெங்காயம்	100	90	80	90	90	90	75	80
சி.வெங்காயம்	80	80	60	80	70	100	90	60
பூசணி	60	35	50	50	30	40	70	40
தக்காளி	40	60	60	60	40–50	50	120	40
வாழைக்காய்	100	80	80	120	80	60	70	40
கீரை	30	20	30	15	30	20	20	20
பொன்னாங்காணி	25	40	30	35	20	30	20	10
பச்சை மிளகாய்	100	90	160	120	70–80	300	200	140
புடோல்	40	35	40	60	40–60	40	70	40
கோவா	100	100	120	120	100	120	90	80
வெண்டி	40	60	50	60	40	60	70	20
போஞ்சி	120	140	200	180	180	200	130	120
லீக்ஸ்	100	110	120	120	100	120	90	100
தேங்காய்	40	25	40	30–35	25–30	30	15–25	25
உருளைக்கிழங்கு	100	100	100	100	100	100	85	100–120
தேசிக்காய்	80	200	240	240	220	200	120	150
வல்லாரை	15	20	10	15	10	20	10	10
கறிமிளகாய்	150	100	140	160	140	200	200	100
இராசவள்ளி	160	–	–	–	–	–	–	120
முருங்கைக்காய்	80	60	80	60	70–80	40	80	50

நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

இறால்	600	800	500	700	800	700	800
நண்டு	250	400	200	400	400	400	600
கணவாய்	600	600	400	600	600	700	–
பாரை	550	500	400	800	600	600	500
சுறா	500	800	500	800	1000	–	570
சீலா	300	400	300	600	500	500	450
விளை	650	500	300	600	450	–	500
முரல்	300	400	300	500	400	450	–
கும்பிளா	400	400	400	400	500	–	–
கிளாக்கன்	800	1000	300	500	600	–	–
ஓரா	400	400	300	–	450	400	400
திரளி	300	300	100	150	300	200	350
நகரை	250	300	100	250	400	200	380
சூடை	150	200	100	200	200	150	–
ஒட்டி	300	250	200	–	300	–	200
திருக்கை	150	350	200	400	400	400	150
மதனம்	150	250	–	400	300	–	300
கொய்	100	150	50	70	100	100	–
பாலை	400	250	300	400	500	400	–
வாழை	100	200	–	400	400	300	–

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BAJAJ
MOTORCYCLES

pulsar
NS150

ஆற்றல்
செயல்திறன்
சிறப்புத்தன்மை

மாற்றத்திற்கான ஆற்றல்

பல்சர் NS 150 - விலை. ரூ. 364,990/-
(விலை முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம்)

* நிபந்தனைகள் உண்டு

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவிலக்கம். PB270

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02 0773-675508, 0777-668142, 0772-981010, 011-4700600 011-4700677
info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

DPMC app ஐ google play store மற்றும்
apple app store ஊடாக
தரவிறக்கம் செய்துகொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற் போனவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பேரணி இன்று காலை 10 மணியளவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகி மாவட்ட செயலகம் வரை செல்ல உள்ளது.

காணாமற்போனவர்கள் பற்றி எந்தத் தகவல்களையும் அரசு இன்றுவரை வெளிடவில்லை, நல்லாட்சி அரசும் காணாமற் போனவர்கள் விடயத்தில் கபட நாடகம் ஆடுகின்றது, இதற்கான தீர்வை அரசு உடனடியாக வழங்கவேண்டும், காணாமற்போனவர்கள் காண்பிக்கப்பட வேண்டும், அவர்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இன்றையதினம் இந்தப் பேரணி இடம்பெற உள்ளது.

இதில் முல்லைத்தீவைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புக்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களும் இணைந்தே இந்தப் பேரணியை அமைதியான முறையில் நடத்த உள்ளதாக மாவட்டத்தை சேர்ந்த காணாமற்போன வர்களுடைய உறவினர்கள் தெரிவித்தனர். (வ-21,ரி7)

மருத்துவரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பொலிஸார் தெரிவித்தனர்.பஸ் சாரதி கைது செய்யப்பட்டார். பஸ் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டது. மேலதிக விசாரணைமேற்கொள்ளப்படுகிறதுஎன்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,10ரி)

சந்திப்பது....

மூன் நாளை இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்கிறார். அவர் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் செய்யும்போது பல இடங்களுக்கும் செல்வதாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தின்போது வடக்குமாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கவில்லை. அழைப்பு விடுக்கப்படாமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் கேளுங்கள். வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற ரீதியில் அழைப்பு விடப்படவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரினால், கட்சி ரீதியாக அழைப்பு விடுக்கப்பட்டது. ஐ.நா. செயலாளரைச் சந்திக்க வேண்டுமாயின் கூட்டமைப்புடனான சந்திப்பில் வந்து இணைந்து கொள்ளலாம் என்று தலைவர் சம்பந்தன் அழைப்புவிடுத்தார் என்று முதலமைச்சர் தெரிவித்தார். (வ-4,10ரி)

மரண அறிவித்தல்

திருமதி. மேரி ஆன் பேளி அம்புறோஸ்

தோற்றம் 29 09 1929

மறைவு 28 08 2016

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மேரி ஆன் பேளி அம்புறோஸ் 28.08.2016 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் - சவீனா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. A.A யோசப் அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி. செல்வமகள் யோசப் அவர்களின் மைத்துனியும், காலஞ்சென்ற திரு. சவரிமுத்து அம்புறோசின் அன்பு மனைவியும் அன்ரனல் யோகேஸ்வரி, கலிஸ்ரா ஜெயந்தா, பற்றீசியா நிர்மலா, கிறிஸ்ரா றஞ்சிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், நிகால் பங்கிறேசியஸ், ராசையா மகேந்திரன், கயசித் மகேந்திரன், கினன் ராஜேந்திரம் ஆகியோரின் மாமியாரும் அஜித், பியோ, பிராங்கா, கிஷானி, கிஷோ, யூட் அன்ரனி, ஷோன, டிலன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஜெய், ரயன், ஜெய்டன் ஆகியோரின் பூட்டியும் வனூஜா, மலிஷா, ரவியோசப், காலஞ்சென்ற நாளாயினி, விநோதினி ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மலர்சாலையில் 30.08.2016, 31.08.2016 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்திருக்கும் வெள்ளை மாளிகை (White House) மலர்ச்சாலையில் 01.09.2016 காலை 9.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று யாழ்கொக்குவேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்

ராசையா மகேந்திரன்: 0773217149, கயசித் மகேந்திரன்: 0776209927

இல.16, 4/3 பிறேசர் அவெனியு, தெகிவளை.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியோட்டி அழைப்பும்

பிறப்பு 20 . 02 . 1934

இறப்பு 31 . 07 . 2016

திருமதி சிவபாக்கியம் முத்தையா

கடந்த 31.07.2016 அன்று இறைபதமடைந்த எமது தாயாரின் பிரிவு கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரில் வந்து எமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோலைபுரம், வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி வித்தியா கிருஸ்ணராசா

பிறப்பு 11 . 08 . 1982

இறப்பு 27 . 08 . 2016

புத்தூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வித்தியா கிருஸ்ணராசா 27.08.2016 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கிருஸ்ணராசா(கனடா) அவர்களின் அன்பு மனைவியும் சஞ்ஜீவ் அவர்களின் அன்புத் தாயாரும் றீதா, பிரசன்னா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுமாரி, இராசகுமாரி(கனடா), பவிதகுமாரி(கனடா), ரகுபாலரமணன், நக்கீரன், சசிக்கா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கௌரிநாதன், இராசேந்திரம்(கனடா), சிவதாஸ்(கனடா), சத்தியபாமா ஆகியோரின் சகலியும் சேயோன், செந்துசா, துஸ்யந்தி, கபிலன் ஆகியோரின் பெரியதாயாரும் நிதுஷியா, அஜந், யாமினி, கீர்த்தனா, ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 900 6769/ 077 324 5222

மரண அறிவித்தல்

சிலம்பு கனகராசா

பிறப்பு 02 . 08 . 1950

இறப்பு 27 . 08 . 2016

வன்னி விளாங்குளத்தைப் பிறப்பிடமாகவும், ஆலங்குளத்தை வசிப்பிடமாகவும், தற்போது குட்செட் றோட், 146/A,ஐ வதிவிடமாகவும், வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தற்போதைய பூசகருமாகிய சிலம்பு கனகராசா 27.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிலம்பு - பார்வதி தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற நடராசா - செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் சகோதரரும், காலஞ்சென்ற வைரமுத்து, இராசையா ஆகியோரின் பெறாமகனும், கலைச்செல்வி (வதனி - கனடா), சிவலோகநாதன் (வசந்தன் - லண்டன்), தர்மசீலன் (கனடா), தயாளன் (கனடா), நளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (கனடா), இந்துஷா (கனடா), அருந்துஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவா, ராசா, துரை, ராசாத்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ப்ரதிக்ஷா, ப்ரக்ஷன், கஜானன், யதீன், யோஷனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(V/94)
(11,18)

யோகேஸ்வரி: 077 958 7873, 077 349 9249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

இரும்புக் கடை ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை. வன்னி பிரதேசத்தில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:0777861390

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை

வேலணை மேற்கு 8ஆம் வட்டா ரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல.296, உதயநகர் மேற்கில் வசித்து வந்தவரும் தற் போது புளியங்கூடல் ஊர்காவற்றுறையில் வசித்துவந்தவருமாகிய கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை நேற்று (29. 08.2016) திங்கட் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற துரையப்பா நாகம்மா தம்பதி யரின் மரு மகனும், கமலாம்பிகையின் அன்புக்கண வரும், கமலகுமாரன், விஜயகுரன், விஜய காந்தினி, காலஞ் சென்ற ஆனந்தகுமார், பரணிதரன் (ஆசிரியர், கிளி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதய ரஜனி, கவிதா, விநாயகமூர்த்தி, ரிசியந்தி ஆகி யோரின் அன்பு மாமனும், கஜல்விழி, மலர்விழி, தமிழினி, அகமலவன், அகல்விழி, ரஜீவன், கரி காலன், தமிழரசி, அபிரம்மியா, மிது சிகா, கரிசன், ரிசாந், சிந்துகா, ஆருஜன் ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30. 08.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்: குடும்பத்தினர்.
076 700 5929
மகாமாரி அம்மன் கோயில் முன்பாக,
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் ,A9 வீதியில்,பழைய வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள "நியூ சன்ஸ் செறமிக் பிறைவேற் லிமிட் டெட்" நிறுவனத்திற்கு விற்பனையாளர் கள் தேவை. (Sales Man), O/L, A/L படித்த ஆண், பெண் இரு பாலாரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0212283872
0729532598

26 ஆவது பிறந்த தினமும் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

செல்வி பத்மஜா கணேசலிங்கம்

ஆண்டுகள் ஏழு அழுதுவிட்டோம் எம் மகளே!
மீண்டும் உனது முகம் பார்ப்போமா இப்புவியில்
மீளாத்துயில் கொண்டு நெடிதுறங்கி விட்டவளே!
ஆறாத் துயர மதில் அன்னை தந்தை நாமிங்கே
பத்மஜா உனை நினைத்து பரிதவித்துநிற்கின்றோம்.

புத்தூர் கிழக்கு, புத்தூர்.
கீதஞ்ஞா பேக்கரி, நீர்வேலி
நீரஜா நினைவுகளுடன் குடும்பத்தினர்

வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் இருவர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 0772966018

கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தி யோகத்தராக கடமையாற்றும் **திருமதி விகிர்தன் சைலஜா** அவர்களின் அன்புத் தந்தை.

செல்லத்துரை பற்குணம்

அவர்கள் நேற்று முன்தினம் 28.08.2016 மரண மடைந்த செய்தி கேட்டு துயரடைந்ததுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.

31ஆம் நாள் நினைவு



அமரர் அலெக்ஸாண்டர் எட்வின்

மலர்வு
02.04.1954

உதிர்வு
29.07.2016

"என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்."

அன்னாரின் ஆன்மா நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி நாளை (2016.08.31) புதன் கிழமை காலை 6 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (திருப்பலி முடிந்ததும் வீட்டிற்கு வரவும்)

32/2 2ஆம் குறுக்கு வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

திருமதி புனிதவதி அன்னலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி அன்னலிங்கம் நேற்று (29.08.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் S.R.அன்னலிங்கத்தின் (பிரபல சுருட்டு வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் லலிதா (கொழும்பு), தற்பரன் (S.R.A.கலக்சன் உரிமையாளர் யாழ்ப்பாணம்), லாவண்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் றஞ்சித் (கொழும்பு),சுகந்தன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமியும் உமாசங்கரி, சிவசங்கரி, கரிகேஷன், விதூகேஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் கொக்குவில் மேற்கு ஆடியபாத வீதியில் உள்ள இல்லத்தில் நாளை(31.08.2016) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.
077 3305344, 021 222 5019

தகவல்:
S.R. அன்னலிங்கம்
குடும்பத்தினர்

4ஆம் ஆண்டு நினைவதனில்

செல்வி துஷாந்தி ஸ்ரீசோமாஸ்கந்தன்

(மாணவி வேம்படி மகளிர் கல்லூரி
உயர்தர பாடசாலை தரம்- 7E)

மண்மகிழ
06. 12 . 2000

கண்நெகிழ
30.08. 2012

அரிய நல் உறவிழந்து ஆறாப் பெரும்
துயர் சுமந்து ஆறவில்லை எம் நெஞ்சம்
அகத்தினிலே உமைப்பிரிந்து
ஈரவிழி நீர் சுமந்து உற்ற உம்
உறவுகளும் ஊராரும் நண்பர்களும்
எக்காலம் காண்பதென ஏக்கத்துடன்
தவிக்கின்றோம்
மாறா உம் சிரிப்பும்மறையாத
உம் முகமும்
மனமுருகும் உம் குரலிசையும்
மீண்டும் வாராதோ எம் முன்னே
நாம் வாழும் வரை எம்முன்னே நீரும் வாழ்வீர்

ஸ்ரீசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி மேற்கு.
ஸ்ரீசோமாஸ் பதிப்பகம்
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

என்றென்றும் உன் பிரிவினால் துயருறும்
அன்பான அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் சாவில் கணவனுக்குச் சந்தேகம்

புதைக்கப்பட்ட சடலம் இன்று மீள எடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 30

ஒரு வருடத்துக்கு முன்னர் உயிரிழந்தவர் கொல்லப்பட்ட தாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதனால், அவரது புதைக் கப்பட்ட சடலத்தைப் பரிசோதனை செய்வதற்காக இன்று மீளத் தோண்டி எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அச்சுவேலி தென்மூலை மயானத்தில் புதைக்கப்பட்ட சட லமே இவ்வாறு இன்று மீளவும் கிளறி எடுக்கப்படவுள்ளது. அதனை ஆய்வு செய்வதற்கான இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் நீதிவான் முன்னி லையில் சடலம் இன்று தோண்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த வழக்கு மல் லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. ஒரு வருடத் துக்கு முன்னர் பெண் ஒரு வர் காணிகளைப் பார்க்கச் சென்றிருந்த நிலையில் உயிரிழந்ததாகத் தெரிவிக் கப்பட்டது. அவர் விழுந்தத னால் உயிரிழந்ததாகப் பரி சோதனையில் தெரியவந்தி ருந்தது. அவரது சடலம் புதைக்கப்பட்டது.

அவ்வாறு உயிரிழந்த பெண் ணிக் கணவர் வெளிநாட்டில் உள்ளார். தனது மனைவி விழுந்துஉயிரிழக்கவில்லை. அடித்துக் கொல்லப்பட்ட தாக அவர் சந்தேகம் தெரி வித்துள்ளார். அவர் யாழ்ப் பாணத்துக்கு வந்து அது தொடர்பில் மல்லாகம் நீதி மன்றில் வழக்குத் தொடர்ந் துள்ளார். அதன் பிரகாரம் புதைக்கப்பட்ட சடலம் மீளத் தோண்டி எடுக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று மு.ப. 9 மணியளவில் சடலம் கிளறி எடுக்கப்பட வுள்ளதாகவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

மரண அறிவித்தல்

கலாபூஷணம் சு.சந்தியாப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

விடத்தல் தீவைப் பிறப்பிடமாகவும், எழுத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் சு.சந்தியாப் பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) நேற்று (29.08.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் விடத்தல் தீவு யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் விடத்தல்தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல் :குடும்பத்தினர் 077 2612932

மரண அறிவித்தல்

இராசையா சிவபாலசிங்கம் (சபா அண்ணா)

(திருக்குமரன் மர வேலைத்தளம்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் அரியாலை புங்கன் குளச்சந்தியை வசிப் பிடமாகவும் கொண்ட இராசையா சிவபால சிங்கம் நேற்று (29.08. 2016) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரா சையா சிவபாக்கியத்தின் அன்பு மகனும், சிசிலியாவின் (சந்திரா) அன்புக் கணவ ரும், காலஞ்சென்றவர் களான வின்சென்ற் - மதலேனம் தம்பதியரின் அன்பு மரு மக னும், தனிஸ்ரன் (டனி), தம்பித்துரை (பெறாமகன்) ஆகியோரின் பாசமிகு தந் தையும், அன்னலட்சுமி, நவமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோ தரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:

புங்கன்குளம் வீதி, அரியாலை.

குடும்பத்தினர். 076 696 9312

மரண அறிவித்தல்கள்

கந்தையா சுப்பிரமணியம்

(கிளி அண்ணா - அராலி வீதி, சங்கானை)



அராலி வீதி, சங்கானை யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (29.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அருமைமகனும்காலஞ்சென்ற மனோவதனராசா மற்றும் பிரேமாவதி, பத்மாவதி, ஸ்கந்தராசா (பிரதேச சபை ஊர்காவற்துறை), சாந்தினிதேவி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைச்சகோதரனும் ஸ்ரீசாந்தினிதேவியின் அன்புக்கணவரும் பிரசாந்தினி (சத்ய சாயி பாடசாலை மானிப்பாய்) யின் அருமைத்தந்தையும் காலஞ்சென்ற நடராசா மற்றும் புவனேஸ்வரியின் அன்புமருமகனும் சந்திரவதனி, பராராஜசிங்கம் (திருமகள் தொலைத்தொடர்பு நிலையம், சங்கானை), யோகேஸ்வரன் (உரிமையாளர் - லிங்கம் ஸ்ரோர்ஸ், சங்கானை), புஸ்பமலர், ஜீவதரன் (லிங்கம் ஸ்ரோர்ஸ் வல்லை வீதி, சங்கானை), காலஞ்சென்ற முருகானந்தன் மற்றும் தேவாமாஸ்ரர், பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, சங்கானை.

தகவல் : குடும்பத்தினர்

திருமதி

பத்மாசனி சுந்தரலிங்கம்

கரவெட்டி கிழக்கு, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம் 28.08.2016 இறைபதம் அடைந் தார்.

அன்னார் சுந்தரலிங்கம் (இளைப்பாறிய உதவி பிரதேச முகாமையாளர் -மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், மனோகரி (ஆசிரியை -நெல்லி யடி மத்திய மகா வித்தியாலயம்), சுரேந்திரன் (லண்டன்), திவாகரன் (லண்டன்), நளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரன் (ஆசிரியர்-ஆவரங்கால் நடராஜராமலிங்கவித்தியாலயம்), லாவன்யா (லண்டன்), ஜெயானி (லண்டன்), வாதவூரன் (லண்டன்), ஆகியோரின் மாமியாரும், நந்திதா, ஜதுசன், ஹம்சினி, அக்ஷரா, சேயோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு, வீரபத்திரர் கோயிலடி.

தகவல் குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

இராமசாமி மகேஸ்வரி (மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிட மாகவும் ஆவரங்காலை வசிப் பிடமாகவும் கொண்ட இராம சாமி மகேஸ்வரி நேற்றுமுன் தினம் (28.08.2016) இறை பதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரா மசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவ சம்பு-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வர்க ளான மங்கயற்கரசி, ஆனந்த நடராசா மற்றும் ரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராணிசிவகாந்தி, ஜெயகாந்திநாதன், நித்தியகாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநேசன், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற கனகசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், வானதி (லண்டன்), தீபன் (ஆஸ்திரேலியா), எழில்வேந்தன் (லண்டன்), எழில்காந்தி, எழில்வதனன் (ஆசிரியர், வன்னி விளான்குளம் அ.த.க. பாட சாலை), எழில்செல்வி (கனடா), எழில்வதனி , மயூரன் (லண்டன்), சசோபன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரன், சிவ நாதன், இராஜேஸ்வரி, சோதிநாதன், மயூரநாதன், தவ மலர் (ஸ்ரீ), சுகதா, உதயகுமார் ஆகியோரின் சிறிய தாயா ரும், புனிதவதி, நித்தியராணி, வசந்தரூபன், தயாளன், ஜெயந்தன், சுதர்சன், முகுந்தன், திலீபன் ஆகியோரின் சின்னத்தையும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், செல்லம்மா, இராசரத்தினம், ஏகாம்பரம் மற்றும் சிவசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவன் வீதி, ஆவரங் காலில் உள்ள இல்லத்தில் இன்று (30.08.2016) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு,

தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

மார்க்கண்டு சிறிபதி

மலர்வு 05 . 03 . 1962

உதிர்வு 29 . 08 . 2016

15/3 புது வீதி கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், லண்டன் Mitcham நகரை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிறிபதி நேற்று (29.08.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னபூரணம் மற்றும் ஆனந்தம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான அரியமுத்து - மருதாத்தா (நீர்கொழும்பு) தம்பதியரின் ஆசைமருமகனும் ராணியின் அன்புக்கணவரும் தனுஷா(UK), கிரிஜன் (UK) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகிர்தா, சியாமளா (ஆசிரியை யா/சென் பெனடிக்ற் வித்தியாலயம்), லதா, தயாளன் (UK), யசோ (UK), லோசன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் அழகரட்னம், இராமச்சந்திரன், ரவீந்திரன் (பகுதித்தலைவர் யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி) ,கவிதா (UK), சிவானந்தன்(UK), வத்சலா மற்றும் கோகுலன், சாவித்திரி, அன்னலட்சுமி - கந்தவேலு காலஞ்சென்ற கணேசன் மற்றும் சாவித்திரி ஆகியோரின் ஆசை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் London Mitchan இல் நடைபெறவள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

15/3, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் 021 222 0486

அம்பலப்பிள்ளை செல்வராஜா

கொல்லங்கலட்டி பெரியா வடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் பெரியமதவடி தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாக வும் கொண்ட அம்பலப்பிள்ளை செல்வராஜா நேற்று முன்தினம் 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான அம்பலப்பிள்ளை-வள ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை, செல்லமுத்து, நாக லிங்கம் மற்றும் மனோன்மணி, பாலசுப்பிரமணியம் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச் செல்வி (சுவிஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன் (ப.நோ. கூ. சங்க முகாமையாளர்) மற்றும் சுபேந்திரன் (சுவிஸ்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், பாலா (சுவிஸ்), புஸ்பகாந்தி (சுன்னாகம்), அனுசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், விதுசன் (சுவிஸ்), லக்சிகா (சுன்னாகம்), றக்சனா (சுவிஸ்), றசிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2016) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னா ரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவி னர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு, பெரிய மதவடி, சுன்னாகம்

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிர்சா - மோனிகா இணை நியூ ஹெவனில் வென்றது

நேற்று ஆரம்பமான அமெரிக்கத் தொடருக்கான பயிற்சித் தொடர்களில் ஒன்றான நியூ ஹெவன் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் மிர்சா, மோனிகா நிகல்ஸ்கு இணை சம்பியனானது.

அமெரிக்காவின் நியூ ஹெவனில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா, ருமேனியாவின் மோனிகா நிகல்ஸ்கு இணை மோதியது.

முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது மிர்சா, நிகல்ஸ்கு இணை. இரண்டாவது செற்றும் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்த அணியின் வசமாக 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது மிர்சா-மோனிகா இணை. (ம)

பாகிஸ்தான் அணிக்கு வாழ்வா? சாவா? நிலை

இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் 5 ஆட்டங்கள். முதலிரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து வெற்றி பெற்றது. எனவே இறுதி மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் மட்டுமே பாகிஸ்தானால் 3:2 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்ற முடியும். நொட்டிங்ஹாம் மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

பெல்ஜியம் கார்பந்தயத்தில் வென்றார் நிகோ ரஸ்பேர்க்

உலக கார்பந்தயத் தொடரின் 13 ஆவது சுற்றான பெல்ஜியம் கார் பந்தயத் தொடரில் ஜேர்மனியின் வீரரான நிகோ ரஸ்பேர்க் சம்பியனானார்.

நிர்ணயிக்கப்பட்ட 308 கிலோ மீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 44 நிமிடங்கள், 51 செக்கன்களில் அடைந்து முதலிடத்தைப் பிடித்தார் நிகோ ரஸ்பேர்க். இரண்டாவது இடத்தை ஆஸ்திரேலியாவின் டானியல் ரிச்சயர்டோவும், மூன்றாவது இடத்தை நடப்புச் சம்பியன் இங்கிலாந்தின் ஹமில்டனும் கைப்பற்றினர்.

முடிவடைந்த 13 சுற்றுக்களின் முடிவில் ஹமில்டன் 232 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ரஸ்பேர்க் 223 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். (ம)

தகுதிச் சுற்றிலிருந்து ரொனால்டோ விலகல்

2018ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றிலிருந்து போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ விலகினார்.

நடப்பு வருடத்தில் நடைபெற்ற யூரோக் கிண்ண கால் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ரொனால்டோ காயமடைந்தார். இந்தக் காயத்திலிருந்து இன்னும் அவர் முழுமையாக விடுபடாத நிலையிலேயே உலகக் கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றிலிருந்து விலகுவதாக அறிவித்தார். (ம)

ஹபீஸ் விலகினார் காயமே காரணமாம்

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான ஹபீஸ் காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து பாதியில் விலகினார்.

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரை 2:2 என்று சமன் செய்தது. ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து. ஏனைய மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெறவேண்டும் என்ற நெருக்கடி பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் காயம் காரணமாக ஹபீஸ் விலகியமை பாகிஸ்தானுக்கு மேலும் பின்னடைவாக அமைந்துள்ளது.

ஒருநாள் தொடரில் மட்டுமல்லாமல் தொடர்ந்து நடைபெறவுள்ள T-20 தொடரிலிருந்தும் ஹபீஸ் விலகியுள்ளார். பதில் வீரராக வேகப் பந்துவீச்சாளர் இர்பான் பெயரிடப்பட்டார். (ம)

"ஏமாற்றம்"

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது ஏமாற்றம் தருவதாகத் தெரிவித்தார் இந்திய அணியின் இளம் வீரரான லோகேஸ் ராகுல்.

குறித்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 245 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி, இலக்கை நன்றாகவே விரட்டியது. இறுதிப் பந்தில் இரு ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் இருந்தபோது டோனி ஆட்டமிழக்க, தீவுகள் ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது. லோகேஸ் ராகுல் 110 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். இந்த நிலையிலேயே குறித்த தோல்வி தொடர்பாக அவர் இவ்வாறு வெளிப்படுத்தினார்.

245 ஓட்டங்கள் என்பது இலகுவில் எட்டக்கூடிய இலக்கு அல்ல. அதை சாத்தியமாக்கும் வகையில் எமது நகர்வுகள் இருந்தன. குறிப்பாக ரோகித் சர்மா சிறந்த அடித்தளத்தை அமைத்துத் தந்தார். டோனி சராசரியை சிறப்பாகவே கட்டமைத்தார். ஆனால் இறுதிப்பந்தில் அவர் ஆட்டமிழந்தது துரதிஷ்டவசமானது. மொத்தத்தில் இந்த ஆட்டம் ஏமாற்றத்தைத் தந்துள்ளது என ராகுல் மேலும் தெரிவித்தார். (ம)

தொடரை வென்றது மே.தீவுகள் மழையிடம் தோற்றது இந்தியா

இந்தியாவுக்கு எதிரான இரண்டு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதல் ரி-20 ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றது. இதனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில்வெற்றிபெறவேண்டும் என்ற நெருக்கடி நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது. முழுவதும் துடுப்பாட்டத்துக்குச் சாதகமான ஆடுகளத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகளை 143 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்திய இந்தியா, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி 15-0 என்ற நிலையில் இருந்தபோது மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் 1:0 என்ற அடிப்படையில் தீவுகள் கிண்ணம் வென்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவகிறீன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 30

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட விலகல் முறையிலான தொடரில் எவகிறீன் அணி சம்பியனாது.

மன்னார் நானாட்டான் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் இடம் பெற்றது. எவகிறீன் அணியை எதிர்த்து கிறீன் ஸ்ரார் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட, முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது எவகிறீன் அணி. (மு-23-56)

மாகாண மட்ட குத்துச்சண்டை யாழ். மாவட்டம் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக. 30

மாகாணமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்டம் 3 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தமாக ஆறு பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

முல்லைத்தீவில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.குணசோதி 56 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், ஆர்.ரமேஸ் 75 கிலோ எடைப்பிரிவில் தங்கப் பதக்கத்தையும், ஜெ.ஜெயந்தன் 91 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும் வென்றனர். என்.செந்தில்நாதன் 60 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், பி.பிரியந் 69 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

ஆர்.நிவேதிகன் 64 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார். ஒட்டு மொத்தமாக 3 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என ஆறு பதக்கங்களுடன் யாழ். மாவட்ட அணி முதலிடத்தைப் பிடித்தது. (மு-23)

வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாண வலைப்பந்தாட்ட பயிற்றுனர்களுக்கான பயிற்சி முகாமொன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (மு-23)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 30

மாவட்ட அணிகளின் துடுப்பாட்டத் தொடர்

இலங்கை கிரிக்கெட் சபை 15 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதவுள்ளது.

விக்னேஸ்வராவின் தொடர்

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டதில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (மு-23-108)

பெண்கள் பிரிவு கபடியில் யாழ். மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 30

மாகாணமட்டக் கடற்கரை கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது. வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. யாழ். மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோயது. இதில் யாழ். மாவட்ட அணி 48:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை மன்னார் மாவட்ட அணி தனதாக்கியது. (மு-422)

கபடியில் கலக்கியது யாழ்.

யாழ்ப்பாணம், ஓக. 30

மாகாணமட்ட கடற்கரைக் கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில், யாழ். மாவட்ட அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது. வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. முதல் பாதியில் யாழ். மாவட்ட அணி 31:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியிலும் யாழின் ஆதிக்கம் மிகையான தொன்றாகவே இருந்தது. முடிவில் அந்த அணி 50:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. மூன்றாமிடத்தை மன்னார் மாவட்ட அணி தனதாக்கியது. (மு-422)

மன்னார், வவுனியா மாவட்டங்கள் கயிறிழுத்தலில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஓக. 30

மாகாணமட்டக் கயிறிழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியும் வெற்றிபெற்றன.

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதிப் போட்டிகள் இடம் பெற்றன. ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மன்னார் மாவட்ட அணியும், இரண்டாமிடத்தை யாழ். மாவட்ட அணியும், மூன்றாமிடத்தை வவுனியா மாவட்ட அணியும் பெற்றன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா மாவட்ட அணியும், இரண்டாமிடத்தை யாழ். மாவட்ட அணியும், மூன்றாமிடத்தைக் கிளிநொச்சி மாவட்ட அணியும் பெற்றன. (மு-422)

தேசியமட்ட வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தேசிய மட்டத்தில் திறந்த வலைப்பந்தாட்டத் தொடரொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடரில் பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்டக் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவி ஏ.எப். ஜெ.றூபசிங்கத்துடன், அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (மு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பெயரை பன்னாட்டில் ஓங்கி ஒலிக்கச் செய்தவர் டில்சான்

ஜனாதிபதி புகழாரம்

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இலங்கையின் பெயரை ஓங்கி ஒலிக்கச் செய்தவர் டில்சான் என புகழாரம் சூட்டியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்துடன் பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களிலிருந்து விடை பெற்றார் டில்சான். இந்த நிலையிலேயே ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தனது முகப்புத்தகத்தில் டில்சான் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை கிரிக்கெட்டின் ஆகச்சிறந்த வீரர்களில் டில்சானும் ஒருவர். இலங்கையின் பெயரை பன்னாட்டு அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்த பெருமை டில்சானையும் சேரும். அவரது ஓய்வு பெரும் இழப்பு. இலங்கை ரசிகர்கள் டில்சானின் பங்களிப்பை ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்றவாறாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முகப்புத்தகத்தில் பதிவுசெய்துள்ளார். (ம)

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தல்; செரீனாவை நெருங்குகிறார் கெர்பர்

பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் தனது புதிய தரப்படுத்தலை நேற்று வெளியிட்டது. நீண்ட காலமாக தொடர்ந்து தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்துவரும் செரீனா வில்லியம்ஸ் இம்முறையும் முதலிடம் பிடித்துள்ளார். ஆனால் அவர் தனது முதலிட அந்தஸ்தை கெர்பரிடம் பறிகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முதலிடத்தில் இருந்து வந்த செரீனாவுக்கும், இரண்டாம் இடத்திலிருந்த கெர்பருக்கும் இடையே கிட்டதட்ட 6 ஆயிரம் புள்ளிகள் வித்தியாசம் பேணப்பட்டு வந்தது. ஆனால் சமீப காலமாக செரீனா வில்லியம்ஸ் பெரும் தடுமாற்றங்களைச் சந்தித்தார். ஒலிம்பிக் தொடரிலும் முதல் சுற்றுடன் வெளியேறினார். இதனால் தரப்படுத்தலில் சறுக்கல் கண்டு கிட்டத்தட்ட 5 ஆயிரம் புள்ளிகளை அவர் இழந்துள்ளார். அதேநேரம் கெர்பரின் புள்ளிகள் ஏற்றம் பெற்றுள்ளன. தற்போது இவர்கள் இருவருக்கும் இடையே 190 புள்ளிகள் வித்தியாசமே காணப்படுகிறது.

இதன்படி செரீனா வில்லியம்ஸ் 7 ஆயிரத்து 50 புள்ளிகளையும், கெர்பர் 6 ஆயிரத்து 860 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். 5 ஆயிரத்து 830 புள்ளிகளுடன் முகுருசா மூன்றாமிடத்திலும், 5 ஆயிரத்து 705 புள்ளிகளுடன் ரட்வன்ஸ்கா நான்காமிடத்திலும், 5 ஆயிரத்து 151 புள்ளிகளுடன் கேலப் ஐந்தாமிடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வினஸ் வில்லியம்ஸ், அசரென்கா, வின்சி, கெய்ஸ், ஸ்வெட்லானா ஆகியோர் உள்ளனர். (ம)

நியூசிக்கு எதிரான டெஸ்ட்; தென்னாபிரிக்கா முன்னிலை

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பிளாசிஸின் சதம், டுமினி, அம்லா, குயின்டன் டி ஹொக், ஸ்ரீபக் குக் நால்வரினதும் அரைச்சதங்கள் கைகொடுக்க 481-4 என்ற நிலையிலிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்கா. அதிகபட்சமாக பிளாசிஸ் 112 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் வாக்நெர் 5 இலக்குகளையும், பிரேஸ்வெல், சான்நெர், சவுத்தி மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 214 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 77 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் சார்பில் ரபாடா, ஸ்ரெய்ன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பிளன்டர் இரு இலக்குகளையும், பியட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

267 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா மூன்றாம் நாளான நேற்றையநாள் நிறைவில் 105-6 என்றுள்ளது. பவுமா 25 ஓட்டங்களுடனும் பிளன்டர் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இதுவரை தென்னாபிரிக்கா 372 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (ம)

மீதமுள்ள ஆட்டங்களில் சிக்கியுள்ளது இலங்கை

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில் மீதமுள்ள இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் முதலாவதிலும், மூன்றாவதிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. தற்போது 2:1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. மூன்று ஆட்டங்களில் வெற்றி பெறும் அணி தொடரை கைப்பற்றும் என்பதால் மீதமுள்ள இரு ஆட்டங்களில் ஓர் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே எஞ்சிய இரு ஆட்டங்களிலும் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாய நிலை இலங்கைக்கு உள்ளது. (ம)

SPOKEN ENGLISH
A/L எழுதியோர் மற்றும் தொழில்புரிவோருக்கானது
இலகுவழி கற்பித்தல் முறை மூலமான திரு. ஷாம்சனின் புதிய 3மாத ஆங்கிலப்பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன.
03.09.2016 சனிக்கிழமை
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு 1.காலை 8.00 - 10.00
பிரிவு 2.காலை 10.00 - 12.00
பிரிவு 3.காலை 1.00 - 3.00
பிரிவு 4.காலை 3.00 - 5.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டும்!
பயிற்சியின் முடிவில் DIPLOMA சான்றிதழ்
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

வீட்டுப் பணிப் பெண் தேவை
கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் சிறிய யாழ் தமிழ்க் குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0776346118

ரெறாசோ சிப்ஸ் (இந்தியா) மலிவு விற்பனை
சகல நிறங்களும் அளவுகளும் 100 மூடைகளுக்கு மேல் மொத்தவிலை
077 354 1877, 021 395 0186

கிராம அலுவலர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
இடம்: சீமா உயர்கல்வி நிறுவனம்.
(புத்தூர்ச்சந்தி மீசாலை - கமநல சேவை நிலையம் Apc அருகில்)
காலம்: செப்ரெம்பர் 01, 02
மு.ப 8.30 முதல் பி.ப 3.00 வரை
"துறைசார் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்"
R. சுதா
தொடர்பு: 077 968 3090

SUPER BALL
543
2016.08.29
04 08 28 70 C
ரூ. 48,056,820/=

ஜயோதா
1292
2016.08.29
03 27 41 52 A
ரூ. 23,114,460/=

அயிலிருந்தி இலட்சாதிபதி
25
2016.08.29
16 26 39
44
8,606,920/=

Ayngharan Phone Shop Nallur
நல்லூரான் திருவிழாக்கால விசேட விலைகளில்
Nainai Phone Shop
Thirunelvely Junction, Thirunelvely
Mobile phone repairing and unlocking - special Rat
oppo smartphone - All Models
Memory card 8GB 500 (Card Reader Free) Pendrive 8GB (Kingstion) 750 OTG (CableFree)
samsung
Phone Covers - 350 (Answer Pouch)
Game CD (250 Collections)
Softwear CD, Mp3 Ayngaran Original DVD
077 2497160, 076 5239171, 077 5730308
No.768, Point Pedro Road, Nallur (மதி கலர்ஸ் அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.